# நித்தமும் உன் நினைவு

## 1

பதினைந்து வருடங்களுக்கு முந்திய அசோக் லேலெண்ட் என்ஜின் மூச்சிரைக்க, முனகி, உறுமி, செருமி மலையேறிக் கொண்டிருந்தது.

ஆரம்பத்தில் சுவாரஸ்யத்துடன் மலைப்பாதையை மேலே ஏற ஏற சின்னதாகிக் கொண்டிருந்த நிலப்பகுதியைப் பார்த்தவனுக்கு இப்போது தலை சுற்றியது. அம்பாசமுத்திரம் பஸ்நிலையத்தில் சாப்பிட்ட வடையின் எண்ணெய் காரல் நெஞ்சில் ஏறி உறுத்தியது.

பள்ளியில் சிஸ்டர் தந்த ஆலோசனையின் நினைப்பு வர, வாயில் ஒரு குட்டி மிட்டாயை அதக்கினான்... எச்சில் ஊற உள் இறங்க, தலை சுற்றலும் குமட்டலும் மட்டுப்பட்டன.

'மலைப்பாதை பயணங்களில் ஏதேனும் ஒரு மிட்டாய் அல்லது எலுமிச்சம் பழம் கைவசம் இருக்க வேண்டும்' என்று சிஸ்டர் சொன்னதை நன்றியோடு நினைத்துக் கொண்டான். இப்போதும் வெகு கீழே தெரிந்த ஊர்களை பார்க்கத் துணிவில்லை. கண்களை மூடி ஜன்னல் கம்பியில் சாய்ந்தான்.

நாற்பது பேர்களை ஏற்றக் கூடிய பேருந்து ஐம்பது நபர்களையும் அவர்களது கூடை, பெட்டி, சாக்கு மூட்டை வகையறாக்களையும் சுமக்கும் அலுப்பில் முறுமுறுத்தது.

நல்ல வேளை இப்பயணத்திற்காக எளிய சில உடைகளை தைத்தோம் என்று திருப்திபட்டுக் கொண்டாள். சாம்பலும் கருப்புமாய் பரவிய முரட்டுக்கதர்த் துணியில் தளர்வாய் தைத்த சல்வார் அது. தலைமுடியை இறுகப் பின்னி கொண்டையாய் முடிந்திருந்தாள். வெயிலுக்கு அந்த அலங்காரம் கச்சிதம்தான். கண்களை பெரிய குளிர் கண்ணாடி மறைத்திருந்தது.

"நீ எத்தனை அழகாய் நகை போட்டாலும், அது உன் கண்களின் ஒளிக்கு முன் எடுபடலை நேத்ரா..." என்ற பாராட்டு அவள் கேட்டு கேட்டு சலித்ததுதான்.

"பிறந்ததும் தன் மகளின் கண்ணழகைப் பார்த்து அவங்க அம்மா அப்பா இப்படி பொருத்தமாய் பேர் சூட்டியிருப்பாங்க. நேத்ரான்னா கண்கள் தானே?"

"கயல்விழின்னு பெயர் வைக்கிறோம்... பிறகு ஒன்னரைக் கண்ணாயிடுதே?"

"நேத்ராவுக்கு கடவுளின் கருணையும் இருக்குது. ஆக ஒன்னரை ஒன்னேமுக்கால்னு இல்லாம அவள் கண்கள் முழு அழகோடு இருக்குதுப்பா"

இத்தகு பாராட்டுக்குரிய விழிகளை பாதுகாக்க மட்டுமல்ல மறைக்கவும் தான் அவள் குளிர் கண்ணாடி போட்டிருந்தது. பஸ்ஸின் குலுக்கலில் ஆடி அசைந்து தன் கால்களை இடித்த மூட்டைகளை சற்று தள்ள முயன்றாள். பின் நிமிர்ந்து கண்டக்டர் பக்கமாய் பார்த்தவள் ஒருகணம் துணுக்குற்றாள். அவன் இவளையே பார்த்துக் கொண்டிருந்தான். முன்னால் இருந்த ஒரு பயணியிடம் ஏதோ தன்னை சுட்டிக் காட்டி பேசுவது போல பட நேத்ராவுக்கு படபடத்தது.

பஸ்ஸின் மற்ற பயணிகளை நோட்டமிட்டாள். எல்லாரும் உழைத்து உர மேறியவர்கள். காய்ந்து கரடு தட்டிய கைகால்கள்.



வியர்வையின் முடை நாற்றம் உள்ளே கசகசத்தது... இவர்களின் நடுவே ஊதினால் சாய்ந்து விடுவது போன்றகொடி உடலும், தொட்டால் கன்றி விடுமோ என்று அஞ்ச வைக்கும் வெளுப்புமான தான் தனியே பயணப்பட்டிருக்கக் கூடாது.

அதுவும் ஆண்களின் சபலங்கள், சலனங்கள் புரிந்த தான்...

நின்ற பயணிகளை ஒதுக்கி தள்ளி இவளை நோக்கி வந்தார் நடத்துனர்.

"களியூத்துக்குத்தானே டிக்கெட் எடுத்து இருக்கிறீங்க?"

"ம்ம்"...

"நம்ப பஸ் பெருஞ்சோலை வரைக்கும் போகும். ஆனா களியூத்துக்கு அத்தனை தொலைவு போகத் தேவையில்லை."

"ஓஹோ?"

"நடுவே பஸ் நிக்கும்... அங்கன இறங்கி டாக்ஸி எடுத்தா சுளுவாய் போயிடலாம். முன்னேயிருக்கிற அம்மாவும் களியூத்துக்குத்தான் போறாங்க அவங்களோட சேர்ந்தே போயிடுறீங்களா?"

"ஓ... நன்றி -" சிறு நிம்மதியுடன் புன்னகைத்தாள். நடத்துனர் குறிப்பிட்ட பெண்ணை அமர்ந்தபடியே எட்டிப் பார்க்க முயன்றாள். வியர்வை உலர்ந்து கொண்டிருந்த கருத்த முதுகுகளும் துண்டும், கோதாத தலைகளுமே தெரிந்தன.

"அவர்களிடம் பேசிட்டேன். சரின்னாங்க... அவங்க பேர் வித்யா- வக்கீலு. வேலைக்காக அப்பப்ப அம்பை. பாளையங் கோட்டுக்கு போயிட்டு வருவாங்க."

"நன்றிங்க" - நன்றி மிக மேலும் தன் புன்னகையை விரிவாக்கினாள் நேத்ரா.

ஆக நடத்துனர் தன்னையேப் பார்த்ததின் காரணம் இதுதான் - தானோ தப்பர்த்தம் செய்து பயந்து படபடத்தது...

தன் மீதே வெறுப்பாய் வந்தது.

ஆனால் இப்பயமும் முழுக்க காரணம் இல்லாமலில்லை

இப்போது நினைத்தாலும் நான்கு. ஐந்து மோதிரங்கள் மின்னும் அம் முரட்டு கைகள் தன்னைக் கூடாத இடங்களில், அழுந்தக் கிள்ளுவதாய் தோன்றுகின்றதே..

அதுவும் அவன் தன் தாயின் கணவன்!

தனக்கு அப்பா ஸ்தானத்தில் இருக்க வேண்டியவர்...

சிலிர்த்த உடலைக் குறுக்கி அமர்ந்தாள்.

"என்னாத்தா குளிருதா?.. கண்ணாடிய மூடிரவா?"

கொச்சையாய் ஆனால் கனிவுடன் விசாரித்தது ஒரு குரல்.

கேட்ட கிழவரைப் பார்த்து முறுவலித்தாள்.

"இருக்கட்டும். காற்று வர்ரது நல்லாயிருக்குது.."

"ஆமா. இல்லாங்காட்டி புகையிலை நாத்தம், வியர்வை வாடைன்னு உனக்குக் குமட்டும்.. இங்க என்ன ஜோலியாய் வந்திருக்கத்தா?"

'சட்'டென்று என்ன சொல்வதென்று தெரியவில்லை.

"தெரிஞ்சவங்க இருக்காங்க. அதான்."

"யாரு?"

கிராமங்களுக்கே உரிய குடையும் கேள்விகள்.

"இனி போய் தான் பார்க்கணும்.."

அவர் மேலும் ஏதேனும் கேட்கும் முன் கண்களை மூடி சாய்ந்து கொண்டாள்

அவர் ஏதோ முணுமுணுப்பது கேட்டது

அவளுக்குப் புரியாது

ஏன் தனக்கேப் புரியவில்லையே..



இது போன்ற முரட்டு பஸ் பயண அனுபவம் அவளுக்குப் புதியது. சொகுசு பேருந்துகளில் போயிருந்தாலும் மற்றபடி பயணங்கள் கார், விமானங்களில்தான்.

மூர்த்தி டிரைவர் வெள்ளை உடையில் காரோட்ட அவர் அருகே தான் சிறுமியாய் உட்கார்ந்து பேசியபடி போன ஞாபகமிருந்தது - பள்ளி நாட்கள் அவை.

எப்போதாவது அபூர்வமாய் அம்மா வாசலில் வந்து நிற்பார் - நேத்ரா உற்சாகமாகி கைகளை ஆட்டுவாள்.

"சித்தி. டாட்டா.. போயிட்டு வர்ரேன்."

இப்போது அந்நினைவு கசந்தது - பெற்றவளை 'சித்தி' என்றழைத்த அவலம். அந்த கறுத்த. உடல் முழுக்க முடியடர்ந்த நடியனை,

'சித்தப்பா' என்று கூப்பிட நேர்ந்த அவமானம்.

கொஞ்சம் விவரமானதும் நேத்ரா முரண்டு பிடித்தாள் -

"ஏன்ம்மா உங்களை சித்தின்னு கூப்பிடணும்? அதாவது போகட்டும் ஆனா அவரை 'சித்தப்பா'ன்னு முடியாது."

"அது அப்படித்தான்" - ஒரு அலட்சிய அதட்டலாய் சொல்லுவாள் அம்மா.

"அப்படியில்லை.." - வீம்பாய் மறுப்பாள்.

"அப்ப நீ இங்கே இருக்க முடியாதுடி நேத்ரா.."

"சரி - போறேன்.."

"வீம்பப் பாரு - எங்கேப் போவே?"

அம்மா 'பம்' மென்று சுருண்ட தன் கூந்தலைக் கோதி சிக்கெடுத்தபடி கேட்பாள். குளித்து முடியாற்றும் அம்மா ஓவியப் பெண்ணைப் போன்ற அழகிலிருப்பாள். குருத்து ஓலையின் பசும் பொன்னிறம். வசீகரமான முகமுமாய் அற்புதமான அழகுதான்.

ஆனால் நடிகைக்கான அரிதாரம் பூசிய பிறகு அவளைப் பார்க்க நேத்ராவிற்குப் பிடிக்காது

கண்களைச் சுற்றி பட்டை மையும், பொய் இமைகளும், உதடுகளில் மேலும் கலையாத கருஞ்சிவப்பு சாயமுமாய்...

ஆனால் அதுதான் ஊருக்குப் பிடித்த கோலம்.

அம்மாவின் அந்த முகம்தான் சென்னை சுவர்களின் போஸ்டர்களில் சிரிக்கும், முறைக்கும்... அழும்!

முதலில் 'அதோ அம்மா' என்று காரில் போகையில் உற்சாகமாய் கூவிய நேத்ரா, பின் வெறுப்பாய் முறைத்தாள்.

டிரைவர் மூர்த்திக்கு எல்லாம் புரியும் - ஆனால் அதிகம் பேசமாட்டார்.

'இந்தம்மா ஏன் நடிக்கணும்... ச்சே..' என்று இவள் முணங்கினால் மட்டும் "அதனாலதான பாப்பா நீ இப்படி வசதியாய் காரில போய், பெரிய பள்ளியில் படிக்க முடியுது? எங்களைப் போல பல குடும்பங்களுக்குப் படியளக்கறீங்களே.." - சமாதானப்படுத்துவார்.

அம்மா முகத்திற்கு சாயம் பூசினாலும் வார்த்தைகள் முடிந்தவரை நேர்மையாய்தான் வரும்.

ஆங்காங்கே தங்கம் மின்னும் தன் கரடிப் புருவனை -

'இவர்தாண்டா நேத்ரா உன் அப்பா' என்றதில்லையே! சற்று விவரமானதும் மகள் கேட்டதுண்டு -

"என் அப்பா யாரும்மா? எங்கே... அவர் படமாவது காட்டேம்மா?"

"அவர் இல்லை.."

உதடு துடிக்க 'செத்துப் போயிட்டாரா?' என்றிருக்கிறாள். "அவரோட எனக்குத் தொடர்பே இல்லை... ஆக நிச்சயமாய் ஏதும் சொல்றதுக்கில்லை.."

அம்மா அதற்கு மேல் பேச விரும்பவில்லை. ஆக பல நாள் துளைத்து அழுது மனம் தேறி விட்டாள் மகள்.

"தாயம் போட அந்தப்பவன் ஆட்டத்தை ஆரம்பிக்கவே முடியாது." என்பது அவளுக்குப் பிடித்த பழமொழி.



அச்சமும் தயக்கமும் வெற்றிக்கு, வாழ்வின் நிம்மதிக்கும் கூட பகை என்பது உணர்ந்து தெளிந்து நின்று விட்டாள்.

நேத்ரா வளர வளர அவளது வசீகரமும் வளர்ந்தது.

அம்மாவின் சாயலில், ஆனால் அதை விட இளமையான கொடி உடல் வாகு, மைக் குப்பியும், குடை விரிக்கும் போலி இமைகளும் இல்லாமலேயே மின்னடிலக்கும் கண்கள்.

அவற்றின் ஒளி கண்டவர்களை எல்லாம் கலங்கடித்தது.

அப்படியிருக்க சினிமா உலகம் அவளை விட்டு விடுமா?

நேத்ராவின் 15ம் வயதிலேயே நச்சரிப்பு ஆரம்பித்தது.

'பாப்பா நடிக்க வந்தா நிச்சயம் ஒரு பெரிய ரவுண்ட் வரலாம்' 'இத மாதிரி ஒடிசலும் வெளுப்பான பொண்ணுங்க இங்க இல்லாததால் தானே நாங்க வடக்கைத் தேடி ஓடறோம்.' என்று அங்கலாய்த்தார்கள்.

அம்மா அநாவசியமாய் தலையிடாமல்,

'அது அவ இஷ்டம்' என்று ஒதுங்கி நின்றாள். ஆனால் 'சித்தப்பா' மேலும் நெருக்கினார்-

"பாப்பா.. இனி நீதான் கோலிவுட்டு கனவுக் கன்னி. இந்த மூஞ்சி, உடம்பைக் கண்டு அவனவன் சாகப் போறான்.." என்று தடவினார்.

தான் இங்கிருந்து முற்றிலும் ஒதுங்கும் சமயம் வந்து விட்டது இளையவளுக்குப் புரிந்தது.

"அம்மா, நான் ஹாஸ்டல்ல சேர்ந்து படிக்கறேனே..?"

"எங்கப் போகணும்?"

"குன்னூர்? அங்க தெரிஞ்ச ரெண்டு பொண்ணுங்க ஏற்கெனவே சேர்ந்து படிக்கறாங்க."

வெளிச்சம் தன்னைவிட்டு, தன் மகள் மீது விழுவதை விரும்பாத தாயும் மறுப்புச் சொல்லவில்லை. வருபவர்கள் எல்லோரும் மகளைப் பற்றியே பேசியது ஒருவிதச் சங்கடத்தை அந்த நட்சத்திரத்திற்கு ஏற்படுத்தியிருந்தது.

பள்ளி விடுதியில் சேர்த்த நேத்ரா குறுகிய விடுமுறைகளுக்கு சென்னை வரவில்லை.

தாயிடமிருந்து தன்னை வலிய விலக்கிக் கொண்டவளுக்கு, மரணம் தன் தந்தையை தன்னிடமிருந்து பிரித்ததாய் நம்பிக் கொண்டிருந்தவளுக்கு தன் 22ம் வயதில் அந்த அதிர்ச்சி வந்தது- வக்கீல் சந்தானமூர்த்தியின் மூலமாய் -

'உங்கப்பா மூனு மாசம் முன்னே இறந்துட்டாராம்மா நேத்ரா.. உனக்கு நெல்லை மாவட்டம் கனிபூத்துங்கற மலை கிராமத்தில் ஒரு வீடும், சில சொத்துக்களும் விட்டுட்டுப் போயிருக்கார் - இதோ உயில்.. பார்க்கிறியா?"

விரல் நடுங்க அப்பத்திரத்தை வாங்கினாலும், கண்ணும் கருத்தும் அதில் பதியவில்லை!

## 2

பழுது பார்த்தல், வர்ணமடித்தல் என்று கைவைக்காத பழங்கால பொக்கிஷம் போல நின்றது அந்த டாக்ஸி! அதன் தொன்மையில் பெருமை பட்டவர் போல் நின்றிருந்த டிரைவர் பெரிதான ஒரு சிரிப்புடன் இவளுக்கு கதவைத் திறந்து விட்டார். பின் இருக்கையில் அமர்ந்திருந்த பெண்ணைப் பார்த்தாள் நேத்ரா. தன்னைப் போலவே கறுப்பு கண்ணாடி அணிந்திருந்தவளைப் பார்த்ததும் இயல்பாய் புன்னகை உதிர்த்தது.

"ஹலோ.. நான் நேத்ரா. என்னை கனிபூத்திற்கு கூட்டிட்டு போறேன்னு சொன்னதற்கு நன்றி."

"என் பேரு வித்யா.. என் வக்கீல் தொழிலுக்காக அப்பப்ப அங்கு போக நேரும்."

"ம்ம்ம்.. கண்டக்டர் சொன்னார்."



பயணக்களைப்பினால் மங்கியிருந்தாலும் வித்யாவும் சிவப்பு தான். பருத்த கன்னங்கள் அவற்றில் பொடி ரோஜா மொட்டுக்களாய் சில பருக்கள்.. அவை விட்டு போன சில வடுக்கள். அகன்ட வாய். அது ஓயாத பேச்சு.

"இங்கேயிருந்து கனிபூத்துக்கு எவ்வளவுதூரம்?"

நேத்ரா விசாரித்தாள்.

"ரோடு மோசம்ங்கறதால போய் சேர அரை மணி நேரம் ஆகும். அங்க நீங்க யார் வீட்டுக்கு..?" வித்யா இழுத்தாள்.

வலிய வந்து உதவுபவளிடம் மறைக்க மனமில்லை. ஆண்கள் மீதிருந்த வெறுப்பால் தனியே டாக்ஸியில் பயணப்பட நேத்ரா அஞ்சியிருப்பாள். உலகம் முழுக்க பயணத்திருந்தாலும் விழா நிர்வாகிகள் அவளை அழைத்துப் போக விமான நிலையத்திற்கே வந்து விடுவார்கள். தனிமையும், கிராமசூழலும் இங்கு அவளை கலவரப்படுத்தியிருந்தன. ஆக உதவ முன்வந்த வித்யாவிடம் ஓரளவு சொல்லத்தான் வேண்டும்.

"எங்கப்பா இங்கேயிருந்தாராம்."

"இருந்தாரன்னா?.."

"இப்ப இல்ல திரு. கனகதுரை.. மூனு மாதங்களுக்கு முன்னே இறந்துட்டார்."

வித்யாவின் முகம் நிறைய வியப்பு. வியப்பாய் விரிந்த விழிகள் நேத்ராவை மறுபடியும் மேலும் கீழுமாய் அளந்தன.

ஓரளவு உலகம் தெரிந்த பெண் என்பதால் நேத்ராவின் முரட்டு கதர் ஆடை, முடியலங்காரத்தை மீறி இவள் பேரழகி சாமான்ய பெண் அல்ல என்பது வித்யாவிற்கு புரிந்துவிட்டது. இங்கு எளிய வாழ்வு வாழ்ந்த கனகதுரையின் மகளா இவள் என்ற ஆச்சரியம்.

"உங்களை இதுவரை இங்கே பார்த்ததே இல்லையே?"

வருத்தமாய் தலையசைத்தாள் நேத்ரா.

'என் வாழ்வு சிக்கலானது... எனக்கே என் அப்பா உயிரோடு இருப்பது தெரியாது' என்பதை சொல்லவா, வேண்டாமா என்று அலைந்தாள். இப்போது தான் அறிமுகமான பெண்ணிடம் அத்தனையையும் கொட்டி கவிழ்க்க வேண்டாம் என்ற ஜாக்கிரதை உணர்வு.

இவளது தயக்கம் புரிந்த நிமிசம் வித்யாவும் தலை ஆட்டினாள்.

"இப்ப எங்கயிருந்து வந்திருக்கீங்க?"

"சென்னையிலிருந்து..."

"அப்ப உங்க படிப்பெல்லாம்?"

"பெரும்பாலும் விடுதியிலேயே தங்கி படிச்சேன்."

"உங்க அம்மா?.."

இப்போது ஆழம் போல தன் நாளவை உள்ளே இழுத்தாள் நேத்ரா.

"அம்மா... அம்மா சென்னையிலே யிருக்காங்க."

"அம்மாவும் அப்பாவும் அப்ப முன்னமே பிரிஞ்சுட்டாங்க போல..."

ஓரளவு சரியாகவே அனுமானித்து விட்டாள் வித்யா.

"பெண்பிள்ளைங்க தாயோடு இருப்பது தான் சரி... ஆனால் நீங்க உங்க அப்பாவை பார்க்க முன்னமே வந்திருக்கலாம்."

"ம்ம்ம்... ஆனா எனக்கு சமீபமாய்த்தான் அப்பா பற்றி தெரியவந்தது."

ஒரே ஊரில் அதுவும் மிகச் சிறிய ஊர் என்பதால் தொடர்ந்து வைத்ததை மறைக்க முடியாது என்றபடி விஷயங்களைச் சொல்லிவிட்டாள்.

"அடடே... கனகதுரை சார் நல்ல மனுஷர்... ஆனால்... வித்யா [illegible]ம் என்றே பேச்சை இடையே நறுக்கி நிறுத்த இவளுக்கு [illegible]ந்தது.

"என்ன?"



"உங்களிடம் சொல்லவா வேண்டாமா என்று தெரியல... நீங்க கனியூத்திலே தங்கப் போறிங்களா?"

"ஆமா... அப்பா வீடு அங்கே இருக்குது - அதை என் பேருக்கு எழுதியிருக்காங்க."

தான் தன் புது சொத்தை பார்க்கும் பேராசையோடு வந்ததாய் நினைத்து விடுவாளோ என்ற சங்கடமும் உள்ளே குடைய.

"அப்பாவைப் பார்க்க, பழக கொடுத்து வைக்கலை... அவர் இத்தனை வருஷங்களாய் இருந்த வீட்டை, ஊரையேனும் பார்க்கலாம்னு வந்தேன்."

"ஆக பார்த்ததும் உடனே போயிடுவீங்களா?"

"இல்ல... வீடு இருக்கிறதால ஒரு வாரம், பத்து நாள் இங்கே தங்கலாம்னு ஒரு எண்ணம்."

வித்யா கண்களில் புதிதாய் ஒரு கலக்கம்.

"ஆனால் நீங்க அங்கேயிருக்க... தங்க சாத்தியமில்லையே"

"ஏன்?"

ஒருவித சங்கடத்துடன் விழித்தாள் வித்யா.

"எங்க வீட்ல தங்குங்கங்க எத்தனை நாள்ன்னாலும் இருங்க."

"நன்றி - ஆனா அப்பா வீட்ல தங்கினால்... அவர் புழங்கின அறையில் இருந்து அவருடைய புகைப்படங்களை பார்த்து, புத்தகங்களை எல்லாம் வாசித்து..."

"அங்கே வெறுமே படமும் புத்தகமும் இருந்தால் பரவாயில்லை நான் தடை சொல்ல மாட்டேன்."

"பின்னே?"

ஒரு விதமான அசௌகர்யமான ஆர்வம் மிக கேட்டாள்.

"வேறென்ன வித்யா? - விஷயத்தை சொல்லுங்க..."

"அந்த வீட்ல ஒரு ஆள் இருக்கார்..."

"ம்ம் ... கேள்விப்பட்டேன் யாரோ நித்யன்னு..."

"அப்ப தெரிஞ்சும் வந்திருக்கீங்களா?"

வித்யாவின் தொனியில் துளி கோபம் கலந்திருந்ததாய் பட்டது.

"அப்பாவின் சொத்து பாதி எனக்கும் மீதி அவருக்கும் அதாவது நித்யனுக்கும்னு உயில் சொன்னது. ஆனால் நித்யன் யார் என்னனு எதும் தெரியாது."

"அதான் துணிஞ்சு வந்திட்டீங்க."

வித்யாவின் குரல் வெகுவாய் தணிந்திருந்தது - ரகசியமும் ஆத்திரமுமான தொனி.

"என்ன சொல்றீங்கன்னு எனக்குப் புரியலை."

கெஞ்சலாய் விளக்கம் கேட்டாள் நேத்ரா. இரு பெண்களும் கண்களை மூடிய குளிர் கண்ணாடிகளை அகற்றி விட்டனர். நேத்ராவின் காந்த விழிகளை ஒருவித பிரமிப்புடன் பார்த்தவள்,

"நீங்க ரொம்ப அழகாயிருக்கீங்க..."

தன்னை மறந்து பாராட்டினாள்.

"நன்றி... நித்யனைப் பத்தி...?"

"இவ்வளவு அழகான பெண்ணிடம் அது பற்றி, அவரைப் பற்றி சொல்லாமல் இருக்கக் கூடாது - அது பாவமும் கூட..." வித்யா சற்றி வளைத்தாலும் தன் மூக்கைத்தொடுவதற்காக பொறுமையாய் காத்திருந்தாள் நேத்ரா. ஆனால் நெஞ்சம் சற்று வேகமாகவே வெம்பித் துடித்தது.

"நித்யன்... ஆள் சரியில்லை. முக்கியமாய் பெண்கள் விஷயத்தில் ஆபத்தான ஆள்."

பெண்களின் குரல் மிகத் தணிந்திருந்தது. டாக்ஸியின் பழைய எஞ்சின் இரைந்தாலும் ஓட்டுநரின் காதில் தங்கள் பேச்சு விழக் கூடாது என்றே இருவரும் நினைத்தனர்.

"அதுவும் ஒரே வீட்டில் அவரோடு தங்குறது... நாகப்பாம்புடன் அதன் புற்றில் குடித்தனம் பண்றது மாதிரி."

ஒருவித இகழ்ச்சியுடன் சிரித்தாள் வித்யா.

"அது... ரெண்டு போர்ஷன் தானே?"



"அதென்ன பிளாட்டா தனித் தனியே இருக்க - நீங்கள் கிராமங்களைப் பார்த்தது இல்லைன்னு நினைக்கிறேன்."

"ஆமாம்... சரிதான்" மெல்ல ஆமோதித்தாள் நேத்ரா.

"இது சாதாரண கிராமத்து வீடு..." சற்று யோசித்து பின் தொடர்ந்தாள் "அந்த வீட்டின் இடது பக்கத்தில் வீட்டிற்குள் போக தனிக் கதவு ஒன்று உண்டு. ஒரு வேளை அந்த இடது பக்கத்து இரண்டு அறைகளை உங்களுக்காக ஒழித்து விடுவாராயிருக்கும். நீங்க வர்றது நித்யனுக்குத் தெரியுமா?"

"ம்ம்... என் வக்கீல் மூலம் தெரிந்திருக்கும்"

"அப்ப அவர் வந்திருக்கலாம்ல..? ஊர் தெரியாத பெண் தனியே வருதுன்னு வந்து அழைச்சிட்டுப் போயிருக்கலாம்? திமிரு... தன்னைப் பற்றி என்னவொரு நினைப்புங்கிறீங்க?"

"இல்ல... அவருக்கு நான் எப்ப வரேன்றது பத்தி எந்த தகவலும் சொல்லலை. இந்த வாரம்னு மட்டும்தான் வக்கீல் சொல்லியிருப்பாரு."

"ஏன் தினமும் வந்து பார்க்கறது..? கதவை மூடிட்டு வீட்டில் அடைஞ்சேதான் கிடக்கிறார் ஏதோ இவர் தான் கலைத்தாய்க்கு சேவை செய்யறாப்ல."

உதடுகளை சுழித்தாள் வித்யா.

"அவர் கலைஞரா?"

"கர்வி... அது மட்டும் எல்லாருக்கும் தெரியும்."

"அப்புறம் பொம்பளை விஷயத்தில் ஆள் சரியில்லைன்னு சொன்னீங்க."

"அதுவும் தான்" கடுகடுத்தாள் வித்யா.

"அப்படி கர்வமாயிருக்கறவங்க பெண்கள் மேல விழுந்து வழிவாங்களா?"

நேத்ராவின் நியாயமான சந்தேகம் வித்யாவை சீண்டிவிட்டது.

"தெரியாம பேசறேன்னு நினைக்கிறீங்களா?"

"அப்படியில்லை..." இழுத்தாள்.

"இனியும் மூடு மந்திரமாப் பேசறது போதாது. உங்களுக்கும் சித்ராவுக்கு நேர்ந்த கதி வந்துடக் கூடாதுன்கிற ஆற்றாமையில் சொல்றேன்."

மறுபடியும் வித்யா சுற்றி வளைக்க ஆரம்பிக்க, நேத்ரா பொறுமையுடன் காத்திருந்தாள். ஆனால் பேச்சு வேறுவிதமாய் வளர அதிகம் பொறுக்கக்கூடாமல்,

"யார் அது சித்ரா?" என்று கேட்டாள்.

"17 அல்லது 18 வயசிருக்கும்.. அப்படின்னா அப்போது அவளுக்கு 14 அல்லது 15 தான் இருந்திருக்கும்..."

"எப்ப?"

"அதாவது மூன்று வருஷங்களுக்கு முன்னே அவ கர்ப்பம் ஆனாளே அப்ப!"

நேத்ராவிற்கு திக்கென்றிருந்தது.

"அந்த சித்ரா யாரு?"

"இந்தப் பக்கங்களில் மலைஜாதியினர் உண்டு. மலைச் சரிவின் காட்டுப் பகுதிகளில் வாழ்வாங்க. அதிகமாய் நம்மோட வந்துப் புழங்கறதில்லை. அந்தக் கூட்டத்தைச் சேர்ந்த பொண்ணு இவ..."

"சரி... இப்ப எனக்கும் அந்த சித்ராவிற்கும் என்ன சம்பந்தம்?"

"அவ கையில் இப்ப 'கொழு கொழு'ன்னு ஒன்னரை வயசுக் குழந்தை இருக்குது.. அதன் தகப்பன்.. நித்யன்தான்."

"ஓ..?" ஆரம்ப அதிர்ச்சியை விழுங்கியதும் தொடர்ந்து கேட்டாள்.

"அப்ப ஏன் அவங்க கல்யாணம் செய்துக்கலை?"

"காரியம் முடிஞ்சதும் அதெல்லாம் ஏன்னு நித்யன் கழண்டுட்டார். ஆனாலும் பரிதாபம் என்னன்னா அந்த சித்ராப் பொண்ணு. கையில குழந்தையோடு இன்னும் நித்யன் காலை



நாய்க்குட்டியாட்டம் சுற்றி சுற்றி வர்ரா... ம்ப்ச்... நீங்க ஜாக்கிரதையாய் இருக்கணும்ங்கறதுக்காய் தான் இதையெல்லாம் சொல்றேன்.."

நேத்ராவிற்கு கூசியது...

## 3

சூடான காப்பியைக் கொஞ்சம் கொஞ்சமாய் உள்ளிறக்கினாள் நேத்ரா - அதில் சற்றுக் கூடுதல் கசப்பு... அவளுக்கு உள்ளேயும் ஒரு விதமான கசந்த உணர்வுகள் கசிந்து பரவியது போலொரு உணர்வு.

தன் வீட்டிற்கு அழைத்துப் போன வித்யா, விருந்தாளியைத் தன் தாய்க்கு அறிமுகம் செய்து வைக்க, அந்த அம்மாள் ஒரு விதமான ரப்பர் புன்னகையுடன் கைகுவித்தாள். உள்ளே போய் ஒரு சலவைத் துண்டுடன் மீண்ட வித்யா, உபசரித்தாள்.

"முகம் கழுவிட்டு வாங்க.. காபி குடிச்சுட்டுக் கிளம்பலாம்."

நேத்ரா நன்றியுடன் அங்கிருந்த சிறு குளிப்பறைக்குள் புகுந்தாள். 'ஜில்'லென்ற நீர் புத்துணர்வு தந்தது. முகம் துடைத்து தன் கைப்பையிலிருந்த பவுடரை முகத்தில் இதமாய் ஒற்றியவள், கலைந்த கூந்தலையும் சீராக்கினாள். கூடவே அவள் காதில் மந்திர உச்சாடனம் போல மறு அறையில் இரு பெண்களும் தாழ்ந்த குரலில் பேசிக் கொள்வது கேட்டது.

அது தன்னைப் பற்றியும், சிங்கத்தின் குகைக்குள் சிறுமுயல் போவது போல தான் நித்யனோடு ஒரே வீட்டில் தங்கப் போவதையும் பற்றியே என்பதை அனுமானிக்க முடிந்தது.

மீண்டும் முன்னறைக்கு வந்தவளை காபியின் மணம் ரசிக்க செய்தது. நுரை ததும்பும் அட்டாணத்தை நீட்டிய வித்யாவின் தாயின் முகத்தை ஒரு நன்றி முறுவலுடன் ஏறிட்டவள் சற்று திகைத்தாள்-

காரணம் - அம்முகத்தில் தெரிந்த வேறு பாவனை..!

"அடப்பாவி பெண்ணே... போயும் போயும் அவனோடயா தங்கப் போற பத்திரம்டி" என்ற ஒரு விதமான பரிதவிப்பை, எச்சரிப்பையே அவள் அம்முகத்தில் எதிர்பார்த்திருந்தாள். ஆனால் அங்கிருந்த மெல்லிய கோபமும் குரோதமும் அவளைக் குழப்பின.

"சூடு சரியாய் இருக்கா?"

"காபி நல்லாயிருக்குதுங்க..."

"இங்க எல்லாம் ஆட்டுப்பால்தான்... வித்யா கீழே போறப்ப 'ஆவின்' பாக்கெட்டுகளை வாங்கி வந்துருவா - பதனமாய் வச்சுப் பயன்படுத்துவோம்."

"ஓஹோ? ஆனா எனக்குப் பாலில்லாத காபி, டீ கூட பிடிக்கும்."

"ஒன்னு, ரெண்டு நாள்னால் பரவாயில்லை - எத்தனை நாள் கடுங்காபி குடிச்சுட்டு கிடக்க முடியும்?"

தான் இங்கு எத்தனை நாட்கள் தங்குவதாய் உத்தேசம் என்பதற்கான தோட்டக் கேள்வி இது எனப் புரிந்தது.

ஆக பதிலுக்கு வெறுமே புன்னகைத்தாள்.

"நன்றிங்க... நான் கிளம்பறேன். டாக்ஸி டிரைவர் வேறு காத்திருக்கிறார்."

"மாணிக்கம் இருப்பான்... அவனுக்கு காபி தந்திருக்கேன்ல? வாசமாய் இப்படி காபி வேறெங்கே கிடைக்கும்? எங்களுக்கும் மாணிக்கத்தோட டாக்ஸியை விட்டால் வேறு கதியில்லை..."

"வித்யா வலிய வந்து என்னை இப்படி அழைச்சுட்டு வரலைன்னால் நானும் திண்டாடியிருப்பேன்... இம்மாதிரி தனிமையான பகுதியில் தனியே டாக்ஸி பயணப்பட யோசிச்சிருப்பேன்..."

"மாணிக்கம் நல்லவம்மா... ஆனால் இப்படி நித்யனோட தங்குறதுதான்."



"அது எங்கப்பா வீடு... அவரைப் பார்க்க, பழகத்தான் எனக்குக் கொடுத்து வைக்கலை... அவர் வீட்டிலே தங்கி, அப்பாவைத் தெரிஞ்சவங்களோடு பேசி அவரை அறிய ஆசை... உங்களுக்கு... அப்பாவைத் தெரியுமா?"

இப்படி ஒரு அந்நிய பெண்ணிடம் தன்னைப் பெற்றவரைப் பற்றிக் கேட்க கூச்சமாய் தான் இருந்தது.

அந்நிலை கண்டு இரங்கிய அப்பெண்மணியின் முகமும் சற்று இளகியது.

"தெரியும். ஆனா சார் அதிகமாய் வெளியே வரதில்லை... நாங்க சினிமா, கடை, கண்ணின்னு பெரிய ஊரைத் தேடி கிளம்புறது போல அவர் காட்டுக்குள்ளே தான் காமராவோடு புகுந்திடுவார்..."

"பார்க்க எப்படி... எப்படி இருப்பார்?"

"அடடே ... அப்பாவுடைய புகைப்படம் கூட உங்கிட்ட இல்லையாம்மா?"

வேதனையுடன் தலையசைத்தாள் இளையவள்.

அவளுக்குத் தெரிந்ததெல்லாம் அம்மா 'சித்தப்பா' என்று தன்னை அழைக்கப் பண்ணின முரட்டு ஆசாமிதான்.

அம்மாவிடம் தன்னைப் பெற்றவரின் படத்தையேனும் காட்டச் சொல்லி பிறகு கேட்ட போது,

'பழசை எல்லாம் மறக்க வேண்டி அதையும் அழிச்சுட்டேன்டீ' என்று விட்டாள். மகளின் சாம்பிய முகம் கண்டு இரங்கி,

"உனக்கு அவரைப் போல 'வெடவெட'ங்கற உயரம்... கண்ணும் சுருண்ட தலைமயிரும் அவருதைப் போல" என்றிருந்தாள்.

நேத்ராவையே பார்த்த வித்யாவின் தாய்,

"நீ பார்க்க சாரைப் போலில்லையே... ஆனாலும் தெரிஞ்ச ஜாடைதான்... ஏதோ சினிமா ஸ்டார் கணக்காய்..." இழுக்க, நேத்ரா அவசரமாய் விடை பெற்றுக் கிளம்பினாள்.

பசும்பால் காபி குடித்த தெம்பில் டிரைவர் உற்சாகமாய் சிரித்தார்.

"இன்னும் ரொம்ப தூரம் போகணுமா?" என்ற கேள்வியுடன் இவள் ஒடுங்கி அமர்ந்தாள்.

"இல்லம்மா - கால் மணி நேரமாவும்... ரோடு மோசங்கம்மா - நித்யனய்யா வீடுதானுங்களே?"

"ம்ம்... அங்கே அடிக்கடி போவீங்களா?"

"அவங்க எது டவுனு பக்கம்? காட்டுப் பக்கம்தான் ஜாஸ்தி போவாங்க-"

அதுக்கு ஒரு பெரிய வேனு உண்டுல்ல... அதென்ன பேரு... காரவனா?"

உயிலில் அப்பாவின் வாகனம் பற்றியும் குறிப்பிடப் பட்டிருந்தது அவளுக்கு அப்போது நினைவு வந்தது. கேரவன் என்றால் உறங்க, சமைக்க, ஏன் குளிக்கக் கூட வசதியுடனான ஒரு வாகனம். இதில் போய் காட்டில் காமரா சகிதம் நாட்கணக்கில் தங்கும் தகப்பனுடன் தன் தாய் இணைந்து மகிழ்வாய் வாழ்வதை அவளால் கற்பனை செய்யவும் முடியவில்லை.

ஏனெனில் அம்மா மிகவும் சுகவாசி. குளிக்கும் போது முதுகு தேய்க்க, பின் உடல் துவட்ட ஒரு பெண் கூடவே போக வேணும்!

வடிவாய் நகர் வெட்ட, காது குடையும் பஞ்சை எடுத்து நீட்ட, இரவில் பாதத்தில் எண்ணை நீவி, கால் அமுக்கி விட என்று அங்கே ரகவாரியாய் வேலையாட்கள்.

ஏதோ பரிமாறுவதை கணங்காமல் தானே வாயில் எடுத்துப் போட்டுக் கொள்வாள் அம்மா - சமர்த்தாய்!

டிரைவரிடம் மேலும் விசாரித்தாள் -

"இங்கே மின்சார வசதி உண்டா?"

"முன்னே கிடையாதும்மா... இப்ப நித்யனய்யா வந்துதான் முடிப் போட்டு அதற்கெல்லாம் ஏற்பாடு செய்தார்."



"இப்பன்னா... அவர் வந்து எத்தனை வருஷமாச்சு?"

"அதிருக்கும் மூணு, நாலு வருஷம்."

"அவர் ஏன் அப்பாவோட தங்குனார்?"

"யாரு அப்பா?"

"அதாவது என் அப்பா கனகதுரையோடு..."

"ஓஹோ... சார் உங்க அப்பாரா... உங்களை இங்கப் பார்த்ததே இல்லையா...?

நேத்ரா ஒரு ஆயாசத்துடன் ஓரளவு விவரங்களைத் தந்தாள் - இதே போல் எத்தனை பேரிடம் விளக்க நேருமோ? "நினைச்சேம்மா... நீங்க யாரு ஜாடையிலேயோ இருக்கறதாய்... கனகதுரைய்யா ஜாடையோன்னு... அது போலவும் தெரியலை..."

நேத்ரா அவரை அதிகம் யோசிக்கவிடாமல் பேச்சை மாற்றினாள். அம்மாவினுடையது பல வருடங்களில் விளம்பரங்களில் மக்களைப் பார்த்து சிரித்து, அழுது, சிணுங்கிய முகம். ஆக அதே சாயலில் இருக்கும் தன்னைப் பார்க்கும் பலருக்கு நெருடுகிறது!

நேத்ரா வெறுத்த இப்பிரபல்யத்தை அம்மா ரசித்தாள் நேசித்தாள். சதா கறுப்பு கண்ணாடிகள் ஏற்றப்பட்ட காரில் பயணிப்பவள், ஜனத்திரளின் நடுவே கார் கதவைத் திறந்து, மின்னலாய் மக்களிடமிருந்து தெறிக்கும் மக்களின் ஆர்வ, ஆனந்த கூச்சலை,

'போன படத்துல சூப்பர் ஆக்ட்டுங்க...' என்ற உற்சாக உளறலை மிக ரசிப்பாள். நேத்ராவிற்கு தாயின் இக்குழந்தைத் தனம் பிடிக்கும் என்றாலும் மக்களின் வெறித்தனமான சினிமா ரசனையை கண்டு பரிதாபம்தான்.

'நடிப்புத் தொழிலுள்ள ஒரு பெண்' என்றளவில் ஏன் மக்கள் இயல்பாக இல்லை என்ற சலிப்பு

ஆனால் ஒரு வகையில் தாயின் பகட்டு வாழ்க்கை மகளுக்கு உதவியது. தாய் ஒப்பனை செய்து கொள்ளும் போது

அடுத்து அவள் அணிய வேண்டிய புடவை, நகைகளை ஆராய்ந்தபடி சில சமயம் அருகே அமர்ந்திருப்பாள் மகள்.

ஒரு அந்நிய ஆணின் கை தாயின் முகம், தேகம் எங்கும் சுவாதீனமாக படர்வதைக் காண சகியாமல் கூட அவள் கவனம் வேறு பக்கம் திரும்பியிருக்கலாம்.

அப்படி கவனித்த நகைகள் அவளை ஈர்த்தன. ராஜஸ்தான், மைசூர், லடசேரி, கேரளா என்று வெவ்வேறு ஊர்களின் செய்திறனில் உருவான நகைகள் அவை. சினிமாவிற்கு ஏற்ற மாதிரி பெரிதும், அதீத ஜ்வலிப்பும் கொண்ட அவைகளை தன் பாணியில் சற்று மாற்றி வரைய ஆரம்பித்தாள்.

அப்படி ஆரம்பமானதுதான் நகைகளை வடிவமைக்கும் ஆர்வம். 'ஹிக்கின் பாத்தம்ஸ்ஸில்' சொல்லி, நகைகள் பற்றிய பிரபல புத்தகங்களை வரவழைத்து, பின் அதற்கான 'வெப்-ஸைட்'டிலும் புகுந்து வியந்தாள்.

நகைகளை வடிவமைக்கும் படிப்பையே கல்லூரியில் படித்தவளின் ஆர்வமிகு கற்பனை. அதில் பிறந்த சில நகைகள் சில மும்பை நகர வியாபாரிகளின் புருவங்களையே மேலேற்றின.

வட இந்திய நட்சத்திரங்களும், மாடல்களும் இவளது நகைகளை போட்டுக் கொண்டு உலா வர நேத்ராவின் உற்சாகம் எகிறியது.

கற்பனையை ஊக்கி, விதவிதமாய் தங்கத்தை பிளாட்டினத்தை இழைத்தாள் - அவற்றில் முத்தும் வைரமுமாய் பதித்து மின்ன விட்டாள்.

நகை அலங்கார அணி வகுப்பில் இவளது படைப்புகள் அதிகக் கைத்தட்டல்களை அள்ளிச் சேர்த்தன. அதைக் கவனித்த நிர்வாகி இவள் படைப்புகளுக்கு தனி வெளிச்சம் போட்டார்.

ஒரு முறை நகைகளுடன் பூனை வலம் வர வேண்டிய ஒரு மும்பை மாடல் வர முடியாமல் போக நேத்ராவை மேடையும் ஏற்றி விட்டனர்.



இவள் மறுப்புகளை தன் கெஞ்சலால் முறியடித்தார்.

'தெரியும்மா. உனக்கு புகழ். பாராட்டுன்னால் ஆகாதுன்றது தெரியும் ஆனால் ஷியாமா இப்படி கடைசி நிமிஷத்தில் காலை வாரி விடுவான்றது.. யாருக்குத் தெரியும்?'

"பமீலா. ரஜ்வின்னு இங்கேயே அழகான மாடல்ஸ் உண்டே ளர்..?"

"அவங்க எல்லாரும் நாம எப்ப கூப்பிடுவோம்னு காலாட்டிட்டு காத்திருக்கறாங்களா?.. சொல்லு.. அவங்களுக்கு ஏகப்பட்ட வேலைகள்.. ப்ளீஸ்ம்மா.- ஏழே மாடல்ஸ். அதில் ஒருத்தர் குறைஞ்சாலும் நிகழ்ச்சி எடுபடாது... என் நடை பெறாதுன்னே வை.."

ஆக நேத்ராவும் மேடையேறினாள்.

அவளுக்கு இயல்பாகவே நளினம் வாய்த்திருந்தாலும் பற்பல அலங்கார அணிவகுப்புகளை தொழில் முறையில் கூர்ந்து கவனித்திருந்ததாலும் இசைக்கேற்ப நடப்பது, நின்று சுழல்வதும் புன்னகைப்பதும் சிரமமாயில்லை.

அதற்கு பின் தென்னிந்திய மேடைகளில் அவள் ஏறவில்லை என்றாலும் அந்நிகழ்ச்சியின் புகைப்படங்கள் வெளிநாட்டு பத்திரிகைகளில் பிரசுரமாக இவளை அங்கே வருந்தி அழைத்தார்கள்.

'நீங்கள் உருவாக்கும் நகைகளை நீங்களே மாடலாயிருந்து எடுத்துக்காட்டுவது இங்கே அசாத்திய வரவேற்பைப் பெறும் மிஸ். நேத்ரா - நிறைய விற்கும்னும் எதிர்பார்க்கிறோம்.'

அக வெனிஸ், பாரிஸ், ஜெர்மனியில் நடந்த கண்காட்சிகளில் கலந்து கொண்டாள். அவள் படங்கள் அலட்டலான உலகப் பத்திரிகைகளில் இடம் பெற்றன. ஆனால் புகழ் போதை அவள் தலைக்கேறவில்லை.

சென்னையில் ஒரு சாதாரண பெண்ணாக சுற்றி வரவே விரும்பினாள் - தன் தாயின் புகழ் சாயலும் தன்னில் படாமல்

ஒருவித வெண்டையருக்கு பாச அரவணைப்பு வேண்டியிருந்தது. மனதின் மையத்தை அந்த ஏக்கம் குடைந்து சரித்தது.

அதை ஆற்றத்தான் தகப்பன் வாழ்ந்த ஊருக்கு, வசித்த வீட்டிற்குக் கிளம்பியது.. ஒரு மலை கிராமத்தில் வாழ்க்கை எப்படியிருக்கும் என்று யோசிக்கவுமில்லை.

"இறங்குங்கம்மா.. வீடு வந்தாச்சு."

டிரைவர் குரல் தர, தன் நினைவுக் கூட்டிலிருந்து மீண்டவள் எதிரே மரங்களிடையே சாதுவாய் நின்ற அவ்வீட்டை ஆர்வத்துடன் பார்த்தாள்.

## 4

வெள்ளையடிக்கப்பட்டு முத்தாட்டம் நடுத்தர அளவில் இருந்தது வீடு. ரத்தின முகப்பு வைத்தது போல கேரள ஓடு வேய்ந்த கூரை. இடதுபுற அறைக்குள் நுழைந்தவள் ஒரு வித பாசப் பெருக்குடன் சுவர்களை தரையை ஆராய்ந்தாள்.

வீடு குப்பையாய் இல்லாவிட்டாலும் சுத்தமாகவும் தோணவில்லை. சற்று முன்னரே பெருக்கி விட்டது போல ஒரு புழுதி நெடி மிதந்து கொண்டிருந்தது. சின்ன ஜன்னல்களின் வழியே தயக்கமாய் காற்றும் வெளிச்சமும் எட்டிப் பார்த்தன.

மிருகக் காட்சி சாலைக்கு முதன் முதலாய் வந்த சிறுமி போல இவள் மலங்க விழிப்பதை பார்த்த ஓட்டுனர் மாணிக்கம், சுவர் ஓரமாயிருந்த கட்டிலை எடுத்துப் போட்டார். இவள் பெட்டிகளை இறக்கியவர்,

"போர்வை, தலையணை இல்லையாம்மா?" விசாரித்தார்.

வீரா சொன்னது உண்மைதான்.



இந்த நித்யன் திமிர் பிடித்த கர்விதான்! தன்னை வரவேற்க ஊர் கோடிக்கு தினம் தேடி அலைய வேண்டாம். ஆனால் வீட்டிற்கு வந்தவளை 'வா' என்றழைத்தால் என்ன?

டிரைவர் மாணிக்கம் தான் போய் வீட்டுச் சாவியை வாங்கி வந்தது. வந்த டாக்ஸி உறுமலுடன் கிளம்பிவிட, அசாத்திய அமைதியில் நின்றவளுக்குத் தன் நிலை உறைத்தது.

"ஆயா" என்று குரல் தர, இவளது தேவைகள் உடனடியாய் நிறைவேறிப் பழக்கம். சமையல், வீட்டுப் பராமரிப்பு பற்றி ஏதும் அறியாத வளர்ப்பு. குடிக்க நீர் கூட இல்லாத இந்த சிறு அறைகளில் என்ன.. எப்படி? சில நாட்கள் என்ன.. சில மணி நேரங்களைக் கழிப்பதும் முடியாது போலவே...?

மனம் துவண்ட அதே வேளையில் வீம்பும் தலை உயர்த்தியது. இந்த நித்யன் ஆமை போல பம்மிக் கொண்டிருப்பது இதற்காகத்தான். அதாவது வந்தவள், வந்த வேகத்திலேயே போகட்டும் என்பது-அதற்குத் தான் இடம் கொடுப்பதா..? ம்ஹூம்..

சிங்கத்தை அதன் குகையிலேயே சந்தித்து விடுவது. முதலில் தன் போர்ஷனை சுற்றிப் பார்த்தவள் - அறைகளின் பின்புறம் குளியலறையுடனான கழிப்பறை இருந்தாலும் சிறு சிமெண்ட் தொட்டி நிறைய 'சில்' லென்ற நீரைத் தவிர சிறு குவளை கூட இல்லை.

பெரிய ஹோட்டல்களில் மட்டுமே தங்கிப் பழகியவள், போர்வை, துவாலை என்று ஏதும் எடுத்தும் வரவில்லை..!

தன் வீட்டு வாசலில் வந்து நின்றாள்.

அவன் கதவைத் தட்டி, 'காட்டில் இருந்தால் விருந்தோம்பு பண்பும் கூட சுத்தமாய் மறந்து போகுமா?' என்று கேட்டு விடுவது! - பொருமினாள் ஆனால் வெளியே தெரிந்த இயற்கை அவளை அமைதிப் படுத்தியது. பேர் தெரியாத மரங்க வீட்டைச் சுற்றிலும் சாமரம் வீசின. தொலைவில் நீல மலைகளி

[illegible] வெளிச்சம். ஆனால் கண் எட்டிய தூரம் வரை ஆள் நடமாட்டமில்லை.

வெயில் தணிந்து காற்று 'குளுகுளு' என்று வீசியது.

வெகு விரைவில் இந்நிலை மாறி இருள் சூழும்.

அடிவயிற்றில் கிலி பிராண்டியது - 'சித்தப்பா' என்ற போர்வையில் இவளைக் கண்டபடி தொட்ட தடியனால், 'மாடல்' உலகில் நுழைந்தவள்தானே என்ற எக்களிப்போடு அவளிடம் சரசமாட முயன்ற சில ஆண்களால் ஏற்பட்ட கிலி, கசப்பு அது.

ஆண்களுடன் தனியே இருக்க நேர்ந்தால், அவளுக்கு அவஸ்தைதான். அவன் பேசாமல் இருந்தால், தன் மீது பாய சமயம் பார்க்கிறான் என்று படும். சிரித்து பேசினாலோ, 'சரியான சபலக் கேஸ்' என்று பொருமுவாள். ஆக அந்தச் சந்தர்ப்பங்களைத் தவிர்ப்பவள் இப்போது வலிய வந்து சிக்கியாயிற்று.

டிரைவர் மாணிக்கத்தையேனும் நாளை காலை வந்து போகச் சொல்லியிருக்கலாம். 'அப்பாவின் வீட்டில் ஓரிரவு' என்று மனதுக்குள் ஒரு கவிதையை எழுதியபடி கிளம்பி விட்டிருக்கலாம்.

இங்கு போன் இருக்குமா? முதற்காரியம் மின் இணைப்பு..?

சுவர்களைத் தேடி சுவிட்சைத் தட்டியவளுக்கு மஞ்சளாய் ஒளிர்ந்த பல்புகளைக் கண்டதும் மனம் சற்று ஆசுவாசப்பட்டது.

இனி அவன் பகுதியின் கதவைத் தட்டத்தான் வேண்டும்.

பாம்பு இருக்கும் புற்றை நெருங்குவது போலான பதட்டத்துடன் வாசற்படி ஏற...

இவள் வருகை உணர்ந்து அதுவே 'திறந்திடு சீசேம்' பாணியில் மெள்ளத் திறந்தது.

இவளது மூச்சின் வேகம் கூடியது. வாய் உலர்ந்தது.

ஒரு வாய் குளிர்ந்த நீர் கிடைத்தால் தேவலை... அதைவிட மாணிக்கத்தின் ஓட்டை டாக்ஸி வந்து விட்டால் க்ஷேமம்... [illegible]



'ச்சே கோழை' என்று தன்னையே அதட்டியவளின் பார்வை வாசலை நிறைத்த உருவத்தைக் கண்டு உருண்டது..!

பாம்பு புற்றிலிருந்து ஆதிசேஷனே வெளிப்பட்டது போலொரு அதிர்ந்த பார்வை..!

கைகள் வழிய பாத்திர பண்டங்களோடு நின்றான் அவன். வெட வெடத்தான் உயரம் முழுக்க ஸ்டூல், ஸ்டீல் நாற்காலி, பாத்திரங்கள், போணி, ஒற்றை காஸ் அடுப்பு, வாளியுடன் மெள்ள படியிறங்கினான்.

ஸ்திரீ லோலனாய் கற்பனை செய்தவளின் இத்தகு கோலத்தை நேத்ரா எதிர்பார்க்கவில்லைதான்!

திகைப்பிலிருந்து மீண்டவள் விரைந்து போய் அவன் பிடியிலிருந்த சில பொருட்களை வாங்க முயன்றாள்.

பிகு இன்றி இவற்றைத் தந்தவன் இவளது பகுதியினுள் நுழைந்தான். சுமைகளை இறக்கியவனை இவள் கூர்ந்து பார்த்தாள்.

சற்று விநோதமான தோற்றம்.

அசாத்திய உயரத்திலிருந்தும் 'பர்முடாஸ்' அரை கால்சட்டையில் இருக்க, மயிர் சுருண்ட அவன் நீண்ட கால்கள் வடிவாய் தெரிந்தன. அவன் உருவத்தில், அசைவுகளில் ஒரு பண்பட்ட நளினம் இருந்தது.

இவளை ஒரு கணம் பார்த்த அவன் கண்கள் இவளைக் கட்டி அடக்கின. அப்போதுதான் தூங்கி எழுந்தது போன்ற சற்று கிறங்கிய விழிகள்... பாதி மூடினாற் போன்ற ஒரு வித போதைத்தனத்துடன் தெரிந்தன. மாநிறம். இறுக்கமான மெல்லிய உதடுகள்.

அவற்றை பாதுகாக்க என்றே வளர்க்கப் பட்டது போன்ற முரட்டு மீசை.

தொட்டால் தொட்ட விரலைக் காயப்படுத்துமளவு கூர் மூக்கு..! கோதியே சீராக்க முயன்ற அடர்ந்த கேசம்...

மறுபடி அவன் கண்களை நோக்கினாள்.. அதில் தெரிந்த அவ்வளவு தெரியாத ஒரு உணர்வு அவளுக்குப் புதியது!

அவளைப் பார்க்கும் எல்லா ஆண்களின் கண்களிலும் அவள் வாசிக்கும் பாராட்டுப் பத்திரம் இங்கே இல்லை!

சற்று ஆச்சரியத்துடன், துளி ஏமாற்றத்துடனும் மறுபடி அவன் கண்களை படிக்க முயன்றாள். ஆனால் அதில் உணர்வுகள் எழுதப்படவில்லை அல்லது கவனமாய் மறைக்கப் பட்டிருந்தன!

இன்னும் இருவரும் ஏதும் பேசிக் கொள்ளாதது உறைக்க,

"நன்றி உங்களுக்கு சிரமம்.." ஆரம்பித்தவளை இடைவெட்டியவன் "படுக்கையைக் கொண்டு வரேன்" என்று விலகினான்.

பின்புறமிருந்து சமையல் மேடையில் அடுப்பு பாத்திரங்களை வைத்தவள் முக்காலியின் மீது தன் பெட்டியை வைத்தாள்.

ஏதோ உந்துதலில் கைப்பையிலிருந்து குட்டி கண்ணாடியில் தன் முகத்தை அவசரமாய் ஆராய்ந்தாள் - மிகப் பரிதாபமாய் தோன்றுகிறோமோ என்ற சந்தேகம்! சிறு வயதிலிருந்தே ஆண்களின் பார்வை தந்த பாராட்டுகளுக்குப் பழகி விட்டவள் அவள்!

தங்கள் கண்களே வேண்டியதைச் சொல்லி விட்டது புரியாமல் பளீர் பல்லிளிப்புடன் 'ரொம்ப அழகு நீங்க' என்று வழிவார்கள்.

அவ்வித பாராட்டு அவளுக்கு சலித்து, மரத்தே போனது! ஆனால் நித்யனின் இந்த வெற்றுப் பார்வை அவளுக்குப் புதிது.. புரியாமல் குழப்பியது..!

மறுபடி வந்தவன் கட்டிலில் மெத்தையிட்டு சுற்றிலும் கொசு வலையைக் கட்டலானான்.

தன்னை தவிர அந்த அறையில் வேறு யாரும் இல்லாதது போன்ற மௌனம் முழுமையாய்!



அவளுக்கு மூச்சடைத்தது.

கூடாரம் போல கொசு வலையைக் கட்டியபின்-

"இந்தத் தவலையில் குளிக்க வெந்நீர் போட்டுக்கலாம் - இப்ப காஃபி அனுப்பறேன்."

"தேவையான பொருட்களைத் தந்தால்.... நானே தயாரிச்சுக்குவேன்."

"அது ரெட்டை வேலை.. தவிர உனக்கு வெந்நீர் போடத் தெரியுமாங்கறதே சந்தேகம்.."

பல்லைக் கடித்தபடி நின்றாள் - ஏனெனில் அது உண்மை தான்! வித்யா சொன்னதும் முழு உண்மை!

இவன் மகா கர்வி! எடுத்த எடுப்பில் தன்னை ஒருமையில் குறிப்பிட்டு மட்டம் வேறு தட்டுகிறானே..!

வரவேற்பாய் ஒரு புன்முறுவலோ இரண்டு உபசார வார்த்தைகளோ இல்லாமல்..

ஆனால் அத்தனையையும் பார்க்காத தன் தகப்பனுக்காய் பொறுத்துக் கொள்ள முடிவெடுத்தாள் -

"இங்கே போன் இருக்குமா?"

"போஸ்ட் ஆபீஸில் உண்டு. இங்கேயிருந்து அரை மணி நேரம் நடக்கணும்." சொன்னபடி வெளியேறினான்.

சற்று நேரத்தில் கதவு தட்டப்பட, திறந்த போது அங்கு யாருமில்லை - படியில் மூடப்பட்ட ஒரு பாத்திரமும், பிளாஸ்கும் இருந்தன. தேன் தடவிய டோஸ்டும் தேநீரும். ஒரு ஜாடி நிறைய குடிநீரும், பழங்களும்.

தன் அப்பாவிற்கும் இப்படித்தான் உதவியிருப்பான் போலும்.. ஆனால் அதற்காக எதற்காக பாதி சொத்தை அப்பா இவனுக்கு எழுதி வைக்க வேணும்?

தேன் கசிந்த டோஸ்டை மென்றபடி அவனைப் பற்றியே நினைத்தாள்.

இத்தனை அலட்சியமும் அகம்பாவமும் கொண்டவன் பெண்களைத் தூக்கும் வேலனாய் இருக்கக் கூடுமா? ஒரு வேளை இவனது கவர்ச்சியில் பெண்கள் மயங்கி இவனைச் சுற்றுகிறார்களோ?.. ஒரு வகையில் கவர்ச்சியானவன்தான்... அவன் அசைவுகளில் கூட ஒரு புலியைப் போன்ற லாவகம்... அழுத்தமான கம்பீரம். அவன் நீண்ட விரல்கள் கலைஞர்களுக்கே உரியது. வித்யா இவன் கலை சேவை செய்வதாய் எண்ணமாயிருக்கும்?

பழைய செய்தித் தாளை விரித்து அங்கிருந்த சிமெண்ட் அலமாரியில் தன் பொருட்களை, உடைகளை அடுக்கினாள்.

அப்பாவும் தன் உடமைகளை இங்குதான் வைத்திருந்தாரோ? மூன்று மாதங்களுக்கு முன் அவர் புழங்கிய வீடு இது - தொண்டையடைக்க எண்ணினாள். இப்பா எப்படி இருப்பார். அவர் குரல் எப்படி? அடிக்கடி சிரிப்பவரா, எவ்விதம் உடுத்துவார் என்றெல்லாம் எண்ணிக் குமைந்தாள்.

சற்று முன்பே அப்பா வக்கீல் மூலமேனும் தன்னைத் தொடர்பு கொண்டிருந்தால்... ஏக்கத்துடன் கண்ணயர்ந்து விட்டாள்.

திடீரென விழிப்பு வர அறை நல்ல இருட்டிலிருந்தது. புது இடத்தை மிரளப் பார்த்தாள். கதவைத் தாழிடாமலேயே படுத்து விட்டது நினைவு வர, அவசரமாய் எழுந்தாள்... கொசுக்களின் ரீங்காரம் மட்டுமே சுற்றிலும். இவற்றின் இசையும், கடியும் தான் தன்னை எழுப்பியிருக்க வேண்டும்.

தடுமாறி கதவை நோக்கி நகர்ந்தவளின் கால்கள் உறைந்தன.

ஜன்னல் கம்பிகளின் வழியே ஒரு ஜோடி கண்கள் அவளையே பார்த்தபடி... நேத்ரா அலறினாள்.



# 5

சிமெண்ட் தொட்டியின் 'சில்' நீரில் முகம் கழுவித் தெளிந்தவளின் நாவு சூடான பானத்திற்காய் ஏங்கியது... அதே சமயம் இன்னும் ஒரு இரவு இங்கு தங்க வேண்டுமா என்ற அச்சமும் மிக, கண்கள் ஜன்னலுக்கு ஓடின. முக்காடு போட்ட முகமும், தன்னை உறுத்த பளபளத்த கண்களும் ஞாபகம் வர பிடரியில் சிலிர்த்தது.

கவனமாய் கதவைத் திறந்து எட்டிப் பார்த்தாள் - காற்று ஓடி வந்து அவளை நீவி சமாதானப்படுத்தியது.

நேற்றிரவு தன் கூச்சலைக் கேட்டு ஓடி வந்த நித்யன் மொட்டையாய் கரிசனையின்றி 'என்ன?' என்றான்.

"யாரோ.. எட்டிப் பார்த்தாங்க."

"இங்கே பயமில்லை."

"ஜன்னல் வழியே ரெண்டு கண் தெரிஞ்சதே?"

"ஒன்னரை, மூணு கண்ணுன்னா ஓரளவு பயப்படலாம்... ரெண்டுதானே?"

"ஆக நடு ராத்திரி யாரேனும் நம்மை எட்டிப் பார்க்கறது இயல்புதானா?" - எரிச்சலாய் வினவினாள்.

இயல்பாகவே பதில் வந்தது-

"மூணு மாசமாய் யாருமில்லாத அறையில் விளக்கெரிந்தால் எட்டிப் பார்த்திருப்பாங்க."

அவளுக்கான இரவு உணவைத் தந்து, போய் விட்டான். இப்படி ஒவ்வொரு வேளை, வாய் உணவிற்கும் இவனிடம் கையேந்துவது அவமானம் தான்.

காலை காப்பிக்கு ஏங்கிய தன் நாவை சபித்தாள்.

யாரோ வரும் அரவம் கேட்டது.

கையில் பிளாஸ்குடன் வந்த புது நபரை ஆவலாய் பார்த்தாள். ஐம்பது வயதில் ஏராளமான தொந்தியுடன் வந்த நபருக்கு சிரிப்பும் தாராளம் - முறுக்கிய மீசையின் இருபுறமும் புஷ்டியான கன்னங்கள் சிரிப்பில் உப்பிப் பளபளத்தன.

"வாம்மா... நீ வந்ததில் சந்தோஷம்... நான் கேப்டன். உங்கப்பாவோட சிநேகிதன்."

"ஓ... வணக்கம்... நீங்க எங்கே தங்கியிருக்கீங்க?"

"பேரு சந்திரபாபு... பக்கத்தில்தான்... அதான் நீ வந்தது தெரிஞ்சதும் பொடி நடையாய் இத்தனை சீக்கிரம் வந்துட்டேன்."

அருகே இப்படி ஒருவர் உண்டு என்பது அவளுக்கு தெம்பளித்தது. அறைக்குள் வந்தவர் பிளாஸ்கிலிருந்த காபியை குவளையில் வார்த்தினார்.

"உங்களுக்கு ஏன் சிரமம்?"

"காபியை வார்த்தறது அத்தனை சிரமமில்லையேம்மா... சுமாரான காப்பியைக் குடிக்கறதுதான் கொஞ்சம் சிரமம்..."

நடிகர் வி. கே. ராமசாமி போல அலட்டலில்லாத நக்கல் தொனியில் சொன்னார்.

"அதில்லை... கேப்டன்... அங்கிள்... உங்களை எப்படி அழைக்க?"

"எல்லாருக்கும் நான் கேப்டன்தான்..."

"சரி நீங்க காபி எடுத்துட்டு வந்ததைச் சொன்னேன்." சூடான குவளையை எடுத்து ஆவியில் கமழ்ந்த மணத்தை ஆழ இழுத்தவள் மெள்ள அதை உறிஞ்சினாள்.

"ம்ம்... நல்ல காபி."

"அவன்ட்ட சொல்றேன்."

"யார்ட்ட?"



"நம்ப நித்யன்ட்ட. உனக்காக பசும்பால் வரவழைச்சு போட்ட காபி. காலைல வந்தான் போல... உனக்கு அசந்த உறக்கம்... ஆக இப்ப நீ எழுந்த சத்தம் கேட்டதும் மறுபடி காபி போட்டான்... நான் எடுத்துட்டு வந்ததோட சரி."

"ஓ... நான் நேத்து இடையே முழிச்சேனா... பிறகு சரியாய் தூங்கலை."

"அதனால் என்னம்மா... தாய்வீடு வரும் பொண்ணுங்க விச்ராந்தியாய் இருக்கறது போல நீயும் தகப்பன் வீட்ல இரேன்."

இவள் மனம் கனிந்தது.

"கேப்டன், அப்பா உயிரோடு இருந்ததே எனக்குத் தெரியாது... எங்க குடும்ப நிலை அப்படி... உங்களிடம் அப்பாவின் போட்டோ இருக்குமில்லையா?"

கேப்டன் சற்று யோசித்து உதடு பிதுக்கினார்.

"உங்கப்பா சதா கேமராவிற்கு பின்னே இருந்தவன்ம்மா... முன்னே நின்னு போஸ் கொடுக்க மாட்டானே... ஆக நாங்க சேர்ந்து படம் எடுத்துக்கலை. ஆனால் நித்யனிடம் இருக்கும் - கேளேன்."

இவள் முகம் சுண்டியது.

மறுபடி அவனது வெற்று பார்வையை, அலட்சிய போக்கை காண விரும்பவில்லை அவள். ஆனால் வேறு வழியும் இல்லை போலவே?

"நீங்க கேட்டு வாங்கித் தாங்களேன்."

"அதுக்கென்ன?... உங்கம்மாளுக்கு நீ இங்க வர்றது தெரியுமா? தடை சொல்லலியே...?"

"நான் அடிக்கடி பயணம் செய்றதால், வெளியூர் போறேன்னு மட்டும் சொன்னேன்..."

"தப்பும்மா. பிள்ளைங்க எங்க போறோம், தங்குவோம், எப்ப திரும்புவோம்னு விவரம் சொன்னால்தானே பெத்தவங்க படபடப்பு இல்லாம இருக்கலாம்?"

தன் தாய் அப்படியெல்லாம் பதறி, திட்ட வேண்டும் என்பது தான் நேத்ராவின் ஆசை.. அதிகம் நிறைவேறாத ஆசை!

"ஆகட்டும் கேப்டன்... நீங்களும் நான் சொன்னதை மறக்காமல்.."

"என்னது?"

"அப்பாவுடைய புகைப்படம்" எழுந்து கொண்டார் - "இதோ போறேன். ஆனால் வீட்டைப் பார்க்கிலும் உங்கப்பா அதிகம் புழங்கினது காட்டில்தான் - அதையும் பார்த்திடும்மா.."

"எனக்கு இதுவே காடு போலத்தான் தோணுது.. நேற்று ராத்திரி.."

"சொல்லும்மா."

"அந்த ஜன்னல் வழியே யாரோ எட்டிப் பார்த்தாங்க - முக்காடும் பளபளன்னு கண்ணுமாய்.. பயந்துட்டேன்.."

"நாசக்கு, நாகரீகம் இல்லாத மக்கள்.. ஆனால் விஷங் கிடையாது வேற யாரு.. சித்ராதான் இங்கயே சுத்தி சுத்தி வருவா.."

இவளுக்கு 'சுருக்' கென்று ஞாபகம் வந்தது.

உடன் பயணித்த வித்யா, கல்யாணமின்றி இளம் வயதில் தாயான சித்ரா பற்றி சொன்னாளே..

அதற்குள் கேப்டன் வெளியேறி இருந்தார்.

குளிக்க வெந்நீர் வைத்தவள், கூந்தலைச் சிக்கெடுத்து பின்னினாள்.. பொறுமை கரைந்து கொண்டிருந்தது - கேப்டன் ஏன் இன்னும் அப்பாவின் படத்தோடு வரவில்லை.."

நித்யன் அதைத் தர மறுக்கிறானா... அல்லது தேடுகிறானா?

அவன் பகுதியை நோக்கி நடந்தாள் - வாசல் கதவு திறந்தே இருந்தது.

கேப்டன் குரல் குழைவாகக் கேட்டது -

"சிரமம் பார்க்காமல் சொச்ச ரெண்டு ஆல்பத்தையும் தந்திடேன் நித்யா.."



"எடுத்துப் போங்க - அவனே பார்த்துக்கட்டும்."

"நான் வேணும்னா பார்க்கவா?"

"ஏன் இப்படி மெனக்கெடறீங்கன்னு தெரியலை கேப்டன்.. ஹூம்.. நானும்தான் மெனக்கெடறேன்.. வெங்காயம், தக்காளி, பச்சை மிளகாயை எல்லாம் நறுக்கி முட்டையை அடையாய் போடறேன்.. எனக்குன்னு டீயும் பன்னுமே கூட போதும்.."

"பாவம்ப்பா அப்பாவின் நினைப்பில் வந்திருக்கா.."

"சொத்தைத் தந்ததும் பாசத்தோட வர்றாங்க..ம்ம்? இத்தனை வருஷமாய் இல்லாத பாசம்... இருந்திருந்தால் அப்பாவை சந்திச்சு, பேசி, பழகியிருக்கலாமே?"

"அப்பா உயிரோடு இருந்தாரான்னரதே தெரியாதுங் கறாளேப்பா."

"தரிசனை இல்லை - மெனக்கெடலை.. சொத்து வந்ததும் ஏதேதோ ஆர்வங்கள் வந்திடுது.. இதுவரை பார்க்காதவரின் பணம் மட்டும் எதுக்குன்னு விட வேண்டியதுதானே?"

தொனியிலிருந்த நக்கல் இவளைக் கொத்திப் பிடுங்கியது.

ஆத்திரத்துடன் தன் அறைக்குத் திரும்பினாள்.

'எத்தனைத் திமிர்? இந்த ஓட்டை வீட்டின் பாதியை, பல ஆயிரங்களைத் தேடியா தான் ஓடி வந்ததாய் நினைக்கிறான்? சென்னையின் பிரதான பகுதியில் இடம் வாங்குமளவு தனக்கு வசதி உண்டே? ம்ஹூம்... பெண்களை, அவர்கள் மனதில் நுண் உணர்வுகளைப் புரிந்து கொள்ள இயலாத ஜடம் அவன்.. புரிய விரும்பாத திமிர்த்தனம் வேறு..'

கூண்டுப் புலியின் ஆத்திரத்துடன் தன் சிறு அறையில் நடந்தாள். அவன் கவனத்தை வேறு புறம் இழுப்பது போல அச்சத்தம் கேட்டது.

'சலக் சலக்..'

நின்று கவனித்தாள்.

நேற்றிரவு போல பயம் அவளைக் கட்டி அழுத்தவில்லை_ முழு வெளிச்சம் தந்த துணிவுடன் வெளியே போய் எட்டிப் பார்த்தாள்.

ஒரு உருவம் ஓடி மறைந்தது_!

விடாமல் தொடர்ந்தவளின் கண்ணில் புதரின் பின்னால் 'பளீர்'ரென்ற அந்த சிவப்பு உடை பட்டது. சன்ன அசைவுகளின் சலங்கை சத்தமும்_

"யாரது?" - குரல் கொடுத்தாள்.

பதிலில்லை.

"யாரங்கே ஒளிஞ்சிட்டு_?"

"____"

"சித்ரா?"

இதற்கு பலனிருந்தது. சிறு மஞ்சள் பூக்கள் அடர்ந்திருந்த குத்துச் செடியின் பின்னேயிருந்து ஒருவட்ட முகம் எட்டிப் பார்த்தது.

"வெளியே வா, சித்ரா_"

உரிமையுடன் இவள் அழைக்க, ஒடுங்கி ஒளிந்திருந்தவள் முழுக்க வெளிப்பட்டாள். மேகத்திரளின் பின்னேயிருந்து நிலவு மீண்டது போலிருந்தது!

வெளுப்பான நிறமில்லை. தேன் பழுப்பு சருமம். ஆனால் தேனின் இனிப்பு படிந்தது போன்ற இனிய முகம். குழந்தைத் தனம் மாறாத விழிகளும் வடிவான பருத்த உதடுகளும் முகத்தின் வசீகரங்கள். ஒடிசலான உயரத்தில் தன்னை விழுங்கி விடுவது போன்று பார்த்தவளை தானும் கண்டு மலைத்து நின்றாள் நேத்ரா!

யாருமே பார்த்து பாராட்டாவிட்டாலும் காட்டு மலர்களையும் கூட அற்புத அழகுடன் தானே படைக்கிறார் கடவுள்!

'எத்தனை அழகு நீ' என்று சொல்ல நினைத்தாலும், நினைத்ததை உடனே சொல்லும் துணிவில்லாமல் வெறுமே புன்னகைத்தாள்.



ஆனால் புதியவள் பட்டென்று,

"நீங்க ரொம்ப அழகாயிருக்கீங்க_" என்று விட வாய்விட்டு சிரித்தும் விட்டாள்.

## 6

மெல்லிய நரம்பினுள் பாசிகளை பொறுமையாய் கோர்த்திருந்தாள் நேத்ரா - பொடியான சிவப்பு, தங்க பாசிகள் மாறி மாறி சேர்த்து மிக கவர்ச்சியான ஒரு கழுத்தணியாய் உருப்பெற்றுக் கொண்டிருந்தன.

அவளுக்கு இது ஒரு தியானம் போல.

கவலை அல்லது கொந்தளிப்பில் மனம் அலைபாய, ஒரு ஆபரணத்தை உருவாக்க உட்கார்ந்து விடுவாள்.

கற்பனைப் பூ விரிய விரிய அதன் நறுமணத்தில் வேண்டாத கவலைகள் எல்லாம் மங்கி மறைந்தே போகும். வேலை முடியும் போது மனம் உற்சாகமாகி இருக்கும்.

நித்யனின் பழியால் துடித்த தன் உள்ளத்தை ஆற்ற வேணும்_ அதைவிட இந்நகை சித்ராவிற்காக என்ற எண்ணமும் தனி உற்சாகத்தைத் தந்திருந்தது.

சித்ராவின் களங்கமில்லாத அழகைக் கண்டபின் அடுத்து நேத்ராவின் கவனம் அவளது நூதன ஆடைக்கு இறங்கியிருந்தது.

சதுர கண்ணாடித் துண்டுகளும், பாசி மணிகளும் வைத்து தைக்கப்பட்ட ஆடையை ஆவலுடன் தொட்டுப் பார்த்திருந்தாள்.

சித்ராவின் வெளிப்படையான பாராட்டால் இவளது தயக்கமும் கழல, "நீயும் அழகுதான்_ உன் உடையும் கூட பிரமாதமாயிருக்குது. நீயே தைத்ததா?"

"ஆமா சித்தியும் நானுமாய் சேர்ந்து தைப்போம்... நிறைய வேலை - இந்த பாவாடை, ரவிக்கையை முடிக்க ஒரு மாசம் இழுத்திரும்..."

"இதே போல நிறம் நிறமாய் உடைகள் வச்சிருக்கியா?"

சித்ரா வாய் மூடி சிரித்தாள்.

"எங்க உடுப்புக்கே மெனக்கெட்டா எங்க வயிறு எப்படி நிரம்பும்?"

நேத்ரா சற்று சங்கடமாய் புன்னகைத்தாள் -

"ஓ- அப்ப..?"

"நிறைய தைச்சு வித்துடுவோங்க... மேசைக்கான விரிப்பு, குஷனு கவர், சவர்ல மாட்டற படம்னு விதவிதமாய் செய்வோம். இது போல பாவாடை எல்லாம் யாரிப்ப கட்டறா?"

"உண்மைதான்... நல்ல ஐடியா..."

"எல்லாம் சின்னவரு... அதான் நித்யன் தந்ததுதான் - அவர்தான் நாங்க தைக்கிறதை எல்லாம் வித்தும் கொடுப்பாரு. நாங்க விலை பேசப் போனால் ஏமாத்திடறாங்களே..?"

"ஓஹோ?" - நேத்ராவிற்குள் குழப்பமாய் சில சிந்தனைகள் - ஆக நித்யன் அத்தனை திமிர்காரன் இல்லையோ? இந்த எளிய மக்களின் தேவை, திறமை அறிந்து சரியான விதத்தில் உதவியிருக்கிறானே?

இப்போது அவற்றை எல்லாம் மனதுள் அசைப்போட்டபடி கோர்த்ததைக் கட்டினாள். தன்னைப் பற்றி வெறுப்பாய் நித்யன் பேசியதும் மறக்கவில்லை... சித்ரா உருவாக்கிய நல்லெண்ணத்தை வெறுப்புப் பெருகி அழித்துப் போட்டது.

இந்த இடத்தில் தொடர்ந்து தங்க வேண்டுமானால் இப்படி இங்குள்ள மக்களுக்கு உதவினால் தான் ஆயிற்று! ஆக இந்தப் பரிவு உதவி எல்லாம் ஒரு வித வேஷம்...!



சித்ரா வந்தால் தனக்கு வேண்டிய சில பொருட்களை வாங்கி வரச் சொல்ல வேண்டுமென்று பட்டியலோடு பணத்தையும் எடுத்து வைத்தாள். கேப்டன் தந்த தேயிலையைக் கொண்டு அவ்வப்போது கடும் தேநீர் தயாரித்துக் குடித்தாள்..... சில பத்திரிகைகளை வாங்கிப் புரட்டினாள்.

ஆனாலும் பொழுது ஆமையாய் நகர்ந்தது...

ஒவ்வொரு மணிப் பொழுதையும் 'இனி மறுபடி கிடைக்காத பொக்கிஷம் இது' என்று உணர்ந்து உபயோகிப்பவள் நேத்ரா-

இலக்கின்றி கடைத்தெருவிற்கு அவள் போனதில்லை.

பட்டியலோடு போய் தேவைப்பட்டதை மட்டுமே வாங்கி வருபவள். வேலைகளையும் கிரமமாய் செய்து முடித்தால்தான் வெற்றி அவளைத் தேடி வந்தது... தொடர்ந்து தங்கியது.

ஆரம்ப வெற்றி கண்ட பலருக்கு தலை காலோடு ஏன் நேரமும் மறந்து போகும். விருந்து, கேளிக்கை என்று பொழுதைப் போக்கி வேலையை கோட்டை விட்டு விடுவார்கள்-

வெகு ஜாக்ரதையுடன் உழைத்த நேத்ராவிற்கு இப்படி 'சும்மா' இருப்பது முடியவில்லை... குற்ற உணர்வும் குடைந்தது.

மகா ஆர்வத்துடன் கையிலிருந்த வேலைகளை முடித்து விட்டு கனிபூத்திற்கு ஓடி வந்தவளுக்கு இங்கு என்ன செய்வதென்று புரியவில்லை...

வெகு நேரமாய் பொடி மணிகளைக் கோர்த்தால் நொந்த பிடரி, முதுகை நீவியபடி நெட்டி முறித்தாள்.

வேறுவழியில்லை... நித்யனிடம் வழி கேட்டு, கேப்டனின் வீடு வரை போய் வரவேணும்... அப்பாவைப் பற்றி அவரைப் பேசச் செய்து கேட்கலாம்... அப்போதுதான் மறுபடி சலங்கைகளின் சிணுங்கல் கேட்டது.

சித்ராதான் வந்து விட்டாள் போலும் என்ற ஆர்வத்துடன் வாசலுக்குப் போனவளின் உதடுகள் முதலில் வியப்பால் குவிந்து பின் சிரிப்பால் விரிந்தன.

தன்னையே 'குறுகுறு'வென்று பார்த்த புதுநபரை நோக்கிக் கை நீட்டினாள். குமிழ் சிரிப்புடன் அந்தக் குட்டி தளிர் நடையில் பக்கவாட்டில் நகர்ந்து ஒரு செடியின் பின்னே மறைந்து நின்றது.

"அடடே நீயும் உங்கம்மா போல ஒளிஞ்சுக்கறியா?" கொஞ்சியவளுக்கு, தன்னை அறியாமலேயே இக்குழந்தை சித்ராவினுடையதுதான் என்று தான் முடிவெடுத்து விட்டது புரிந்தது.

நித்யனின் சாயல் குழந்தையிடம் இருக்கிறதா என்று ஆராய்ந்தாள்.

"சித்ரா மகன்தானே நீ?" சற்றே நெருங்கியவள் கேட்க, குழந்தையும் தலைசாய்த்து புது முகத்தை முறைத்தது.

"அம்மா எங்கே?"

கேட்காத பாவனையில் வேறு பக்கம் பார்த்தது.

"பேரென்ன குட்டிக்கு...?"

இதற்கும் பதிலில்லை என்றாலும் அமர்க்களமான சலங்கை ஒலியும், அதே இனிமையுள்ள சித்ராவின் சிரிப்பும் வந்தன.

"என்னம்மா... பிரு பண்றானா...?"

"ம்ம்... உம் பையன்தானே?"

"அடடே... எப்படி சரியாச் சொல்லிட்டீங்க?"

"உன்னைப் போலவே புதர் பின்னே ஒளிஞ்சானே?"

"பேர் பாஸ்கரன்... பாச்சின்னு கூப்பிடுவோம்..."

"பேசறானா?"

"ஆரம்பிச்சா ஓயமாட்டான். நமக்குத்தான் புரியாது." தன் கைப்பையுள் கிடந்த சாக்லேட்டின் நினைப்பு வர, அதை எடுத்து வந்து குழந்தையிடம் நீட்டினாள்.

விரல் சப்பிய அதன் விழி மினுங்கல் கூடியது.

"மிட்டாய் பிடிக்குமா?"

"ம்ம்."



"அப்ப வந்து வாங்கிக்கோ, பாச்சி..."

சலங்கை கோர்த்த தண்டை ஒலிக்கக் குழந்தை முன்னேறியது.

சுத்தமாயிருந்தாலும், வெளிறிய நைந்த அதன் உடையைப் பார்த்த நேத்திராவிற்கு ஏனோ நெஞ்சை அடைத்தது.

மண்டியிட்டு பிள்ளையைத் தன்னருகே இழுத்து அணைத்தவள் அதன் தலையைக் கோதி உச்சி முகர்ந்தாள். உறவினர்கள் வந்து புழங்கும் வீட்டு அமைப்பு இவளுக்கு வாய்த்ததில்லை... இன்று இப்போது... மனம் இளகி கனத்தது.

"பாச்சிக்கு எத்தனை வயசாச்சு...?"

"ரெண்டு ஆகப் போவுது."

"படிக்க எங்கே அனுப்புவே... இங்க நல்ல பள்ளி உண்டா?"

"சின்னவருக்கு... அதான் நித்யனய்யாக்கும் இதே கவலைதான்... கீழேதான் போவணும்... ஆரம்ப எழுத்து, கணக்கெல்லாம் தானே கற்றுத் தர்ரதாய் சொல்லுவாரு..."

"சமர்த்தாய் படிச்சிடுவான்... கட்டிப்பயல்..."

மிட்டாயைச் சுவைத்த குழந்தை பிசுபிசு விரல்களால் இவளைத் தடவ, அந்த ஸ்பரிசம் தனக்குள் இனிப்பாய் பரவுவதை கவனித்தாள்... ரசித்தாள்.

## 7

"இதை சின்னவரு உங்களிடம் தரச் சொன்னாரு."

சித்ரா நீட்டிய உறையை வாங்கிப் பிரித்தாள்...

மறுகணம் மனமும் முகமும் மலர்ந்தன...!

ஏனிங்கு வந்தோம்?... எப்போக் கிளம்பலாம்...? என் அலுப்பை உற்சாக அலை ஒன்று புரண்டு அலசிப் போட்டது

உறையிலிருந்து உருவிய புகைப்படங்களை ஆர்வமாய் பார்த்தாள். உயரம், ஒடிசலாய், தொள தொளப்பான ஜிப்பாவுடன் இருப்பவர்தான் தன் தந்தை என்பது உடனே புரிந்தது.

ஒரிரு படங்களில் அப்பாவின் முகம் தெளிவாய் பதிவாகியிருந்தது. வற்றிய நீண்ட முகம், ஆனால் அசாத்திய அழகுள்ள கூரிய கண்கள்... வாஞ்சையுடன் படத்தைத் தடவினாள்.

அவள் அழகு விழிகளில் ஏக்கம் பெருகி நிறைந்தது.

கன்னத்தில் நீர் வடிய, 'அப்பா..' - முணகினாள்.

"உங்கப்பாவாக்கா..."

"ஆமாம் சித்ரா... நான் நேரில் பார்க்க, பழக கொடுத்து வைக்கலை... நித்யனுக்கு நன்றி சொன்னேன்னு சொல்லு..."

"ம்ம்..."

"நீ... இவரை, எங்கப்பாவைப் பாத்திருக்கேல்ல?"

சித்ரா சிரித்தாள்.

ஒரு பூவைப் போல இயல்பும் இனிமையுமாய் மலர்ந்த அந்த இளம் முகத்தை துக்கத்துடன் பார்த்தாள் நேத்ரா... இத்தனை அழகும் வீணல்லவா? காட்டு மலர் மட்டுமல்ல... கயவன் ஒருவன் முகர்ந்து வீசிய மலர்... அப்பன் பெயர் சொல்லக் கூடாத குழந்தையுடன் சித்ரா இப்படி ஒதுங்கி மறைய வேண்டியதுதானா?

"பெரியவரைத் தெரியாமலா...? அத்தனைப் பிரியமானவருல்ல? எனக்குப் பேரு வச்சதும் கூட அவருதான்..."

"ஓ..?"

"பெரியவருக்குப் படம்னா பிரியம்... சித்ரம்னால் படமாமே? அதுதான் இந்தப் பேரு..."

"கொடுத்து வச்சவ நீ சித்ரா... ஆமா, உங்கப்பா எங்கே?"

சித்ராவின் மலர் முகம் கூம்பியது.

மெள்ள தலையசைத்தாள்.



"ஓ... ஸாரி... அப்பா இப்ப இல்லையா?"

"ஆமா நீங்க இன்னும் வீட்டு வண்டியைப் பார்க்கலியே?" சித்ரா அவசரமாய் பேச்சை மாற்றுவது போல பட்டாலும் நேத்ரா சுவாரஸ்யமானாள் - "அதென்ன வீட்டு வண்டி?"

சின்ன பஸ்ஸ மாதிரியாய் இருக்கும்... ஆனா உள்ளே வீடுதான்..."

"ஓ... காரவனா?"

"ஆங்... சின்னவரு அப்படித்தான் சொல்வாரு..."

"அதெங்கே நிற்குது சித்ரா?"

"பின்புற கொட்டாயில... நான் வாரத்துக்கு ரெண்டு தரம் துடைச்சி வைப்பேன்..."

"இங்கே பெட்ரோல் பங்க்கே இல்லையே?... பிறகெப்படி..."

"சின்னவரு கேன்ல வாங்கி வந்து நிரப்புவாரு... இதெல்லாம் அவரு ஐடியாத்தான்..."

"எது... இந்த வீட்டு வண்டியா?"

"ஆமாங்க... பெரியவரு அடிக்கடி காட்டுல போய் கிடந்து உடம்பு நலிஞ்சிடுச்சே... அதான் சின்னவரு இப்படியொரு ஏற்பாடு செய்தாரு."

"நீ கூட போயிருக்கியா... காட்டுக்குள்ளே?"

"பின்னே...." - சித்ராவின் முகம் பழம் நினைவுகளில் லயித்தது. ஒரே நாளில் திரும்பறதாய் இருந்தால் என்னையும் கூட்டிப் போவாங்க... பெரியவரு விதவிதமாய் காட்டை, அங்குள்ள மிருகங்களைப் படம் பிடிப்பாரு..."

"அதெல்லாம் எங்கே?"

"எல்லாம் வெளிநாட்டுக்குப் போயிடுமே..."

"அதுவும் நித்யனின் ஏற்பாடுதானா?"

"பின்னே? முன்னே பெரியவரு படங்களை இங்குள்ள பத்திரிகைங்க 200, 400 ன்னு தந்து எடுத்துக்குங்க... ஐயாக்கும்

சிரம நிலை.. பிறகு வருமானம் கூடிடுச்சு.. அப்படித்தான் இந்த வீட்டை விஸ்தரிச்சு, வீட்டு வண்டியெல்லாம் அமைஞ்சது." ஆக வசதி வந்தது நித்யனுக்குப் பிறகுதான்.

அதனால்தான் தன் தந்தை, பாதி சொத்தை அவன் மீது எழுதினார் போலும். ஆனால் மீதி பங்கு தனக்கு வந்ததில் சின்னவருக்கு ஆத்திரம் - அதைத்தான் இப்படி அலட்சியமாய் காட்டுகிறார்-

அப்பா உயிரோடு இருந்தபோது மகள் வராதது பற்றி வருந்துவது போல காட்டிக் கொள்வது ஒரு வசதியான திரை. தன் பொறாமை, பொருமலை மறைக்கத் தோதான திரை..!

ஆனால் 'கராவேனை'க் கண்டதும் நேத்ராவின் எரிச்சல் மறைந்து உற்சாகம் பெருகிறது!

குட்டி பொம்மை வீடு போலிருந்த அதனுள் வளையவந்தவளுக்குத் தான் குழந்தையாகி விட்ட குதூகலம்!

"இந்த சோபாவை இழுத்து நீட்டினால் படுக்கை ஆயிடும்ங்க.. கீழ் இழுப்பறையில் படுக்கை விரிப்பு, துண்டு எல்லாம் இருக்கும்" என்று விளக்கினாள் சித்ரா..

"இந்த ஜுங்கி, ஜிப்பாவெல்லாம்.."

"உங்கப்பாரது.."

ஆர்வத்துடன் எடுத்து நீவினாள்.

"மாத்தும் துணிங்க.."

வெகு சின்ன கழிப்பறையும் இருந்தது - ஷவர் உட்பட!

"இதற்கான தண்ணீர் எங்கேயிருந்து வரும்?"

"மேலே சிறு டாங்க் உண்டுங்க... மழை நேரத்துல தானாய் ரொம்பிக்கும் - மத்தபடி நாம குழாய் மூலம் ஏத்திடுவோம்."

அடுப்பின் புழக்கத்திற்காக சில பாத்திரங்கள் ஒரு அலமாரிக்குள் இறுக அடைப்பட்டிருந்தன -

"ம்ம்.. மத்தபடி சின்னவர்ட்ட சொல்லி.."



"ம்ஹூம்.. அது சிரமம்.... அவரோட போறது எனக்கும் சிரமம். வேற யார் இதை ஓட்டுவா?"

"கேப்டன் ஓட்டுவாரு.."

நேத்ராவின் முகம் மலர்ந்தது - "அப்ப பிரச்சனையில்லை."

"ஆனா சின்னவர் கோவிப்பாரே.. அவரு விருந்தாளி நீங்க பிறரோட போகறது.."

"நித்யன் அழைத்தது நான் இங்கே வரலியே? நான் அழையா விருந்தாளிங்கறது அவர் அலட்சியத்திலேயே தெரியலையா?"

துளி கோபத்தை இகழ்ச்சியோடு கலந்து கேட்டாள்.

"அதெல்லாமில்லை.... உங்களுக்கு சமைக்க ஒரு பொண்ணை ஏற்பாடு செய்ய என்னைக் கேட்டார்... நீங்க சரியாவே சாப்பிடறதில்லைன்னு வருத்தம் கூட."

"அடடே" போலியாக தானும் வருந்திய நேத்ரா கேட்டாள்-

"அவருக்கு ஏன் சமையலுக்கு யாருமில்லை..?"

"அவருக்கு பால், பழம், முறுக்கு, முட்டைன்னு இருந்தால் போதும்.. எங்க சித்தி எப்போதாவது வந்து சமைப்பாங்க.. ஆனா எங்க கூட்டத்திலே இப்படி நாங்க வெளியே போய் பழகறது பிடிக்காது.. சின்னவருக்கும் யாரையும் எதிர்பார்த்து இருக்கப் பிடிக்காது.."

அத்தனை தன்மான மன்னன் தன் தந்தையின் சொத்தில் அன்பில் ஏன் உரிமை கொண்டாட வேணும்?

அதே சமயம் இன்னுமொரு விஷயம் அவளை உறுத்தியது-

இந்த இரண்டு, மூன்று நாட்களில்... தான் சதா நித்யனை நினைப்பதே அது.!

அவன் தனது கண்களில் படாதது கூட ஏகத் தவிப்பைத் தருகிறது. ஒத்து வராதவனை ஏன் தன் மனதால் ஒதுக்க முடியவில்லை?

பெருமூச்சுடன் குழம்பினாள்...

## 8

கேப்டனின் வீட்டுக் கதவைத் தட்டியவள்,

'கதவு திறந்துதான் இருக்குது - வரலாம்' என்று அவர் குரல் வர அவசரமாய் நுழைந்தாள்.

உள்ளே 'குப்'பென பலாப்பழ வாசம்.

தரையில் அரிவாள்மனையின் முன் அமர்ந்து சுளை பிரித்துக் கொண்டிருந்தார் கேப்டன்!

துண்டை மாலை போல கழுத்திலிட்டு, லுங்கி பனியனில் இருந்தவரைப் பார்த்து புன்னகைத்தாள்-

"என்னம்மா துப்பாக்கி ஏந்திய கைக்கு இந்த கதியான்னு நினைக்கறியா?"

"இல்லை நீங்க சகலகலா வல்லவரோன்னு நினைச்சேன்!"

பொன்வண்ண சுளைகளை தட்டில் வைத்து அவளிடம் நீட்டியவர், முக்கல் முனகலுடன் எழுந்தார்.

"மனுஷன் மூணு வேளை சாப்பிடணுமேம்மா? ஆகக் கரண்டி, கத்தியெல்லாம் பிடிப்பேன்..."

"அது மட்டுமல்ல... அப்பாவுடைய காரவேனையும் ஓட்டுவீங்களாமே?"

கைகளைக் கழுவி, தன் கழுத்துத் துண்டில் துடைத்தபடி வந்து அமர்ந்தார். "சித்ரா சொன்னாளாக்கும்? லாரி, பஸ்ஸுக்கான லைசென்ஸ் இருந்தால் இதையும் ஓட்டலாம்..."

"ஓஹோ?.. அது- அதுவ..."

"சொல்லும்மா..."

"என்னைக் கூட்டிப் போக முடியுமா?"



"உனக்கில்லாத உரிமையா..? நித்யனிடம் சொன்னால்..."

"அவர் என்னைப் பார்ப்பதையே தவிர்க்கிறாரே... பின்னே எப்படி கேட்க?"

நெற்றியை யோசனையாய் சொறிந்தார்.

"அவனுக்கு பெண்ணுடைய ஆதங்கம் புரியலையா... இல்லை புரியாதது போல நடிக்கிறானான்னு எனக்குப் புரியலைம்மா... சரி விடு... நாம போவோம்."

"ஓ... நன்றி கேப்டன்... இப்ப... இன்னிக்கே?"

"பொறும்மா... உடனே கிளம்பினாலும் பாதி தூரம் போகும் முன்னே இருட்டிரும்... வேனில் பெட்ரோல் இருக்குதான்னு பார்க்கணும் - எடுத்துப் போக தண்ணி, பலகாரம்னு..."

"அதெல்லாம் சித்ரா மூலம் நான் ஏற்பாடு பண்ணிடறேன்."

"பெட்ரோல் எம் பொறுப்பு - நாளை விடிகாலையில் கிளம்பலாம்."

"ரைட், கேப்டன்."

உற்சாகத்துடன் ஸல்யூட் வைத்தாள்.

"காட்டிலேருந்து இதே உற்சாகத்தோட திரும்புவியான்னு தெரியலை..."

"ஏன்? அது எங்கப்பா ரசிச்ச காடாச்சதே..."

"வாழ்ந்த காடுன்னு கூட சொல்லலாம்... அதனால்தான் நித்யன் இந்த வாகனத்தை வடிவமைத்தான் - உங்கப்பா ஏதேனும் சூடாய் செய்து சாப்பிட, நிம்மதியாய், படுக்க, குளிக்கன்னு... அனால்..."

"சொல்லுங்க..."

"உனக்கது ஒத்து வருமான்னு தெரியலை... நீ சொகுசாய் வளர்ந்த பொண்ணு... வெளிநாடு கூட பார்த்தவ..."

"அங்கே இது போல சாகசங்களை விரும்புவாங்க..."

"போன முறை நாங்க காட்டிற்குப் போய் திரும்பும் போது பஸ் கூரையில் 'சொத்'துனு ஏதோ விழுந்தது - அந்திப் பொழுது.. நான் பேசாமல் போயிடலாம்ப்பான்னு சொல்ல, உங்கப்பா கேட்கலை. விழுந்தது என்னன்னு தெரியாமல் அதை நம்ப வீட்டுக்கு கொண்டு போறதான்னுட்டான்.. காரின் முன்புறமாய் மேலேறி பார்த்தால்... பருத்த மலைப்பாம்பு!

"ஹக்..!" - நேத்ராவிற்கு பயத்தில் விக்கியது.

"கார் டயர் போல சுருண்டு கூரையில் கிடக்குது.. கனகதுரை. சொன்னதுபோல அதை வீடு கொண்டு சேர்த்து புண்ணியமில்லை..நீள கம்பெடுத்து தள்ளி விட்டால் அது அசையலை..!"

"ஐயையோ.."

"அதுவாப் போகறவரை காத்திருப்போம்னுட்டார். காலைல நாகராஜா கிளம்பவும், நாங்க வந்து சேர்ந்தோம்."

"அப்ப நமக்கும் ஒரு விறுவிறுப்பான பயணமிருக்கலாம்?"

ஒரு பய புன்னகையுடன் கேட்டாள்.

"எதற்கும் தயாராதாம்மா போகணும்."

"போய் உடனே திரும்பிடலாம் கேப்டன்.."

"அது அவன் விருப்பம்" - கேப்டன் வானத்தைக் காட்டினார்.

"ம்ம்.. காட்டில் நம் இஷ்டத்துக்கு ஏதும் நடக்காதே?"

"உலகம் மொத்தமும் ஆண்டவன் எண்ணப்படிதாம்மா நடக்குது - அதுதான் முறை.. எல்லாருக்கும் நல்லதும் கூட..."

பிரபஞ்சத்தின் பொறுப்பு அத்தனையையும் பரமனின் பாதத்தில் சார்த்தி விட்டு விச்ராந்தியாய் அமர்ந்தார் கேப்டன்.

மறுநாள் நடக்கப் போவது என்ன என்பது தெரியாததால் உற்சாகமாகவே சொல்லிக் கொண்டு கிளம்பினாள் நேத்ரா!



அன்றிரவு அவளுக்கு உறக்கம் கொள்ளவில்லை. உலர்ந்த வேப்பம் பூக்களைத் தணலில் இட்டு சித்ரா அறைக்குப் புகையூட்டி இருந்ததால் கொசுக்களின் பிடுங்கல் இல்லை. 'விலுக்'கென இடையிடையே விழிப்பு முட்டியது.

அதிகாலை காட்டுப் பயணம் மேற்கொள்ள வேண்டும் என்பதால் நாலுக்கெல்லாம் எழும்ப வேண்டும் என்ற காரணத்தால் உறக்கத்திற்கும் விழிப்பிற்குமாய் ஊஞ்சலாடினாள்.

வெந்நீர் வைத்து, குளித்து தயாராகி பனிமலராய் அவள் வேன் கொட்டகைக்குப் போன போது, அதன் மரக்கதவுகள் திறந்து இருந்தன. ஆக கேப்டன் வந்தாயிற்று..!

உற்சாகத்தில், சன்னமாய் விசிலடித்தபடி வேனின் முன்புறக் கதவை திறந்து ஏறினாள்.

மசமசத்த இருளில் அருகே உட்கார்ந்திருந்தவரைப் பார்த்து, 'குட்மார்னிங் கேப்ஸ்' என்றாள்.

பதிலில்லை.

ஆனால் வேன் உயிர் பெற்று உறுமியது.

"சரியான நேரத்துக்கு வந்துட்டேனே கேப்டன்?"

வேன் பின்னோக்கி நகர்ந்தது. ஷெட்டை விட்டு வெளியேறி பின்வலதுபுறம் ஒடித்து, சாலை நோக்கி மூக்கை நீட்டியது.

இங்கு அத்தனை இருளில்லை.

அதில் உட்கார்ந்திருந்தது கேப்டன் அல்ல என்பது புரிந்தது!

"யார்... யாரது?"

வேகமெடுத்தது வாகனம்.

"ஹலோ... நிறுத்துங்க... யாரது?"

"இந்த வாகனத்துக்கு ஒரு ஓட்டுனர் தேவை - அது யாராய் இருந்தால் என்ன?" - நக்கலாய் வந்தது பதில்.

"நித்யன்?"

"நானேதான்" - பதிலில் போலி பணிவிருந்தது.

"நீங்க ஏன்..?" - தடுமாறினாள்.

"இந்த வாகனத்தின் மேலும் உனக்கு உரிமையுண்டு - போகணும்னால் என்னையே கேட்டிருக்கலாம்."

"உரிமையாய் கேட்கும்படி நீங்க நடந்துக்கலையே... இப்பவும் எனக்கு மனமில்லை.. திரும்பிடலாம்."

ஆனால் வாகனம் சீராய் விரைந்தது.

"ஒரு நாள் தான் என்பதால் எனக்குப் பரவாயில்லை.."

பல்லைக் கடித்தபடி கேட்டாள்: "கேப்டன் எங்கே?" "என்னைப் பற்றி தெரிஞ்ச அளவு உனக்குக் கேப்டனை தெரியலை.."

இவள் இறுக்கமாய் உட்கார்ந்திருந்தாள். அவன் தன்னை மட்டம் தட்டுவது பொறுக்கவில்லை.

"வேணுக்கு பெட்ரோல் வாங்கப் போனவர் தன்னை திரும்பிகிட்டார்.. அதாவது நிறைய குடிச்சுட்டார் - மிலிட்டரி பழக்கம்."

"ஓ..?" தன் தலையில் குட்டிக் கொள்ளலாம் போலிருந்தது.

"அதுக்காக நீங்க மெனக்கெட்டிருக்க வேணாம்.."

"மெனக் கெடல்தான்.. ஆனா அதுக்குக் காரணமுண்டு.." அவன் வேண்டுமென்றே நிறுத்த இவள் எரிச்சலாய்,

"என்ன?" - வினவினாள்.

"இதில் ஒரு சுற்று போய் வந்தாச்சுன்னா நீ ஊரை விட்டுக் கிளம்பிடுவேயில்லையா?"

இவளுக்கு நாக்கு தறுதறுத்தது.

அவன் அலட்சியமாய் தொடர்ந்தான் - "தவிர கேப்டனுக்கு மூல வியாதி வேறு - அதிக நேரம் உட்கார முடியாது..!"

அவன் வாய்க்குள் சிரிக்க இவளுக்கு மேலும் எரிந்தது.

"உங்களை நம்ப முடியாதுன்னு தோன்றியது - கேப்டன் கௌரவமாய் தெரிஞ்சார் அதான் அவரைக் கேட்டேன்.."



அவன் புருவம் மட்டுமே உயர்ந்தது - முகம் இலகுவம் திரும்பவில்லை.

"என்னைப் பற்றி ரொம்ப, ரொம்பத் தப்பான கணிப்பு.." இழுச்சியுடன் தலையை ஆட்டியவன் தொடர்ந்தான் - "எனக்கு உன்மேல் எவ்வித ஆர்வமும் இல்லைங்கறதை நீ கவனிக்கலையா? எனக்குப் பெண்களின் நிறம், அளவு, அலங்காரங்களில் மயக்கம் கிடையாது அம்மணி - பண்பு.. அது முக்கியம்! பாசத்தை விட பணத்துக்குப் பறக்கற ஒரு பெண் மேல் எனக்கு ஆசை வரவே வராது.. ஆக உனக்கு ஆபத்தில்லை.."

அவமானம் ஒரு கனத்த போர்வையாய் அவளைப் போர்த்தது.

குன்றி குறுகிப் போனாள்.

## 9

முகத்தை மண்சட்டி போல வைத்திருந்தவள், நித்யன் தந்த பானத்தைப் பருகினாள் - அவன் சுட்டிக் காட்டிய திசைகளை சுரத்தின்றி நோக்கினாள்.

மனதுக்குள் ஏகக் கொந்தளிப்பு!

உத்தமன் போலல்லவா பேசுகிறான்? சிறுமி ஒருத்தியை கெடுத்து அவளைத் தாயும் ஆக்கி விட்டு, பெண்கள் எப்படி உத்தமிகளாய் வாழ வேண்டும் என்பது பற்றி நீளப் பேசும் நீசன்!

ஓரப்பார்வையால் அவனை ஆராய்ந்தாள். கவனமாய் வாகனத்தைச் செலுத்தியவனின் தோற்றம் சற்றும் கயவன் போலில்லை..! கனவுலகில் சஞ்சரிக்கும் கலைஞன் போலவே தெரிந்தமான் -

அந்த மோவாய் சற்று கர்வம் தெரிகிறதோ?

ஏதோ கற்பனைகளில் வாழ்வதால் கூட அத்தகு பாவனை வரலாம்... ஸ்டியரிங்கைப் பற்றியிருந்த அவனது நீண்ட மெல்லிய விரல்களின் நளினம் அவளை மேலும் குழப்பியது.

நித்யன்ஒரு புதிர்தான்...

அவளைப் பற்றி கேள்விப்பட்டது ஒன்று...

அவன் பார்க்க ஒரு விதம் என்றால் பேச்சு முற்றிலும் வேறு வகை..! ஆனால் நாகரீகமானவனாய் தோன்றும் இவன் இக்காட்டில் வந்து வாழ என்ன காரணம்?

கனிந்த ஆரஞ்சு பழம் போல சூரியன் தகதகத்தது.

உலகமே ஒரு செஞ்ஜோதி தேஜசுடன் மினுங்கியது...

அச்சூழலில் அவனுடன் பயணித்ததை அவள் ரசிக்க முயன்ற வேளையில் திடீரென்று இருட்டியது - திகைத்தாள்.

அடர்ந்த வனப்பகுதிக்குள் தாங்கள் புகுந்து விட்டதை உணர்ந்தவளுக்கு உள்ளேயும் ஒரு அச்ச இருட்டு கவிழ்ந்தது.

சிறுவயதிலிருந்தே ஆண்கள் மீது ஊன்றிப் போன அந்த பயம் இப்போது எழுந்து இளித்தது..!

சிறுமியிலேயே நேத்ரா வெகு அழகு. ஒரு நட்சத்திரத்தின் உறவுப் பெண் என்பதாலும் அவள் ஆண்களின் வக்கிர தொடுகைக்கு ஆளாகியிருந்தாள் - அருவெறுப்பான தடவல், வலிக்க வலிக்க கிள்ளல், உதட்டின், உடலின் ஆபாச உரசல்கள் என்று 'சித்தப்பா' என்று தான் நம்பி அழைத்தவனும் அதே ரீதியில் இளிக்க அவள் நம்பிக்கை நசித்து போனது.

ஆண்கள் எல்லாரும் இப்படித்தான்... இவ்வளவுதான் என்ற ஆயாச அச்சம். ஆனால் தன்னை அலட்சியப்படுத்தும் நித்யன் மீது அத்தகு அச்சம் வர வழியில்லை... ஆனால் மாம்பழத்து வண்டு போல எப்படி. ஏன் என்று பதில்காண முடியாது உணர்வு ஒன்று தன்னை குடைவதை உணர்ந்தாள். ஏன் நித்யனின் நினைவு தன்னை இப்படிப் புகுந்து ஆக்ரமிக்கிறது...?

அதிக வெறுப்பால் நேர்ந்த அலைக்கழிப்பா?



மேடு. பள்ளங்களில் குலுங்கி. ஆடி. நகர்ந்த வேன் நின்றது. வெறுமே அவளைப் பார்த்தாள்.

"எனக்குப் பசிக்கிறது" - அவனும் மொட்டையாய் சொன்னான். ஊறுகாய் ஜாடி போல குலுங்கின உடல் வலித்தது -இறங்கி நடந்தால் தேவலை. ஆனால் பாதையின் இருமருங்கும் ஆவேசமாய் வளர்ந்து நின்ற புல்லையும் மண்பாதையையும் சந்தேகமாய் நோட்டமிட்டாள். மரங்கள் அசாத்திய உயரம். பருமனில் வளர்ந்து வனச் செழிப்பைப் புரிய வைத்தன... இருளும். குளிருமான அச்சூழல் அவளுக்குத் தோது படவில்லை. ஆக இறங்கி நடக்கும் எண்ணத்தை கைவிட்டு வெறுமே உட்கார்ந்திருந்தாள் -

"நான் உனக்கு முழு வேலைக்காரனாய் வரலை அம்மணி."

அவனது முரட்டுத் தொனியில் திடுக்கிட்டாள்.

"என்ன... சொல்றீங்க?"

"பசிக்குதுன்னேன்..."

"ஆமா... ஆனால்..."

"காபி போட்டுத் தந்தேன் - இப்ப மறுபடி நானே சமைத்து பரிமாறணும்னு நீ எதிர்பார்க்க முடியாது..."

"இந்த அடுப்பு பழக்கமில்லை..."

"காட்டுப் பயணமும்தான் பழக்கமில்லை... வரலையா? அதுபோல எல்லாம் பழகிக்க வேண்டியதுதான் - இவ்வளவு நேரம் ஒட்டி வந்த எனக்கு இந்த சலுகையைக் காட்டலாம்... தப்பில்லை."

இறங்கி, ஜாக்கிரதையாய் பாதம் பதித்து மறுபக்க வேனுள் போனவள் சற்று தடுமாறுதலுக்குப் பின் எதையோ கிளறி ரொட்டியுடன் ஒரு தட்டில் வைத்து அவனிடம் தந்த நேரம்... கூரையில் 'பட்'டென ஏதோ விழுந்த சத்தம்..!

கண்களை இறுக மூடி அலறியவளின் கைகள் தன்னிச்சையாய் அமர்ந்திருந்தவனின் தோள்களை அழுத்தப் பற்றின...

"என்னாச்சு..?"

"பா... பாம்பு?"

"ஓ...? கேப்டன் பாம்பு கதையெல்லாம் உன்னிடம் சொல்லியாச்சா?" அவன் புன்னகைக்க, மூலிகை மணத்திற்குக் கட்டுப்பட்ட பாம்பாய் அவன் முகத்தையே பார்த்தாள்.

"விழுந்தது வெறும் மரக்கிளைதான்..."

"எப்படித் தெரியும்?"

"இது உலர்ந்த கிளை விழுந்த சத்தம் - இனி என்னைச் சாப்பிட விடலாமில்லையா?"

தன் கைகள் இன்னும் அவனை அழுத்தியிருப்பது கண்டவள், பதறி விலகினாள். வெகு நெருக்கத்தில் பார்த்த அவனது புன்னகை முகமும் நேத்ராவிற்கு அதிர்ச்சிதான்... அதன் அலட்சிய பாவனை கலைந்ததும்தான் எத்தனை கவர்ச்சி அவனது முகத்தில்..! குறும்பும் இளமையுமான சிரிப்பு...

"நீயும் சாப்பிடு..."

"மேலே போய் எதற்கும் பார்த்துடறீங்களா?"

"விழுந்தது பாம்பா பழுதான்னா?"

"ம்ம்..."

"பாம்பாய் இருந்தாலும் பழுதில்லை..."

"ஐயோ!"

"சரி... நாம் திரும்பிடலாமா?" - குழந்தை ஒன்றிடம் கேட்பது போல வினவினான்.

"பாதை எப்படி இருக்கும்?"

"வனத்துறை வந்து போவதால் சுமாராய் இருக்கும்... தக்க பாதுகாப்பு இருந்தால் நடக்கலாம்."

"அதெல்லாம் வேணாம்..."

"ஒளியான மேடையில் ஆயிரம் பேர் பார்க்க நடக்கறது போல ஒயிலாய் நடக்க முடியாது..."



தட்டிலிருந்த முட்டடையை அளைந்தவள் துணுக்குற்றாள்.. தான் ஒரு மாடலும் கூட என்பது இவனுக்கு எப்படித் தெரியும்?

"சாப்பிட்டதும் பாத்திரங்களைக் கழுவி வை... மழை வரும்னு காற்று சொல்லுது."

"ஐயோ..... மழையா?"

"ஏன் மழை பார்த்ததேயில்லையா?"

"வேனை ஓட்ட சிரமமாச்சே.... அதான் இத்தனை இருட்டிடுச்சு போல..."

"சிரமமெல்லாம் இந்த ஒரே நாள்தானே - பரவாயில்லை..." சமைத்த, சாப்பிட்ட பாத்திரங்களைக் கழுவி, துடைத்து அடுக்குவதற்குள் அவளுக்கு முதுகு விண்டது.

"இங்கே படுத்துக்கறதாயிருந்தாலும் சரிதான்" என்று நித்யன் சொல்ல படுக்கை விரித்து படுத்தவளுக்கு, இப்போது குலுங்கல்கள் கூட சற்று சுகமாகவே பட்டன.

விழிப்பு தட்டிய போது ஏதோ ஒரு அருவியின் நடுவே தான் இருப்பதான விதிர்ப்புடன் எழுந்தாள்.... மேலும் இருட்டியிருந்தது.

அது அருவிப் பொழியல் அல்ல மழை என்பது உறைத்தது.

இருளும் இரைச்சலும் ஏற்படுத்திய குழப்பத்தோடு வேன் கதவைத் திறக்க முயன்றவளுக்கு அது முடியவில்லை....

"உதவி... நித்யன்... நித்யன்..." அலறினாள்.

மறுநொடி கதவைத் திறந்தவன் நனைந்திருந்தான்.... நொடியில் அவள் நிலையை யூகித்தவன்...

"ஏதும் பயமில்லை நேத்ரா... ஆனால் வேன் நின்னிடுச்சு..."

"என்னாச்சு... ஏதோ கனவு.... அதான் கத்திட்டேன்."

மழைச் சத்தத்தை மீற இருவரும் இரைந்தே பேச வேண்டியிருந்தது.

"பெரிய மழை.. இது வேகில் ஓயாதுன்னு திரும்பிடலாம்னு பார்த்தேன்.. ஆனால் பாதை சகதியாயிடுச்சு.. தவிர.."

பாதையை டார்ச் வெளிச்சமடித்துக் காட்டினான்.

மரம் ஒன்று தலைவிரி கோலமாய் விழுந்து கிடந்தது.

"கடவுளே.." முனங்கினாள்..

"ம்ம்.. கடவுள்தான் இப்ப நமக்குத் துணை."

"மதிய நேரமே இத்தனை இருளோடிடுச்சே..?"

"ம்ம்.. இனி மழைக்குக் கிளம்பும் பூச்சியெல்லாம் இங்கே புகுந்திடும்." என்றவன் ஜன்னல் கண்ணாடிகளை இழுத்து மூடினான்.

"வேறும். ஒரு தினுசான கோணத்தில் நிற்குதே?"

"முன்னே மரம் விழுந்ததும் ரிவர்ஸ்ல போனேன்... பின் சக்கரங்கள் குழியில்... சகதியில் சிக்கிடுச்சு... ஆக நாம் நகர முடியாது."

கைகளை விரித்தான்.

அதிர்ச்சியில் ஸ்தம்பித்தாள் நேத்ரா..

"எவ்வளவு நேரம் இங்கே.. இப்படியே..?"

வானத்தைக் காட்டி தோள் குலுக்கினான்.

"மழை நிற்கும் வரையா?"

"கடவுளுக்குத்தான் தெரியும்னேன்" - என்றவன் அங்கிருந்த நீள இருக்கையில் சாய்ந்து கண்களை மூட.. திகைத்து கிடந்தாள் அவள்.



## 10

மழை ஓய்ந்திருந்தது - தன் பிரார்த்தனை கேட்கப்பட்டது என்று நன்றியோடு நினைத்தாள்.

வேன் மூலையில் கிடந்த சுள்ளிக்கட்டை வெளியே கொண்டு போய் நெருப்பு மூட்டியிருந்தான் நித்யன்... புகை இதமாய் பரவியது.

அவன் போட்டுத் தந்த காபியைப் பருகி முடித்தபோது தன் தலைவலி பாதியாய் குறைந்திருப்பதாய் பட்டது. வெகு நேரம் காற்று புகாத வாகனத்துள் இருந்ததால் அவளுக்கு தலையைத் தெறிக்க இவள் அரற்றலைக் கேட்டவன் ஜன்னல் கண்ணாடிகளைச் சற்று திறந்து விட்டதோடு, காபியோடு மாத்திரை ஒன்றையும் தந்திருந்தான்.

"நன்றி... மூச்சடைச்சு செத்துருவேன்னு நினைச்சேன்..."

"என்னை எழுப்பறதுக்கென்ன?"

"வேலைக்காரன்னு நினைச்சியான்னு திட்டுவீங்க.."

"என்னை நீ புரிஞ்சுக்கலை.."

"நீங்க மட்டும் என்னைப் புரிஞ்சுக்கிட்டீங்களா?"

"இல்லைதான்.... மகள்கள் பாசமானவங்கன்னு நினைச்சேன்..." வருத்தமாய் தலையசைத்தான்... "ஆனா நீ உங்கப்பாவை வந்து பார்க்கவே இல்லை... அவர் பாசத்துக்கு ஏங்கினவர்.. அத்தனை திறமைசாலி.. தன் திறமையைக் கூட முழுக்க உணராத அப்பாவியும் கூட....."

பேசியபடியே நெருப்பில், நீண்ட கைப்பிடியுள்ள வாணலியில் சில பதப்பட்ட உணவு வகைகளை இட்டு மசாலா

பொடியுடன் அவன் வாட்ட, நூதனமான உணவின் மணம் எழுந்தது.

"இந்த வாசனைக்கு மிருகங்கள் வந்துடாதா?"

"நெருப்புன்னா அதுங்க நெருங்காது."

"அப்பாவோடு இங்கே வந்திருப்பீங்கல்ல..?"

"அடிக்கடி எனக்கும் இந்தக் காட்டுச் சூழல், எளிய வாழ்க்கை முறை பிடிக்கும்..."

ஏதோ ஒரு உந்துதலில் சொல்லி விட்டாள் -

"எனக்கிந்த பாதி சொத்து வேண்டாம்... முழுதும் நீங்களே..."

அவளை முடிக்க முடியாமல் செய்தது அவனது தீர்க்கப் பார்வை.. உதடுகளில் இகழ்ச்சி முறுவல்..

"என் சிறுவயசிலேயே எங்கம்மா தவறிட்டாங்க... ஆனால் அவங்களுடைய அத்தனைப் புடவைகளும் என்னிடம் பத்திரமாய் இருக்குது ஆறு மாதங்களுக்கு ஒரு முறை அவற்றை மாற்றி மடிச்சு வைப்பேன்... நான் அவற்றைப் பயன்படுத்தக் கூடாதுதான்... ஆனால் அவை எங்கம்மா பிரியப்பட்டு வாங்கி உடுத்தியதே காரணம்..."

அவ்வார்த்தைகள் அவளை பலக்க அடித்தன.

'உனக்கு உன் தகப்பன் மீது பாசம் இருந்தால் பாதி வீட்டையேனும் பத்திரப்படுத்து... உன் தந்தை வாழ்ந்த இடமிது என்ற பிரியத்தோடு போன்று...' - என்கிறான்!

இந்த எண்ணம் அவளை இதப்படுத்தியது.

ஆக அவன் சொத்தாசை பிடித்தவனல்ல...!

"ஸாரி..." என்றாள்

"என்ன... எதற்கு?"

"மறுபடி உங்களுக்கு சமையல்கார உத்யோகம் தந்துட்டேன்."

"உன்னை பத்திரமாய் வீடு கொண்டு சேர்த்தால் போதும்..."



சாப்பிட்ட தட்டுகளை, தேங்கின குட்டை நீரில் இவள் கழுவ, பாதுகாப்பாக அவன் அருகேயே நின்றான்.

தீயின் நடனத்தை பார்த்தபடியிருந்த தன் மனம் இளகுவது அவளுக்குப் புரிந்தது.

அவர்களிடையே நிலவிய மௌனம் கூட நெருடவில்லை. நெகிழ்ந்த ஈரமணலில் அவன் விரல்கள் ஓடிச் சுழன்றன - சில கோடுகள், வளைவுகள்... எம்பிப் பார்த்தவளுக்கு அங்கு உருவாகியிருந்த நளினம் ஆச்சரியம்தான்... அதன் வளைவுகளில் ஜீவன் பொதிந்திருப்பதை லயித்து ரசித்த வேளையில் அவளது உச்சந்தலையில் ஒரு பொட்டு மழைநீர் விழுந்தது.

தீயை அணைத்தவன் அவளை வேனுக்குள் ஏற்றினான். போர்வையை எடுத்து நீட்டி "படு... நேத்ரா" என்றான் மிருதுவாய்.

"நீங்க?"

"முன்புற இருக்கையில் சாய்ந்துக்குவேன்..."

"பரவாயில்லை... இங்கயே..."

அவனது புருவங்கள் உயர்ந்தன.

"என்மேல் வந்திருக்கும் இந்த புது நம்பிக்கைக்கு நன்றி... காட்டு மிருகம் ஏதேனும் வந்தால் ஹாரன் அடிக்கணும்."

"ம்ம்... இப்ப உங்களுக்கு காவல்கார உத்யோகம்."

"நல்லவேளை கேப்டன் வரலை... திணறியிருப்பார் மனுஷன்..."

"மழையை எதிர்பார்க்கலியே..?"

"எதிர்பாராதவை காட்டில் சர்வசாதாரணமாய் நிகழும்."

இவளுக்குச் சிலிர்த்தது.

தன்னிலும் எதிர்பாராத ஏதோ ஒன்று நிகழ்ந்து விட்டதான சிலிர்ப்பு..!

சற்று திறந்திருந்த கண்ணாடியைக் காட்டி,

"இது வழியாய் பாம்பு வராதே?" கேட்டாள்.

"பூச்சிகள் ... ஏன் சின்ன பாம்பும் கூட..."

பலக்க சிலிர்த்தவளைப் பார்த்தவன் சிரித்தான் - குறும்பும் ரசனையுமான குறுஞ்சிரிப்பு.

"பயப்பட வேணாம். பூச்சிகளுக்கு ஆகாத ஒரு மருந்தை தெளிச்சிருக்கேன்.. பலமணி நேரத்திற்கான பாதுகாப்பு.."

அவன் கிளம்பு முகம் முழுக்க இழுத்துப் போர்த்தி முடங்கினாள். பின்புற சக்கரங்கள் கீழிறங்கியதால் வேன் ஒரு சௌகர்ய கோணத்தில் நின்றாலும், சற்று உயர்ந்த புறமாய் தலை வைத்து சமாளித்தாள்..

உறக்கம் தயக்கமாய் வந்தாலும் இடையே விழிப்பு 'விருட்'டென வந்தது- புலன்கள் விழித்ததும் கேட்ட அந்த சத்தம் அவளை மிரட்டியது.

'தட்.. தட்.. தட்...' வலுவான சீரான சத்தம்... என்னதது?

பிரம்ம ராட்சஷன் பூமி அதிர நடந்து வருவது போல..?

போர்வைக்குள் முடங்கினாலும் அந்த சத்தம் விடவில்லை... வேனை யாரோ நெட்டித் தள்ளும் அதிர்வு! காட்டு மிருகம் வந்து முட்டுகிறதோ? இந்த வேகத்தில் வாகனம் பழுதாகிவிட்டால்.. இந்த இடத்திலேயே வேன் சமாதிதான்!

முட்டுவது எது - காட்டெருமை, பன்றி.. புலி?

மேலும் படுத்திருக்கக் கூடாமல் எழுந்தவள் முன்புற ஓட்டுனர் இருக்கை பக்கமாய் தட்டினாள். "நித்யன்.... எழுந்திரிங்க.. ப்ளீஸ்.. ஹார்ன் அடிங்க.."

அவள் எதிர்பார்த்ததிற்கு மாறாக பின்புற கதவு திறக்கவும், விதிர்த்துத் திரும்பினாள்..

"என்னாச்சு நித்யா?" நித்யனின் குரல் விசாரிக்க இவளது உடம்பு தளர்ந்தது.

"நீங்க...ளா?"

"என்னைத்தானே கூப்பிட்டே?"

"ஆனா... நீங்க முன்னே படுக்கலையா?"



"பின்னே வேலையாயிருந்தேன்."

"என்ன வேலை?""

சகதியை வெட்டியெடுத்து சமன்படுத்தறேன்.. பின் வேன் சுலபமாய் மேலேறிடும்.."

தன்னையும் மீறி சிரித்தாள். - "நான் புலியோ, எருமையோ வேனை நெட்டுதுன்னு.. நினைச்சுட்டேன்."

அவனும் சிரித்தது இருட்டில் பளீரிட்ட அவன் பல்வரிசையின் பளபளப்பில் புரிந்தது.

"உங்கப்பா இருந்திருந்தால் 'நல்ல பயந்தாங்குளி பொண்ணுடா'ன்னு நொந்திருப்பார்... சித்ரா இத்தனை மோசமில்லை.."

"எனக்கு இதெல்லாம் புதுசு.. என்னிடம் சொல்லிட்டு நீங்க வேலையில் இறங்கியிருந்தால் நானும் ஒத்தாசை பண்ணியிருப்பேன்.."

"இப்படி கூச்சல் போடாம இருந்தாலே ஒத்தாசைதான்.."

கேலியாகவே சொன்னான்.

"அப்ப டீ போடறேன்."

"ரைட் - அது நல்ல வேலை" என்றவன் உள்ளே அமர்ந்தான் முழங்கால் வரை மூடிய அவனது காலணிகளைப் பார்த்தவள்.

"உங்களுக்கும் பயந்தான்... பாதுகாப்பு பலமாய் இருக்குதே.."

"இது முன்னெச்சரிக்கை.. அட்டைப் பூச்சிகள் நம் ரத்தத்தை எல்லாம் உறிஞ்சிட்டால்."

அவளது முக வெளிறலை ரசித்தவன், தட்டுத் தடுமாறி அவள் தேநீர் தயாரிப்பதையும் பார்த்தபடியே இருந்தான்.. இவளுக்கு கூச்சத்தில் மேலும் தடுமாறியது.

ஆவி பறக்கும் தேநீரை இருவரும் ரசித்து பருகினர்... அவன் இறங்கி வேலையைத் தொடர, மல்லாந்து படுத்தவள்

ஜன்னல் வழியே தெரிந்த நட்சத்திர வெட்டல்களையும் தேசலான கால் நிலாவையும் பார்த்திருந்தாள்.

சீரான மண்வெட்டும் சத்தம் கூட இசை போலிருந்தது -

பயங்கள் எல்லாம் மாயமாகி உலகம் மிக வசீகரமாய் தோன்றியது ரகசிய புன்னகையுடன் அதை ரசித்திருந்தாள் அவள்.

## 11

அடித்துப் போட்டது போலத்தான் உறங்கினாள். எழுந்த நேரத்தில் சித்ரா தட்டில் வைத்திருந்த உணவை சாப்பிட்டபின் மறுபடி ஒரு உறக்கம்.. அந்தப் பகல் உறக்கத்தின் கனவுகள் எல்லாம் தித்தித்தன...

ஏன்.... என்ன என்ற காரணங்கள் இல்லாத இனிப்புக் கனவுகள்..!

அன்று காலை காட்டில் பொழுது சற்று புலரவும் இவளும் துணிந்து இறங்கி நித்யனுக்கு உதவினாள்... சக்கரத்தை அடைத்து பிதுங்கியிருந்த சகதியை எல்லாம் வழித்து, பள்ளத்தைச் சற்று சரிவாக்கியிருந்தான். அதைச் சமன்படுத்த இவளும் உதவினாள்.. தனக்குத் தெரிந்த அளவில் ருசியாக ஏதோ உணவைக் கிளறித் தந்தாள்-

"தேவலையே.... நேற்றையை விட இன்று சமையலில் முன்னேற்றம்" என்ற கேலிப் பாராட்டில் பூரித்தாள்!

வியர்த்த அவனது முகத்தை, திரண்ட தோள்களைத் துடைக்க பரபரத்த கைகளை அடக்கி, துவாலையை எடுத்துத் தந்தாள் - அவனது அலட்சிய பாவனையும் மாறியிருந்தது..

அவர்களிடையே காரணமற்று கிடந்த வெறுப்பு ஏதோ ஒரு சார்பாக மாறியிருப்பது போல உணர்ந்தாள்.



வேன் ஒரு வழியாய் உறுமி, சீறி மேடேறி நின்றபோது அவள் உள்ளத்தில் 'சுருக்' கென ஒரு விநோத வேதனை... ஏமாற்றம்.. அது அவளை மிரட்டத்தான் செய்தது.. காட்டிலிருந்து தப்பினோம் என்று இல்லாமல் இதென்ன வேண்டாத உணர்வுகள்?

திரும்பும் வழியில் அவர்களிடையே இறுக்கமில்லை - பேச்சு சரளமாய் உருண்டது. "வேன் இன்னும் சண்டித்தனம் பண்ணியிருந்தால், நாம வீடு நோக்கி நடக்க ஆரம்பித்திருப்போம்.."

"இத்தனை தூரம் நடக்கறதா?"

"பேரைக் காப்பாத்திக்கறது கால்வலியை விட முக்கியமில்லையா? ஒரு ராத்திரி நாம வீடு திரும்பலைங்கறதே ஒரு தினுசான செய்தியாகி இருக்கும்.. உன்னைப் பற்றி யாரும் அவதூறு பேசுவதை நான் விரும்பலை.."

இவனா சித்ராவை.. அவள் 15 வயது சிறுபெண்ணாயிருக்கையில் கசக்கி நாசம் பண்ணியிருப்பான்?

பாக்கியை நித்யன் தூக்கிக் கொள்ளும் போது இருவரின் ஜாடைகளும் ஒத்துப் போகிறதா என்று ஆராய்வாள்... குற்ற உணர்வின்றி நித்யனால் எப்படி இந்தப் பிஞ்சைக் கொஞ்ச முடிகிறது? - குழம்புவாள்.

இத்தனை கரிசனை, கண்ணியமுள்ளவன் காமவசப்பட்டு ஒரு பெண்ணின் வாழ்வை அழித்தவனா? பார்வையிலும் கூட கள்ளமில்லையே..?

இத்தகு கனிவான எண்ணங்கள் வண்ணக் கனவுகளை வரவழைத்தன. அத்தனையிலும் நித்யனே நாயகன்..!

வாளியிலிருந்த சற்று ஆறின வெந்நீரில் குளித்து நேத்ரா வாசல்புறம் வந்த போது அந்தி வானமும் சந்தனமும் குங்குமமுமாய் அப்பி சிங்காரித்துக் கொண்டிருந்தது.

காட்டு மலர்களின் மணம் காற்றில் கலந்திருந்தது.

மனம் பாரம் நீங்கியிருந்ததால் இந்த நறுமணக் காற்றில் தான் மிதப்பதான உணர்வில் நடந்தவளுக்கு சன்னமான சலங்கை ஒலி ஈர்த்தது - தோட்டத்தின் மறுபக்கம் சின்ன பாகீ சிந்திக் கிடந்த பவழமல்லிகளைத் தத்தி தத்தி பொறுக்கிக் கொண்டிருந்தது. அம்மலர்களை நீண்ட துடைப்பக் குச்சிகளில் கோர்க்க நேத்ரா கற்று தந்ததிலிருந்து அதுவே பாகீக்கு பிடித்த விளையாட்டு.

ஆனால் பிள்ளையை நெருங்கியவள் அரண்டு நின்றாள்.

பாகீயின் பின்னால், வெகு அருகே கொடுக்கை உயர்த்திய படி நின்றது ஒரு கருந்தேள்!

அத்தனைப் பருமனில் தேளா.... இதுதான் நட்டுவாக் கிளியோ?

உடம்பு தன் உல்லாசத்தை நொடியில் மறந்து பதறியது... ஆனால் அலறாமல் தன்னை நிமிர்ந்து பார்த்த குழந்தையை நோக்கி,

'சீக்கிரம் வா' என்பது போல அபிநயித்தவள் அப்படியே பின்னால் நகர, பாகீயும் 'குடுகுடு' வென ஓடி வந்தது.

வந்த பிள்ளையை அள்ளி அணைத்தாள்.

இனி அபாயம் தனக்குத்தான் என்று உணர்ந்தாற் போல தேளும் புதர்களிடையே பதுங்கியது.

குழந்தையை முத்தமிட்டவள் மெள்ள கேட்டாள்.

"அம்மா எங்கே?"

"அங்க..." - குழந்தை நித்யனது வீட்டைக் காட்டியது.

"உன்னை இப்படி தனியே விட்டுட்டு என்ன செய்றா ங்கம்மா?" எங்கே உரக்கப் பேசினால் புதர்களில் பதுங்கிக் டக்கும், அத்தனைப் பூச்சிப் பொட்டுகளும் வெளியே வந்து டுமோ என்பதான அச்சத்தில் தணிந்தே பேசினாள்.

"மித்தாயி?" - செப்பு கைகளை நீட்டியது பாகீ.

"தரேன்... முதல்ல வீத்துக்குப் போகலாம்."



அங்கிருந்து அகன்றால் போதுமென விரைந்தவளின் பார்வை இயல்பாய் நித்யனது ஜன்னலைத் துளைத்தது... கீழ்புற ஜோடி ஜன்னல் கதவுகள் விரிந்திருக்க, அதன் வழியே தெரிந்த அரைகுறை காட்சி அவள் விழிகளையும் விதிர்த்து விரியச் செய்தது.

கட்டிலில் இரு ஜோடிப் பாதங்கள் -

ஒன்று ஆணுடையது மற்றது பெண்ணின் தண்டையிட்ட கால்கள்.

அவை சந்தேகமில்லாமல் சித்ரா, நித்யனுடையவை...

அவர்கள் இருவரும் ஒரே கட்டிலில்... படுத்து...

'கப்'பென தொண்டை அடைக்க, தன் அறைக்குள் புகுந்து கொண்டாள் எழுந்த போதிருந்த உல்லாசம் ஒரு நொடியில் உலர்ந்து போனது.

கூடவே ஒரு விதமான குமட்டல்...

ஆக இவர்களைப் பற்றி உலவிய செய்தி உண்மைதான்.

சினிமாத் துறையில்தான் அவள் பாத்திருக்கிறாளே.... நெருப்பில்லாமல் புகை ஏது?

காட்டு வாழ்வில் கட்டுப்பாடு, கற்பு இவையெல்லாம் அவசியமில்லை என்று முடிவெடுத்து விட்டார்கள் போலும்... இல்லாவிட்டால் குழந்தை வெளியே நிற்க இப்படி உருண்டு சல்லாபிக்கக் கூடுமா?

இத்தனை துணிவுள்ளவர்களுக்கு திருமணம் மட்டும் துணிவில்லையா?

அது தேவையில்லை என்ற திண்ணக்கம்!

குழந்தைக்கு மிட்டாய் தந்து நித்யனின் வாசற்படியில் கொண்டு விட்டவள், கதவைத் தட்டவும் சொல்லிவிட்டு, கையில் டார்ச்சுடன் கேப்டன் வீட்டை நோக்கி நடந்தாள்... வேறு போக்கிடம் இல்லையே...

வானமும் உலகும் வர்ணங்களை எல்லாம் கழுவித் துடைத்த திருசில் கறுப்பு வெள்ளையில் இருந்தன... ஒட்ட நடையில் கேப்டனை அடைந்து. அவர் வீட்டிலிருக்க வேண்டுமே என்ற தவிப்புடன் கதவைத் தட்டினாள்...

கதவு திறந்தது... உள்ளே தாளித மணம்.

சற்று அசடு வழிய நின்றார் கேப்டன்... அப்போதுதான் நேத்ராவிற்கும் நினைவு வந்தது... அதிகாலை காட்டிற்கு கூட்டிப் போகிறேன் என்று விட்டு வராததால் வழியும் அசடு இது!

"என்னம்மா இந்நேரம்?... இருட்டிடுச்சே?"

"எனக்கு அத்தனை பயமில்லை கேப்டன்... பழகிடுச்சு..."

மனிதர்கள்தான் பயப்படுத்துகிறார்கள் என்றது உள்மனம்.

"ஒரு நிமிஷம் இரும்மா... ஸ்டவ்வை அணைச்சுட்டு வரேன்."

மறுநிமிடம் துண்டில் கைத்துடைத்தபடி வந்தவர் எதிரே அமர்ந்தார்.

"மன்னிக்கணும்மா நேத்ரா..."

"பரவாயில்ல கேப்டன்... நீங்க வராதது கூட தப்பில்லை. ஆனால் நாம வேனில் கிளம்பப் போற விஷயத்தை நித்யன் காதில் போட்டது நிச்சயம் தப்பு..."

"குடிச்சுட்டா நிலைமை, முக்கியமாய் நாக்கு கட்டுக்குள் அடங்கறதில்லை..."

முணங்கினார் - "ஆக நித்யன் உன்னைக் கூட்டிப் போனான்ங்கறது தெரியும்... எப்படியிருந்தது வனவாசம்?"

விவரங்களைச் சொன்னாள்.

"ஆக நித்யன் உடன் இருந்தது நல்லது... பத்திரமாய் நீங்க வந்து சேர்ந்தது கடவுளின் கருணை..."

"ம்ம்..."

"சாப்பிடேம்மா..."

"ப்ச்... பிறகு ஆகட்டும்."



"உனக்கு நித்யனைப் பிடிக்கலை இல்லையா?" இருவரும் மற்றவரை நேருக்கு நேர் பார்த்தனர் - ஒளிவு மறைவற்ற நேர்மைப் பார்வை!

சற்று முன்பே காண நேர்ந்த இரு ஜோடிப் பாதங்களும் தன் இதயத்தில் ஏறி மிதிப்பதாய் பட்டது நேத்ராவிற்கு...

"ஆமாம் பிடிக்கலை... வெறுக்கறேன்னு கூட சொல்லலாம்."

"நமக்குப் பிடிக்காதவங்களை நம்மால் வெறுக்கக் கூடாதும்மா... நெருக்கமானவர்களால் தான் வெறுத்துக்க முடியும்... அதுவும் ஒரு நெருக்கமான உணர்வு."

நேத்ரா திகைப்புடன் அவரைப் பார்த்தாள்.

"நித்யன் நல்லவன்ம்மா... ஒதுங்கி இருக்கிறானே தவிர. நம்பகமானவன்..."

"ஓஹோ? அதான் உங்களை குடிக்க வைத்து. நாம கேரவேன்ல போகும் விஷயத்தை உங்களிடமிருந்து கறந்துட்டாராக்கும்?"

பரிதாபமாய் இவளை ஏறிட்டார் கேப்டன்-

"எப்படி தெரியும்னு பார்க்கறீங்களா? எல்லாம் ஒரு யூகம்தான்... நித்யன் உங்களுக்குத் தாராளமாய் தயாளனாய் ஊற்றித் தந்தார் இல்லையா?"

"நீ நக்கலாய் சொன்னாலும் அவனுக்கு இளகின மனசம்மா..."

"அப்படிப்பட்டவரால் சித்ராவைக் கல்யாணம் பண்ணி அந்தக் குழந்தையின் தகப்பனாய் இருக்க மட்டும் முடியலையாக்கும்?"

கேப்டன் நீண்ட பெருமூச்சுடன் நடந்தார்.

"நித்யனுக்குப் பிடிக்காதுதான்... ஆனால் விவரத்தை இனியும் உன்னிடமிருந்து மறைக்கறது தப்பு... உனக்கு உண்மை தெரியணும்."

திடீரென மரங்கள் கூட ஆடுவதை நிறுத்தி கேட்கும் பாவனையில் நின்றது போலிருந்தது.

"சித்ராவின் குழந்தை நித்யனுடையதுன்னு... உனக்கு சொன்னது யார்?"

"வந்ததும் கேள்விபட்டேன்."

"இல்லாததையும் பொல்லாததையும்

ஊடும் பாவுமாய்

உபயோகித்து

நாக்குத் தறியில்

நாளும் பொழுதும்

வசவு என்னும்

நெசவு செய்ய... கவிதை என்னுதில்லையம்மா - கவிஞர் வாலியின் வரிகள்..! சித்ரா கல்யாணமில்லாமல் கர்ப்பம்னதும் ஊர் கண்டபடி பேசியது... நித்யனும் மறுத்துப் பேசாமல் அவர்களை நம்பும்படி விட்டுவிட்டான்... ஆனால் பாகீ நித்யனின் மகனில்லை..."

மூச்சும் விட மறந்து பேசியவரை பார்த்திருந்தாள் நேத்ரா...!

## 12

கேழ்வரகு தோசை, சட்னி என்று இரவு உணவை த்தபின் பாத்திரங்களை கழுவி வைத்த நேத்ரா சிந்தனையுள் கியிருந்தாள். கேட்ட உண்மைகள் எல்லாம் அவளை டித் தள்ளின.

"கேட்டன்... நீங்க குடிக்கட்டு...?"



"உளறலைம்மா... சொன்னதெல்லாம் உண்மை - உண்மையைத் தவிர வேறில்லை..."

"அப்ப, பாகீ..?"

"சித்ராவின் 15ம் வயதில் உருவாகிப் பிறந்த குழந்தைதான். ஆனால் தகப்பன் அசலூர்க்காரன்... அசலில் திருமணம் செய்வதை மலைஜாதிகள் வெறுப்பவர்கள்... மலையில் ஆராய்ச்சி செய்ய வந்த குழுவில் ஒருவன் சித்ராவோடு சில வாரங்கள் பழகி... கல்யாணம் செய்துக்கறதாகவும் சொன்னான்..."

"எல்லாரும் காரியம் ஆகும் வரை சொல்றதுதான்..."

"இருக்கலாம்... ஆனால் இந்தப் பையன் கீழே போன ஒரே வாரத்துல விபத்தில் இறந்துட்டான்..."

"கடவுளே..."

"சித்ரா மனசொடிஞ்சு போனாள்- அவன் நண்பர்கள் சொல்லி விட்டதால் நித்யனும் கூட கீழே காரியத்துக்குப் போய் வந்தான்..."

"அப்ப சித்ரா, நித்யன்... பற்றிய வதந்தி?"

"தீ சுட்டெரிக்கும்தான்... ஆனால் பாதுகாப்பும் கூட இல்லையா..? சித்ரா அந்த ஆராய்ச்சி மாணவனோடு பழகுனது பலருக்குத் தெரியாது அவங்க காட்டில் கூடாரம் அடிச்சுத் தங்கியிருந்தாங்க... சித்ராவின் வயிறு பெரிதாகவும்தான் பேச்சும் கிளம்பினது... அந்த வதந்தியை நித்யம் ஆதாயமாக்கிக் கொண்டான்..."

"அதெப்படி ஆதாயம்? அவமானம் தானே...?"

"எங்கேயும் போல இங்கும் ரௌடிங்க உண்டு... தவறிப் போனவன்னு சித்ராவைக் கேவலப்படுத்தியிருப்பாங்க... தாங்களும் அவளை தப்பாய் நெருங்க முயற்சிப்பாங்க... நித்யனுக்கு இங்கே நல்ல மதிப்பு... ஆக சித்ரா அவனுக்கு உரியவள்னு யாரும் நெருங்க மாட்டாங்கன்ர திட்டம்..."

"ஓஹோ?"

மறுமுறை அனைத்தையும் விலாவாரியாக கேட்கவும் தான் இவளுக்கும் மனதில் ஆனது.

"நித்யன் சித்ராவிற்கு ஒரு பாதுகாவலாய் இருந்தான் - முரட்டு பசங்களும் ஒதுங்கிட்டானுங்க... உங்கப்பாவும் இதெல்லாம் புரிஞ்சு காணாதது போல நடந்துகிட்டார்..."

இவள் விழிகளில் தேக்கி நின்ற கேள்வி புரிய, சற்று தயங்கிய கேப்டன் தொடர்ந்தார்.-

"உங்கப்பாவிற்கு ஏன் சித்ராவின் மேல் இத்தனை கரிசனைன்னு நினைக்கறே..."

"ம்ம்... அப்பாதான் அவளுக்கான பெயரைத் தேர்ந்தெடுத்தாய் கூட சொன்னாள்..."

"உண்மைதான்... என்னா அவர்தான் சித்ராவிற்கும் அப்பா..."

திகைப்பாய் நின்றவளின் தோளை ஆறுதலாய் தட்டியபடி தொடர்ந்தார்.

"இங்கே தனியாய் இருக்கும் அனுபவத்தால் சொல்றேம்மா - உலகில் கொடுமையான விஷயம் தனிமைதான்... பெண்கள் கூட சமாளிச்சிடுவாங்க ஆனால் ஆண்களின் பாடு திண்டாட்டம்தான். சிறுவயசில் முட்டாளாட்டம் ஒரு ஸ்பானிய பழமொழியை கெத்தாய் எடுத்து விடுவேன் -

'ஒரு பிரம்மசாரி மயில்.
நிச்சயம் செய்து கொண்டவன் ஒரு சிங்கம்
மணமுடித்தவன் ஒரு கழுதை?

நாளாக நாளாகவும் தான் புரிஞ்சது - தனியே நிற்பவன்தான் முட்டாக் கழுதைன்னு... ம்ப்ச்... காலம் கடந்திருச்சு..."

"என்ன சொல்ல வர்றீங்க கேப்டன்?" முணங்கினாள்.

"உங்கம்மா விலகினதால், ஊர் ஊராய் அலைஞ்ச உங்கப்பா மலைகளில் காடு, பறவை, மிருகம்னு படம் பிடிச்சு, அது பத்தி கட்டுரைகளும் எழுதுவார்... அப்பதான் ஆதிவாசி



இளமையான கொழுந்துவைச் சந்திச்சிருக்கார்... அவங்க இனத்துல வேத்து ஆண்களைப் பார்க்கவும் கூடாது... அவ கழுத்தில் தாலி கட்டி ஊரை விட்டே கூட்டிட்டு வந்துட்டார் கனகராஜ்..."

ஆக சித்ரா தன் தங்கை..!

தலை குடைராட்டினம் போல வேகமெடுத்துச் சுழன்றது.

"கனியூத்துல குடித்தனம் பண்ணுனாங்களாம்... சித்ரா ரெண்டு வயசுக் குழந்தையாய் இருக்கையிலேயே விஷக்கடியில் கொழுந்து இறந்துட்டாள்... சிறு பெண் குழந்தையை தான் வளர்க்க முடியாதுன்னு அஞ்சின உங்கப்பா சித்ராவின் சித்தியை அழைச்சார்... அவளுக்கு மட்டும்தான் இவங்க காதல் தெரியும்... அவள் புருஷனுக்கு காசு ஆசைக் காட்டி இந்தப்புற மலைக்கு அழைத்து, சித்ராவை அவங்களிடம் ஒப்படைச்சார்... அவங்க குடும்பத்தில் வளர்த்தால் அந்தக் கூட்டத்தின் மொத்த பாதுகாப்பும் சித்ராவிற்குக் கிடைக்கும்... சதா காட்டுக்குள் போய் வரும் ஆபத்தான வாழ்வு வாழும் தன்னை நம்பி ஒரு பிஞ்சு இருப்பதை அவர் விரும்பலை... இங்குள்ள கூட்டத்திற்கு துணி மணி செய்ய, கூடை முடையன்னு ஊக்குவிச்சு..."

"அவற்றை ஏற்றுமதி கூட செய்றாங்களாமே...? நித்யனின் மூலம்...?"

"அதாம்மா கரிசனையானவன், நியாயவான்னு சொன்னேன்ல? கனகராஜ் நிம்மதியாய் கடைசி காலத்தைக் கழிச்சதும் அவனால்தான்..."

"நித்யனுக்கு என்ன வயசிருக்கும்?"

"முப்பதைத் தொட்டிருக்கலாம்."

"இந்த வயசில் கொடுமையான தனிமையை நாடி ஏன் அவர் வரணும்?

கேப்டனின் பார்வை நகைத்தது-

"உங்கப்பாவைப் பற்றி சொல்ல, நீ நித்யனைப் பற்றி ஆராயறே?"

சங்கடமாய் விழித்தவள் - "இல்லை.. சித்ராவைப் பற்றி சொல்லுங்க.." முடித்தாள்.

"சித்ரா மீது அதிக பாசம், தன் உரிமையைக் காட்டுவது மகளுக்கு நல்லதில்லைன்னு முழுக்க ஒதுங்கிட்டார்.. நித்யன் வரவும் அந்தக் கூட்டமும் நல்லாத் தலையெடுத்திடுச்சு... சித்ராவிற்கே இந்த உறவு தெரியாது! அறிந்தது நான் உள்பட வெகு சிலர்தான்.."

"அதில் நித்யனும் உண்டு.." என்று ஆரம்பித்தவள் தன் நாவைக் கடித்துக் கட்டுப்படுத்தினாள்.

"தனக்குப் பிறகு சித்ராவை நித்யன் பொறுப்பாய் கவனிப்பான்னு அவருக்குத் தெரியும்.. அதான் வீட்டை, மற்ற பணத்தை பாதி உன் பேரிலும் மறுபாதியை சித்ராவின் பேரிலுமாய் எழுதிட்டார்... அது வெளியே தெரிய வேண்டாம்னுதான் நித்யன் சொத்தின் ஒரு பாதி தன் பேரில் இருப்பதாய் காட்டிக் கொள்கிறான்... சித்ராவின் இனத்தில் மறுகல்யாணம் சாத்தியம்.. அவள் பிறப்பில் ஜாதிக் கலப்பில்லைன்னு பட்டால் அவங்க இனத்திலேயே அவளுக்கு ஒரு நல்ல மாப்பிள்ளை கிடைக்கக் கூடும்."

பெருமூச்செறிந்தாள் நேத்ரா.

"அப்பாவின் வாழ்வு விநோதமானதுதான்.. ஆனால் அவர் என்னை அழைச்சு... இதையெல்லாம் அவரே என்னிடம் சொல்லியிருக்கலாம்."

"உங்கம்மா வேறு ஒருவரோடு வாழ்வதாய் தெரிய வந்ததாம் - வேண்டாம்ன்ர நல்லெண்ணம்தான்.."

கண்ணீர் தேங்கிய கண்களை வேறு பக்கம் திருப்பிக் கொண்டாள்.

தகப்பனை பார்த்தறியாத அந்த மகள்.

"[illegible] கையில் காசு பணம் புழங்க ஆரம்பித்ததும் உன் கல்லூரி விடுதிக்கான பணத்தை அவர்தாம்மா கட்டினார்.. அதில் அவருக்குத் தனி சந்தோஷம்.."



"அம்மா அது பற்றி ஏதும் என்னிடம் சொல்லலியே?"

"உன்னை ரெண்டு அப்பாக்களின் நடுவே அல்லாட விடக் கூடாதுன்ர எச்சரிக்கை.. உங்கம்மாவிடம் தன்னை பற்றி ஏதும் சொல்ல வேண்டாம்னே சொல்லிட்டாராம்.. ஒரு பெண்ணிற்கு இரு அப்பாக்கள்ரது கொடுமையல்லவா?"

உண்மைதான் என்பதாய் தலையாட்டினாள்.

தலைகுனிந்து அமர்ந்திருந்தவளிடம் ஆதூரமாய் கேட்டார்-

"என்னம்மா யோசனை..."

"கொடுமை எல்லா இடத்திலும் நடக்குது கேப்டன்.. நித்யன் சித்ராவின் உறவு இப்போ.. எப்படி?"

"பாசமான உறவம்மா.. தினம் வந்து ஏதேனும் ஒத்தாசை செய்துட்டுப் போவா.."

'என்ன விதமான ஒத்தாசைகள்?' என்று மனம் வக்கிரமாய் கேட்டது. "நித்யனும் பாசத்துக்கு ஏங்கினவன் - தாயில்லை... தகப்பனும் சரியில்லாதவர் போல.. ஆனால் தன் கடமைக்காக நித்யனுக்கு ஒரு பெண் பார்த்து பேசி வைத்தாராம் - பெரும் பணக்காரியான அந்தப் பெண்ணிடத்தில் குணம், பண்பு இல்லையாம்... இவன் எதிரேயே பிற பசங்களோட கூத்தடிச்சதாம்.. அப்பாவோ காசுக்காக மகன் அவளைக் கட்டினாவே ஆச்சுன்னு குதிக்க பயல் இங்கே வந்து பம்மிட்டான்.."

"அப்படி ஒளியற ஆள் மாதிரியில்லை... துணிஞ்சவர் தான்.." இவள் கடுக்க, கேப்டன் புன்னகைத்தார்.

"சீறுறது எல்லாம் நம்மிடம்தான்... அது ஒரு நிஜமான தற்காப்பு கேடயம். யாரும் தன்னை அண்ட விடாமல் செய்ற முள்வேலி. தான் விரும்பிய எளிய, தனி வாழ்வு அமைஞ்சிடுச்சி.. இனி ஆந்திரா வரலைன்னு தன் அப்பாவிடம் எழுதி போட்டுட்டான்.."

"ஆக ஆந்திராவா?"

"தமிழ்தான்.. அவன் முன்னோர் பிழைக்கப் போன இடம் அது. வரையில் ஆர்வமுள்ளவன் என்பதால் இங்குள்ள குகை கோவில்கள் பற்றி கேள்விபட்டு சுற்றி வந்தவனிடம் யாரோ உங்கப்பா பத்தி சொல்ல.. தேடி வந்தான்.. ரெண்டு பேருக்குமே பார்த்ததுமே பத்திகிச்சு!"

"இதென்ன காதல் மாதிரி விவரிக்கறீங்க?"

"பிரியம் அப்படித்தான்.. தாயம் மாதிரி அப்பப்ப விழும் - சில பேரோடு ஆயுசு முழுக்க இருந்தாலும் ஒரு நெருடலோட வாழ்வோம்."

நேத்ரா ஏக்கத்தோடு தன் தாயை நினைத்தாள். எத்தனை நெருங்கிய உறவு? இருப்பினும் அவர்களிடையே எத்தனை முரணான விருப்பங்கள், நோக்கங்கள்?

அம்மாவின் அலை பெரிய திரையில் ஓய்ந்து இனி சின்னத்திரையில் முடங்க வேண்டியதுதான் என்றாக, தாய்க்கு மகளை பெரிய திரையில் இட்டு பெருங்காக பார்க்கும் ஆசை ஆரம்பித்தது.

'எங்க காலத்துல இந்தக் காசு கிடையாதுடி நேத்ரா - இப்ப 40, 50 லட்சம் வரை ஹீரோயின்களே வாங்குறதுங்க.. தேடி போகாமல் வலிய வர்ற வாய்ப்பை ஏன் உதைக்கறே?'

என்று ஆரம்பிக்க, நேத்ரா தாயிடமிருந்து மேலும் ஒதுங்கினாள். ஒதுங்கிய அப்பாவும் இப்போது இல்லை..

தன் அநாதை என்ற உணர்வு அவளைச் சுற்றி இறுக்கியது. அதிலும் சற்று முன் கண்ட காட்சி வேறு வதைத்தது..

"அழாதேம்மா.."

"வேறென்ன செய்யன்னு தெரியலையே கேப்டன்" - என்றாள் பரிதாபமாய்.



## 13

வெளியே பேச்சுக் குரலும், தண்டையின் சிணுங்கலும் கேட்க அவசரமாய் முகம் துடைத்துக் கொண்டாள்.

தட்டாமலேயே திறந்த வாசற்கதவு, நித்யனை உள்ளே விட்டது. பதட்டம் பூசிய அவன் முகம் நேத்ராவைக் கண்டதும் மகா நிம்மதியானது! ஆனால் ஏதும் பேசவில்லை.

அவன் பின்னே மூச்சிரைக்க வந்த சித்ராதான்,

"சொல்லிட்டு வரக்கூடாதாம்மா.." என்றாள் அவதியாய்.

நித்யனின் கையிலிருந்த பாகீ இவளை நோக்கி கைநீட்டி சிரித்தது -

"சும்மா நடக்க ஆரம்பித்தவள் அப்படியே இங்கே வந்துட்டா... சாப்பிட்டுப் பேசியதில் நேரம் நழுவினதே தெரியலை.." சமாளித்தார் கேப்டன்.

இவளுக்கு அருகருகே நின்ற நித்யன், சித்ராவைப் பார்க்க எரிந்தது.

"பயந்துட்டோம் கேப்டன்.. நேத்ராம்மா தூங்கறாங்கன்னு இருந்தோம்.. சின்னவரு வரைய ஒவ்வொரு போட்டோ படமாய் மாத்தி மாத்தி பார்த்ததுல எங்களுக்கும் நேரம் போனது தெரியலை.."

இவள் தன் தங்கை என்ற உணர்வுடன் சித்ராவை புதுமையாய் பார்த்த நேத்ராவிற்கு பேச்சு எழவில்லை.!

கேப்டன் பேச்சை வளர்த்தார்.

"உங்கப்பா எடுத்த 'போட்டோக்களம்மா... அவற்றை ஆதாரமாய் கொண்டுதான் நித்யன் ஓவியங்களை வரைவான்..

ளைதுரைக்கும் அவனுக்கும் ஒரே ரசனை.. அதை வெவ்வேறு கலைவடிவில் வெளிப்படுத்துவாங்க..."

இத்தனையிலும் நித்யன்வாய் திறக்கவேயில்லை - அவன் விழிகள் இவளை விட்டு விலகவுமில்லை.."

கேப்டன் ஏதோ உணர்ந்தவர் போல கேட்டார்.

"நித்யனும் நீயும் சேர்ந்து படங்களைப் பார்த்துக் கொண்டிருந்தீங்களா சித்ரா?"

"ம்ம்.. இதுவா அதுவா.. இல்லை இரண்டுமே இணைஞ் சப்பல வரையவான்னு ஒன்று மேல மற்றதை வச்சு பார்த்தாரு.. நானும் பிடிச்சுட்டு நின்னேன்.. பாகீ குட்டி கதவைத் தட்டவும் ஏதேனும் சமைக்கலாம்னு போனேன். அப்பறமும் அரவமே இல்லாமல்னுதான்.. தேடினோம்.. சின்னவர் பதறிட்டாரு.."

தன்னையே குடைந்த அவன் விழிகளைத் தவிர்த்தாள்.. சித்ராவின் பேச்சில் பார்வையில் கள்ளமேயில்லை... இவள் தன் தங்கை என்ற பாச உணர்வு வேறு பெருகி முட்டியது.. ஆக இருவரும் கட்டிலில் சாய்ந்தமர்ந்து படங்களைப் பார்த்ததைத் தான் தப்பர்த்தம் செய்து விட்டோமோ? மேல்புற ஜன்னல் கதவுகள் மூடியிருந்ததால் அவர்களது மேல்புறம் தெரியாமல் கற்பனை கன்னாபின்னாவென சிதறி..

அக்கற்பனை ஏன் தன் மேனி முழுக்கக் காந்த வைத்தது..? 'பபப்' என்று வத்தல் தடவியது போல எரித்ததே... அதுதான் பொறாமையா?

ஏன் பொறாமை..?

நித்யன் மீதுள்ள அந்த விருப்பத்தாலா..?

உடம்பெங்கும் குளிர்நீர் ஓடுவது போலத் தோன்ற வெலவெலத்தாள்.

"கிளம்பலாமா?"

அவன் குரலைக் கேட்க ஏனோ பரவசமாய் இருந்தது



"நாலு கேப்பை தோசை வார்க்கவா? பொடி இருக்குது - தொட்டுக்க."

"இருட்டிடுச்சே கேப்டன்... இனியும் தாமதிக்கறது நல்லதல்ல.. அங்கேயும் சாப்பாடு தயார்.. சாப்பிடும் சூழ்நிலை தான் இல்லை.."

சொல்லிக் கொண்டு கிளம்பினார்கள்.

வழிநெடுக சித்ரா பேசியபடி வந்தது மற்ற இருவருக்கும் வசதியாய் போனது. குழந்தையை ஏந்தி மறுகையில் டார்ச்சுடன் நித்யன் முன்னால் நடக்க, பெண்கள் இருவரும் தொடர்ந்தனர்.. நடக்க அஞ்சும் பாவனையில் சித்ராவின் கையைப் பிடித்துக் கொண்டாள் நேத்ரா..

நித்யனின் வழக்கமான குதர்க்கப் பேச்சை ஏன் காணோம்?

இத்தனைத் தீவிரமாய் என்ன யோசிக்கிறான்? மூன்று நாட்களுக்கு முன்பும் கூட அவனது குத்தல் கேள்வியும் அதற்கு தான் சூடாய் பதிலடித்ததும் நேத்ராவின் நினைவிற்கு வந்தது -

அன்று வித்யாவும் இவளைப் பார்த்துப் போக வந்திருந்தாள் - நேத்ராவைப் பார்த்ததும் புலம்பித் தீர்த்தாள் -

"இதென்ன.. வந்த நாலைஞ்சு நாளிலேயே இப்படி வாடிப் போயிட்டீங்க.. மெழுகு பொம்மையாட்டம் இருந்தீங்க.. இப்ப கொசு கடிச்ச முகம், மேனியெல்லாம் தடிப்பு..! உங்களுக்கு இந்த இடம் ஒத்துக்காதுன்னு, வந்ததும் சொன்னேனே?"

"நான் வந்த காரணமும் உங்களுக்குத் தெரியுமே வித்யா - இரண்டு வாரமேனும் இங்கேத் தங்கணும்னு சென்னை வேலைகளை எல்லாம் முடிச்சிட்டு வந்தேன்.. ஆக.."

"நேற்று உங்களுக்கு ஏதோ ஒரு தந்தி வந்ததாமே?"

சிற்றூர்களில் செய்திகள் தந்தியை விட வேகமாய் பரவுகின்றன என நினைத்தவள்- 'ஆமாம்' என்றாள் பொதுவாக.

"என்ன விஷயம்?"

"வேலை விஷயந்தான்"

"நாம இல்லைன்னால் சரிவராதே."

"அதில்லை நான் வடிவமைத்த சில நகைகள் மறுவாரம் மேடையேறணும். அந்நேரம் நான் அங்கே இருந்தால் பெரிய நகை வியாபாரிகளின் அபிப்ராயம் தெரியவரும் - ஆர்டர்களும் வரும்."

"ஆனால்.. நீங்க போகலையா?"

"பார்க்கலாம்.."

"மெலிஞ்சிட்டீங்க... வேலைக்காரி ஒருத்தியை அனுப்பட்டுமா?"

"நித்யனும் சித்ராவும் உதவறாங்க.."

நான் அந்த இருவரையும் பற்றி அத்தனை 'எடுத்துச்' சொல்லியும் புரியவில்லையே என்பது போல சலிப்புடன் பார்த்த வித்யா,

"பிறருக்கு ஏன் சிரமம் தரணும்? வீடுன்னால் துணி துவைக்க, பெருக்க, சமைக்க, கழுவன்னு நூறு வேலைகள்.. தவிர உங்களுக்கு அதெல்லாம் பழகியிராது."

"உண்மைதான் ஆனாலும் பொழுதை வேறு எப்படித்தான் கழிக்கறது?"

"நாளை காலை ஒரு பொண்ணை அனுப்பறேன். அறையைச் சுத்தப்படுத்தட்டும் - பத்திரிகைகளும் கொடுத்து விடறேன்."

"நன்றி."

"நீங்க ஜாக்கிரதையாய் இருக்கணும் - ராத்திரி கதவைத் தாழ் போட்டுக்கறீங்கல்ல?"

ஏனோ நேத்ராவிற்கு எரிச்சலாய் வந்தது.

மறுநாள் வந்த வேலைக்காரப் பெண் மஹா சோம்பேறி. வந்ததும் பட்டணத்து பணிப்பெண்களைப் போல காபி போட்டு குடித்து விட்டு உட்கார்ந்து வம்படித்தாள்!



"ஏம்மா இத்தினி நாளாய் நீங்களா கூட்டினீங்க? அந்த சித்ராப் பொண்ணைச் செய்யச் சொன்னா என்ன?"

"கைவேலை செய்த பின் ஒரு மாற்றத்துக்காகத்தான் அவள் இங்கே வர்ரது.."

"என்னம்மா, புரியாமல் பேசிட்டு..? அவ வர ஒரே காரணம் சின்னவரோட குலாவத்தான்.. வெக்கங் கெட்டு பிள்ளையையும் இடுக்கிட்டு வந்திருதா.."

"நீ வேலையைப் பாரம்மா."

அவள் கொண்டு வந்திருந்த பத்திரிகைகளும் நேத்ரா விலகினாலும் வந்தவள் லேசில் விடுவதாயில்லை. தன் எரிச்சல் புரிந்துதானோ என்னவோ பணிப்பெண் மறுநாளிலிருந்து வரவில்லை.!

ஊர் முழுதும் ஒருவனை இப்படியா தூற்றும்?

அப்படிப்பட்டவர் தன்னிடமிருந்து இத்தனை ஒதுங்கி நிற்கிறான்.?

அந்தக் கனவு கண்களும் மெல்லிய விரல்களும் அவனை காமாந்தரனாய் காட்டவில்லையே?

இந்த எண்ணங்களுடன் வாசற்படியில் உட்கார்ந்திருந்தவளை நித்யனின் கேள்வி சொடுக்கி விட்டது -

"என்ன ஏங்கி உட்கார்ந்தாச்சா? ஆண்களின் பாராட்டும் பகட்டுமான பட்டண வாழ்வை நினைத்து ஏக்கமா?"

தனக்கு எது தேவையில்லையோ, அதையே அவன் குறிவைத்து குத்த, 'சர்' ரென கோபம் பொறுமியது.

"எனக்கென்ன தேவைன்னு உங்களுக்கு எப்படி தெரிந்தது?"

"எல்லா அழகான பெண்களின் ஏக்கமும் புகழ், பாராட்டிற்குத் தானே?"

"எனக்கது பற்றி தெரியாது. எனக்கு அதுதான் தேவைன்னால் நான் இங்கு வரும் அவசியமுமில்லை.. அது

மட்டும் தெரியும். தவிர பெண்களைப் பற்றி நீங்கள் பத்திரம் வாசிக்கவும் வேண்டாம்.''

அவனது புருவங்கள் கிண்டலாய் மேலேறின. அந்த அரைத் தூக்க விழிகளின் ஓரமாய் சிரிப்பு!

''என் நினைவுகளைப் பற்றி ஆராய்வதை விட்டுவிட்டு உங்க செய்கைகள் சரியா, முறைதானான்னு யோசிங்க - அது போதும்.''

''என்ன என் செய்கைகள்..?'' தோள் குலுக்கினான்... ''நான் ஏதும் செய்யலியே.. ஓஹோ? உன்னை ஏதும் செய்யாததுதான் உன் கோபத்தின் காரணமா?''

அந்த கேலி கசக்க, அறைக்குள் போய் அடைந்து கொண்டாள் ஆனாலும் விடாமல் கனவுகளில் துரத்தத்தானே செய்தான்..!

இப்படி ஒருவரை ஒருவர் பிராய்ந்த நிலைமை, காட்டிற்குப் போய் அவர்கள் திரும்பிய போது மாறியிருந்தது– இருவரிலும் சற்று இளக்கம்.. இணக்கம்.

சற்று முன் ராக்கெட் வெடி போல தன்னுள் எழுந்த பொறாமைச் சீறல்... இப்போது நித்யனின் மௌனம் தரும் அவஸ்தை... எல்லாமே நேத்ராவிற்கு புதிய உணர்வுகள்..

புரியாத அவஸ்தைகள்..!

பக்கத்து போர்ஷனின் கதவு திறந்து பின் மூடுவது கேட்டது சித்ராவை வீடு சேர்த்து விட்டு திரும்பியிருக்கிறான் போலும்..

பத்தாம் நிமிடம் இவளின் கதவு தட்டப்பட, அவசரமாய் போய் திறந்தாள்

சிறு பிளாஷ்க் மட்டுமே கதவோரமாய்–

இவளுக்காக தினம் பசும்பால், காய்கறி, பழம் என்று பொருட்கள் வரவழைக்கப்படுகின்றன - கெட்டியான பாலைப் பருகியபின்னும் லேசில் உறக்கம் நெருங்கவில்லை... ஆனால் கனவுகள் திகுசு திகுசாய் வந்தன.. அவளைப் படுத்தின...!



## 14

அதிகாலை எழுந்தவளின் சிந்தனை தெளிவாகி இருந்தது - என்ன செய்ய வேண்டுமென முடிவெடுத்திருந்தாள்.

அதற்கான வேலைகளில் மும்முரமாய் ஈடுபட்டாள்.

நித்யனுக்கும் சித்ராவிற்கும் கடிதங்கள் எழுதி பெட்டியிலிருந்த உறைகளில் தனித்தனியே இட்டாள். இரவே யாருக்கு எப்படி எழுத வேண்டுமென தீர்மானித்திருந்தாள் சீக்கிரமாக அந்த வேலையும் முடிந்தது.

சித்ராவிற்கான உறைக்குள் தன் கழுத்து நகை, மோதிரத்தைக் கழற்றி இட்டாள். கொண்டு வந்திருந்த ஒரே நல்ல புடவையையும் சித்ராவுக்கென்று எடுத்து வைத்தாள்.

நித்யனுக்கு என்ன விட்டுப் போவது என்று தெரியவில்லை.. தன்னில் பாதியை விட்டுச் செல்வது போன்ற உணர்வு அவளை அச்சுறுத்தியது. இத்தனையாக அவன் நினைவு தன்னை ஆக்கிரமிப்பது, அலைக்கழிப்பதுதான் இந்த திடீர் புறப்படுதலுக்குக் காரணம்!

இன்னும் சில காலம் இங்கு தங்கினால் தன்னால் இங்கிருந்து கிளம்பவே முடியாது என்று தோன்றியதால், எடுத்த முடிவு!

ஞாயிற்றுக் கிழமையில் படுக்கையில் உருண்டு சுகம் காண்பவர்கள் திங்கள் கிழமை காலை வெடுக்கென்று படுக்கையிலிருந்து தங்களைப் பிடுங்கிக் கொள்ளுவதைப் போல..

பாக்கியின் நினைப்பில் கண்கள் கரந்தன.

அவனுக்குத் தான் பெரியம்மா!

ஊரிலிருந்து அவனுக்கு விதவிதமான பொம்மைகள், உடைகள், படப்புத்தகங்களை அனுப்ப வேணும்.

மறுபடி மனமந்தி நித்தியனுக்குத் தாவியது..!

அவனது உதவிகளுக்கு சம்பிரமமாய் நன்றி தெரிவித்தாயிற்று. தன் பாதி வீட்டையும் சித்ராவிற்கே விட்டுக் கொடுப்பதையும் எழுதிவிட்டாள்... பாசத்தை மட்டும் பங்கு போட்டால் போதும்... தவிர இங்கு வந்தால் சித்ரா வேண்டாமென்று சொல்லி விடுவாள்?

சித்ராவிற்குப் பல உண்மைகள் தெரியவில்லை.. தனக்கு நேத்ரா அக்கா என்பது உட்பட... தங்கள் ஜாதி ஜனத்தின் அதிருப்திக்கு ஆளாகாமல் இருக்க வேண்டி சித்ராவின் சித்தி சித்ராவின் பிறப்பு ரகசியத்தை மூடி மறைத்திருக்க, அப்பாவும் அப்படியே விட்டு விட்டார்... விவரமறிந்த பெண்தான் என்றாலும்...

இவள் சிந்தனையைக் கலைக்க சலங்கை ஒலியுடன் வந்து நின்றாள் சித்ரா...

"என்னம்மா... அறை வெறிச்சோடிக் கிடக்குது?" உணர்வு பெருக்கில் தங்கையைக் கட்டி அணைத்துக் கொண்டாள்-

"நான் ஊருக்குக் கிளம்பறேம்மா..."

பாய்ந்த பாகீயையும் குனிந்து முத்தமிட்டாள்.

"இது உனக்கு என் பரிசு, சித்ரா.... நீ... நீ... என்னை 'அக்கா'ன்னுதான் கூப்பிடணும்..."

"சரிங்க... சரிக்கா... அடடே புடவை...?" புடவையை தன் தோளில் இட்டவள் தீவிரமாய் சொன்னாள்..." ஆனா நீங்க போகக் கூடாதுக்கா..."

"வேலை விஷயமாய் போக வேண்டியிருக்குதே..."

"உடனே திரும்பிடுவீங்களா?"



"அது... அங்கே போனதும்தான் தெரியும்..."

"சின்னவர் என்ன சொன்னார்..."

"இனி... இனிமேல்தான் சொல்லணும்..."

"ஏன்க்கா?"

"அவரிடம் கேட்டுட்டா வந்தேன் - அதே போல கிளம்ப வேண்டியதுதான்..."

அலட்சியமாய் சொல்ல முயன்றாலும் குரல் பிசிறியது.

"எப்படி டவுனுக்கு போவீங்க?"

"மாணிக்கம் டாக்ஸி வரும்... கேப்டன் மூலம் சொல்லி விட்டேன்" என்றவள் காகித உறைக்குள் இட்டிருந்த சங்கிலியை எடுத்து பாகீயின் கழுத்தில் போட்டாள் பளபளத்த ஆபரணத்தை அது உதடு பிதுங்க ஆராய்ந்தது.

"உனக்கு இந்த மோதிரம்..."

"ஐயோ... சித்தி திட்டுவாங்க.."

"நான் தந்ததுன்னால் திட்ட மாட்டாங்க."

"அதெப்படி உங்களை அவங்க பார்த்ததுமில்லையே?"

"பார்க்காட்டி என்ன? விவரம் எல்லாம் தெரியுமே."

அதன் உட்பொருள் புரியாமல், "ஆமாக்கா... உங்களைப் பத்தி தினசரி வீட்டில பேசுவோம்" என்றாள் பேதையாய்.

"அவர் எங்கே?"

"சின்னவர் ஏதோ பார்சலை எதிர்பார்த்திருந்தார் - பட்டணத்திலிருந்தான் அவருக்கு சாயம், திரை, பிரஷ்ஷுன்னு ஏதேதோ வரும்... பார்சல் வந்ததாய் போஸ்ட் மாஸ்டர் தெரிவிச்சதால போயிருக்கார்..."

"அவர் வரவும் இந்தக் கடிதத்தைக் கொடுத்திடு..."

"அவர் வரவும்..."

"சொன்னால் கேளு.." அதட்டியவள், விழித்த தங்கையை இழுத்து அணைத்தாள்.

"மறுபடி நாம பார்ப்போம் சித்ரா.. நீ சென்னை வந்து எங்கூட ரெண்டு மாசமேனும் இருக்கணும்... பாகி அங்கேயே படிக்கலாம்.. என்ன?"

"சீக்கிரம் வந்திடுவீங்கல்ல..?"

"ம்ம்."

வெளியே டாக்ஸியின் உறுமல் கேட்டது. வந்த மாணிக்கத்திடம் பெட்டிகளை ஏற்றச் சொன்னவள் தானும் அங்கிருந்து விரைந்து விலகினாள்.. சற்றேத் தயங்கினாலும் நகர முடியாதபடி தன்னை இருத்திக் கொள்ள அந்த இடத்திற்கு ஏதோ ஒரு சக்தி இருப்பதாய் எண்ணி.. அவசரமாய் காரில் ஏறினாள்..

## 15

"நேத்ரா, என் பின்னலைக் கொஞ்சம் கொண்டையாய் சுற்றி விடேன்" - என்றபடி கொண்டை ஊசிகளோடு வந்து நின்ற தன் தாயை ஆச்சரியமாய் பார்த்தாள் மகள்.

"இன்று ஷூட்டிங் இல்லையாம்மா?"

"சீரியல் தயாரிப்பாளரின் மகளுக்குக் கல்யாணம் - நீயும் வாயேன்." அம்மாவின் குரல் தழைந்திருந்தது போல ஆளும் மாறித்தான் போயிருந்தாள்... கண்களின் அகங்காரமும் மோவாயின் தூக்கலும் தளர்ந்திருந்தன.

கனியூத்திலிருந்து திரும்பிய நேத்ரா நேராய் வீட்டிற்குத்தான் வந்தாள் - அலுவலக அறையை ஒட்டி தங்கக்



கூடியதாய் தனக்கு அறை இருந்தாலும் அவளுக்குத் தாயிடம் அண்டி இருக்க வேண்டும் போலொரு தவிப்பு.

இனி சித்தப்பாவின் விரல் நுனி கூட தன் மேல் படாமல் தன்னால் காத்துக் கொள்ள முடியும் என்ற துணிவும் வந்திருந்தது.

அப்பா இருந்தது அறியாமல் அவரை இழந்தும் விட்டாள்.. தாய் இருந்தும் அவளையும் ஏன் பிரிந்து அனாதையாய் அல்லல் பட வேணும் என்ற பாச ஆங்காரம்..!

வீட்டிற்குள் நுழைந்ததும் எதிர்பட்ட 'டச்சப்' பையனிடம் கேட்டாள் -

"அம்மா.. எங்கே மாது?"

"அடடே.... வாங்கம்மா... அம்மா உங்களைத் தேடி தவிச்சுட்டாங்க."

"ஏன்.. அம்மா உடம்புக்கு ஏதேனும்?" - பதறினாள்.

"அதெல்லாம் இல்லம்மா... வக்கீல் சாரிடமிருந்து உங்க விலாசம் வாங்கி பதிவுத் தபால் அனுப்பினோமே?"

"ஏதும் வரலியே? தபால்காரர் வீடு வந்த போது கையெழுத்திட நான் இல்லைன்னு திரும்பிட்டாரோ..?" தனக்குள் பேசியபடி தாயின் தனியறைப் பக்கமாய் விரைந்தாள்.

"அவரு உள்ளே இருக்காரா?"

"இல்லீங்க.. வீட்டிலேயே இல்லை."

நிம்மதியுடன் அறைக்குள் நுழைந்தவள் அழைத்தாள் -

"அம்மா..."

ஆவலாய் திரும்பிய தாயின் கைகள் நீண்டன.

"வாடீ.. எங்கேப் போன இத்தனை நாளாய்?"

"போக வரன்னு ரெண்டு வாரமாகும்னு சொல்லிட்டுத் தானேம்மா..."

"என்னத்த சொன்ன போ.. சரியான விலாசம், 'பேசி' என தராமல்.."

"அது- அது ஒரு மாதிரியான காடும்மா.."

மகளின் தோளை, தலையை நீவியவள் உற்றுப் பார்த்தாள்.

"என்னாச்சுடி?"

இவளுக்குள் ஏதோ 'குப்' பென உடைப்பெடுத்தது.

"ஒன்னுமில்லையே..?"

"இருக்கு..! முகம் மலர்ந்து, கண்ணுல கூடுதலாய் பிரகாசம்..?"

"காடு இல்லையா..? சுத்தமான காற்று, தண்ணீர் நிறைய பழங்கள் சாப்பிட்டேனே நீங்க வாடித் தெரியறீங்களேம்மா?"

"கொஞ்சம் சறுக்கிடுச்சுடி.."

"எங்கே..?"

"வாழ்க்கையிலே! மாது, நேத்ராக்கு ஜூஸ், பலகாரம் எல்லாம் எடுத்துட்டு வாயேன்.."

"ஷூட்டிங் கிளம்பறேன்டி" என்றபடி அவசரமாய் ஓடும் அம்மா, இன்று மகளின் தேவை அறிந்து, அவளில் ஏற்பட்ட மாற்றம் உணர்ந்து.

மறுபடி தாயைக் கட்டிக் கொண்டவள் கேட்டாள்.

"என்னாச்சம்மா..?"

"அவர் போயாச்சு.. அதான் உன் சித்தப்பா.." - தரையை நோக்கியபடி சொன்னாள்

"போயாச்சுன்னால் எங்கே..?"

"வேறெங்கே - காசிக்கு போற ஆளா? இன்னொருத்திக் கிட்டதான்.." தாய்க்காக அனுதாபம் பெருகினாலும் அதில் நிம்மதியும் இருந்தது.



"கவலைப்படாதீங்கம்மா.. உணர்ந்து.."

"வேண்டாம்டி.. திரும்ப வந்திருவார்னு சொல்லாதே - போகட்டும் - மகள் ஸ்தானத்திலே இருந்த உன்னையே அவர் பார்த்த பார்வை சரியில்லை - அதான் நீ விடுதியில் தங்கிப் படிக்கவும் சம்மதிச்சேன்... பிஞ்சான உன்னையே தனியே விட்டப் பாவம்தான்.."

"எல்லாம் நல்லதுக்குதாம்மா... நான் இங்கேயே இருந்திருந்தால் நடிப்பு, மாடலிங்னு என் பாதையும் திசை திரும்பியிருக்கும்.."

"அந்த வெளிச்சமும் வேஷமும் உனக்கு வேண்டாம்.. அவரு எனக்குத் தாலி கட்டலைன்னாலும், கூட இருந்ததால், மத்த கழுகுங்க எட்டியே நின்னதுங்க... அதுதான் கண்ட ஒரே பலன்! என் நகைகளையும் கூட எடுத்துட்டுப் போயாச்சு.. ஒன்னு தெரியாமா நேத்ரா... விதவிதமாய் நகைகள் வாங்கணும் பூட்டணுங்கற வெறியில தான் நான் நடிக்க வந்தேன்... உங்கப்பாவைப் பிரிஞ்சேன்.. ம்ப்ச்.. இப்ப எல்லாம் போயாச்சு.."

"நான் உங்களுக்கு விதம் விதமாய் செய்து போடறேம்மா.."

"சொன்னதே போதும்டி... இப்பதான் எனக்கு புத்தி வந்திடுச்சே..."

"ஏதோ பதிவுத் தபால் அனுப்பனீங்களாமே? மாது சொன்னான்?"

"இந்தக் கூத்தையெல்லாம் உனக்குத் தெரிவிக்கத்தான்! எனக்குச் சொல்லி அழவும் வேற யாரு இருக்கறாடா? என் 'செல்' நம்பருக்கு நீ ஒரு போன் போட்டிருக்கலாமில்ல. எப்படியிருக்கயோன்ர தவிப்பு வேற.."

ஒப்பனைகள் அற்ற தாயின் முகம் சற்று வாடியிருந்தாலும் அதில் ஏறியிருந்த தாய்மைக் கனிவு மகளை நெகிழ்த்தியது - இறுகக் கட்டி முத்தமிட்டாள்.

"உங்களைப் பார்த்துட்டே இருக்கணும் போல இருக்குதும்மா.."

"இரு! இனி ஒருவரை ஒருவர் பார்த்தபடியே இருப்பாம் - உனக்கு மாப்பிள்ளையை இந்த ஊர்லதான் தேடப் போறேன்.. வேற்றூருக்கு உன்னை அனுப்பறதாயில்லை."

நேத்ராவின் முகம் நொடியில் மாறி சிவந்தது.

"ஏன்டீ... வேறெங்கேயோ போறதாய் முடிவு பண்ணிட்டியா?"

"என்னம்மா.." மழுப்பினாள்.

"உயிரோடு இருக்கும் அம்மாவின் பாசம்தான் இல்லை.. விட்டுட்டுப் போன அப்பாவோட பாசத்தையாவது முகரணும்னு ஓடினே இல்லையா? எப்படியிருக்குது அப்பா வீடு? அங்கே இருந்தவங்கல்லாம் எப்படி.. அவரைப் பற்றி சொன்னாங்களா?"

'ம்ம்..' தலையாட்டினாள்.

அப்பாவின் மற்றும் ஒரு மகளை அங்கே சந்தித்தேன் என்று சொல்வதா வேண்டாமா என்ற குழப்பம்.

"முதல்ல சாப்பிடு... இளைச்சிருக்கே... குளிச்ச பிறகு சாவகாசமாய் பேசுவோம்."

மகள் சாப்பிட அங்கிருந்து பரிமாறினாள்.

பின் வறண்ட கூந்தலுக்கு எண்ணெய் நீவி சிக்கெடுத்தாள்.

இத்தனைக் காலம் கிடைக்காதா என்று ஏங்கிய கனிவான கவனிப்பும், பாசமும்.. இப்போது..

ஆனால் எப்போது கிடைத்தால் என்ன - அதிகம் தவித்தவனுக்குத்தான் தண்ணீர் இனிக்கும்..!

ஓரிரு சீரியல்களில் மட்டுமே நடித்தால் விளக்கு வைக்கும் வேளைக்கு அம்மாவால் வீடு திரும்ப முடிந்தது. நேத்ராவும் ஒத்த நேரத்தில் வீடு வர, இருவரும் சேர்ந்து சாப்பிட முடிந்தது. கடைகளை சேர்ந்து சுற்றினார்கள்.



ஒரே அறையில் தூங்கினார்கள்.

"நிம்மதியாய் இருக்கேன்டீ."

"ம்ம்.."

"ஆனால் நீ நிம்மதியாய் தெரியலியே.. ஏதோ உன்னை அலைக்கழிக்குது.."

"வேலை பற்றிய நினைப்புதாம்மா... வெளிநாட்டு வியாபாரிகள் பலர் வர்ரதால், நகைக் கண்காட்சி, உலகத் தரத்தில் நடக்கணும்.. விளக்கங்களை நான் நேர்த்தியாய் தரணுமே.. அதான்.."

"எட்டாம் தேதிதானே நிகழ்ச்சி? எல்லாம் சிறப்பாய் நடக்கும்.."

"சரிம்மா."

தாயும் மகளும் சேர்ந்திருந்த நேரங்களை அனுபவித்து செலவழித்தனர்.

வீட்டில் வெட்டி வேலைகளுக்கான பந்தா வேலையாட்கள் எல்லாம் நீக்கப்பட்டு விட, வீடு அலட்டலில்லாமல் இருந்தது.

தணிவான பிச்சோடாவாக தாயின் கூந்தலை வளைத்து ஊசிகளைச் செருகியவள்,

"கொண்டை உங்களுக்கு அம்சமாயிருக்குதும்மா... சரி எட்டாம் தேதியும் இப்படி அழகாய் என் நிகழ்ச்சிக்கு வந்திடுங்க.. இசை, மேடை, விருந்து எல்லாம் முதல் தரமாய் அமைஞ்சிருக்குது.." என்றாள்.

"இந்தக் கல்யாணத்துக்காக படப்பிடிப்பு ரெண்டு நாள் ரத்தாயிடுச்சே. ஆக எட்டாம் தேதி எனக்கு முழுநாள் வேலையிருக்கும்.. ரெண்டு, மூணு எபிசோடாவது முடிக்கணுமாம்."

"என்னம்மா இது.."

"என்னை விட முக்கியமான ஆட்கள் எல்லாம் வரப்போறாங்க. என்ன சிறுங்கல்.. படப்பிடிப்பிலேருந்து நேரே அங்க வந்துடறேன் - எங்கே.. 'ஹோட்டல் பல்லவா' தானே?"

"ஆமா நீச்சல் குளத்தருகே மேடை அமைச்சிருக்கோம்.. வெவ்வேறு வகை நிலத்துல எல்லா மாடல்களுக்கும் உடை..."

"என்ன உடை? ஏதோ பேருக்கு அங்கும் இங்குமாய்.."

"என் 'ஷோ' வில நகைகளுக்குதாம்மா முக்கியத்துவம்.. ஆனா நிச்சயம் ஆபாசத்திற்கு இடமிருக்காது.."

"தெளிவான பொண்ணுடி நீ.. ஆனால்.."

"என்னம்மா சந்தேகமாய் இழுக்கறீங்க?"

"சின்னவதான.. உலகம் புரியணும்..." தனக்குத் தானே சொல்லிப் போன தன் தாயை வியப்புடன் பார்த்தாள் நேத்ரா.. தன் வாழ்வில் தான் எத்தனை எத்தனை மாற்றங்கள்.. ஆனால் அதில் சிலவற்றை தன்னால் ஜீரணிக்க முடியவில்லை என்று தவிப்போடு நினைத்தாள்..

## 16

அந்த நவீன ஹோட்டலின் ஜாலம் கூடியிருந்தது. ஏதோ ல நூற்றாண்டுகளுக்கு முன்னான ஒரு ராஜவனத்திற்குள் ழைந்து விட்டது போல அங்கு நுழைந்தவர்களுக்கு.. இன்பத் கைப்பு!

நீச்சல் குளத்தில் நிஜம் போலவே தெரிந்த போலித் ரைகள். அன்னங்கள் அகல் விளக்குகள் மிதந்தன!



பிரம்மாண்டமான தேர் போல உருவான மேடையில் முல்லைக் கொடிகள் படர்ந்திருந்தன.... ஆங்காங்கே தீப்பந்தங்கள், பாவை விளக்குகள்.

நேத்ரா அத்தனை விருந்தினருக்குமே அரியணை அமைப்பில் இருக்கைகள் இட வேண்டுமெனச் சொன்னாலும் நிர்வாகத்தினர் அது வெளிநாட்டினருக்கு அத்தனை வசதியாய் இராது என்று சில சிம்மாசனவகை இருக்கைகளை மட்டும் இட்டிருந்தனர்.

வீணையும் குழலும் இசைந்த இசை அச்சூழலுக்கு கச்சிதமாய் பொருந்தியது.. சந்தன, அகில் மணம் வேறு!

அத்தனையையும் திருப்தியுடன் பார்த்த நேத்ரா, தன் குறிப்புக்களையும் அவ்வப்போது பார்த்து, படித்துக் கொண்டாள். இதில் மேடையேறப் போகும் அனைத்து நகைகளும் அவள் கற்பனையில் உருவானவை.. உயர் நிலையினரின் பாராட்டு கிடைத்து விட்டால், பிறகு அவளை அசைக்க முடியாது..!

மொழி அறிவும், இனிய குரலும் வாய்த்திருந்ததால் நேத்ராவே பேச முடிந்தது.

மேடையின் பின்புற அறையில் மாடல்கள் தங்களை மெருகேற்றிக் கொண்டிருந்தனர்-

"ஜெனி, இந்த வெள்ளிப் பொடியை என் முதுகில் தூவி விடு... மேடையில் நான் ஜொலிக்கணும்"

"யப்பா, சிகை ஊசியைத் தப்பாக் குத்திட்டீங்க போல.. தலை வலிக்குது - சரியாக்குங்கப்பா.."

"இந்த நெற்றிப் பதக்கத்தை நேராய் வைப்பதை விட கோணலாய் வைத்தால் எடுப்பாய் தெரியுதுல்ல?"

ஒருவருக்கொருவர் உதவி, அபிப்ராயம் கேட்டுக் கொண்டார்கள். ஏழு பெண்களே மறுபடி மறுபடியுமாய் வெவ்வேறு நகைகளில் மேடைக்குப் போக வேண்டியதால்,

மேடையில் எத்தனை அமைதியும் அலட்சியமுமான ஒயிலுடன் காட்சி தருகிறார்களோ. அத்தனைக்கு மாறான அவசர பதட்டத்தில் உள்ளே உடை, அணிகலன்களை மாற்ற நேரும்.

நிகழ்ச்சி ஆரம்பமானது.

நேத்ரா அந்தகை அமைப்பின் தொன்மை பற்றிய விளக்கம், அவற்றை எந்த நிகழ்ச்சிகளுக்குப் போட்டால் பொருத்தம், அவற்றின் மதிப்பு எல்லாம் எடுத்துச் சொன்னதும் மேடையின் விளக்கு அமைப்பு மாறி. இசை கசிந்தது.

"ச்சே. இந்த டிரஸ் பத்து வயசுப்பிள்ளைக்குத் தைத்தது போலிருக்குது- உள்ளேப் புகவே முடியலை.." என்று சற்று முன் பல்லைக் கடித்த மாடல்கள் அதே உடையில் உலகமே தங்கள் காலடியில் என்பதான கர்வப் புன்னகையுடன் மேடை வலம் வந்தார்கள்!

மேடையின் தீவிர ஒளியில் ஆபரணங்கள் சந்தோஷமாய் ஜ்வலித்தன.

மூன்றாம் சுற்று முடிந்து உள்ளே உடை மாற்றிய அழகிகள் அதே அவசரத்துடன் பேசினார்கள் -

"ஹப்பா.. என்ன உயரம், ஸ்டைல்!"

"கண்களை கவனிச்சியா, அதைப் பார்த்தால் நாம நடையைக் கோட்டை விட்டுருவோம் போல.."

"சிம்மாசனத்தில் ஆளு உட்கார்ந்திருந்த தோரணை... அப்படியே ராஜாதான்!"

"இவரை இதுவரை சென்னையில் பார்த்ததில்லையே?"

"வெளிநாட்டில் வசிக்கும் நம்மாளோ? யாரையாவது விசாரித்து ஆணழகனைப் பற்றி தெரிஞ்சுக்கணும்.."

"அலையாதப்பா.."

ஆர்வம் தாளாமல் நேத்ரா கேட்டே விட்டாள்.

"யாரைப் பற்றி இத்தனை பேசறீங்க..?"



"மறுபடி பேச மேடைக்குப் போகும் போது நீயே பாரேன்.."

"ஆளை முழுங்கறப் பார்வை... அதிகம் பார்த்தால் உனக்கும் பேச்சு ஓடாது.. திணறும்.. ஆக ஜாக்ரதை."

கிளுகிளுவென சிரித்தார்கள்.

மறுபாதி சுற்றுகளுக்கான விளக்கத்துடன் மேடையில் பேச ஆரம்பித்தவளின் கண்கள் இயல்பாக நடுவிலிருந்த சிம்மாசன இருக்கையில் பட.. உடலின் அத்தனை பாகங்களும் உறைந்தன..!

பல நாட்களாய் மனப்பாடம் பண்ணின அத்தனை வார்த்தைகளும் சிறைப்பட்டு பின் மறந்தே போயின!

உலகளவில் விற்பனை செய்யும் வியாபாரிகளுடன் என்ன பேசினோம் என்பதே புரியாமல் தூக்கத்தில் நடப்பவள் போல வீடு வந்து சேர்ந்தாள்.! கிடைத்த பாராட்டுகளும் கூட அவள் கருத்தில் பதியவில்லை.

வீடு வந்ததும் மரத்துப் போன உடலும் புத்தியும் சற்று பதட்டத்துடன் அவசரம்.. அம்மாவின் கார் நின்றது... ஆக அம்மா வீட்டில்தான்... நிகழ்ச்சியைக் காண அம்மா வரவில்லையே என்ற வருத்தம் கூட இல்லை.

அம்மாவும் குறிப்புணர்ந்து எத்தனையோ துருவிதான் கேட்டார்கள்.

"என்னடீ சதா யோசனை.. வானத்தை வெறிக்கறே.."

"உங்ககூட சந்தோஷமாயிருக்கேம்மா.."

"அது புரியுது.. ஏதோ தவிப்புல இருக்கறாப்பல."

"ம்ஹூம்..." என்று அம்மாவை முத்தமிட்டு சமாதானம் செய்தாகிவிட்டது. ஆனால் இனி மறைக்க முடியாது. யாரிடமாவது சொல்லவில்லையானால் இதயமே வெடித்து விடுவது போல ஒரு வீக்கம்!

மங்கி மறைந்து விடும் என்று அவள் நினைத்த நித்யனின் நினைவுகள் நாளாக ஆக பொங்கிப் பெருகுகிறது! வேலையில் தன்னை எவ்வளவு அமிழ்த்தினாலும், மனதோரமாய் சதா கிள்ளியபடி அவனது எண்ணங்கள்!

பழகிய சில நாட்களுள் இப்படியொரு ஈர்ப்பா? ஏன்?

அவளது ஒருபக்க புத்தி சமாதானம் சொன்னது -

"உன் அப்பாவிடம் நெருக்கமாய் இருந்தவர்... உதவிய நல்லவர்... அதுதான்."

மறுபக்க புத்தி சிலுப்பியது -

"என்ன நல்லவரோ? காட்டுக்குள்ளே ஒரு முரட்டு, முகட்டு வாழ்க்கை ... சிரிக்கக் கூட யோசிச்சாரே மனுஷன்?"

"ஆனால் கண்ணியமாக உதவினார், பாதுகாத்தார் - நீதான் சொல்லாமல் கொள்ளாமல் கிளம்பிட்டே..."

இவளையே குற்றம் சாட்டியது புத்தி!

"அப்படி விலகினதுதான் சரி. இல்லைன்னால் சிக்கலாயிருக்கும்.

'இளைதாக முள்மரம் கொல்க'ன்ரது வள்ளுவரின் அறிவுரை. வளர விட்டுவிட்டால் பிறகு நம்மால் கூட அதை நெருங்கமுடியாது.. முள்மரம் நம்மை நெருக்கிடும்...'

முன்புற அலுவலக அறையில் தன் பொருட்களை வைத்துவிட்டு உள்ளே நுழைந்தவள் திடுக்கிட்டாள்.

சாப்பாட்டறையில் தன் அம்மாவுடன் அமர்ந்திருப்பது... யார்?

சதா அவன் எண்ணங்களுடன் உழல்வதனால் இப்படி எல்லாம் தோன்றுகிறதோ?

அல்லது வேலைப் பளுவினால் மூளை அசந்து இப்படி ரமைகளைக் காட்டுகிறதா?



"வாம்மா நேத்ரா... உன்னைத் தேடி யார் வந்திருக்காப் பார்த்தியா.. நிகழ்ச்சி பிரமாதமாமே.. ஸாரிடா.. வரமுடியலை..."

அம்மா பேசிக் கொண்டே போக, எழுந்து நின்று புன்னகைத்தவனை மேலும் திகைப்புடன் வெறித்தாள்!

## 17

அவள் தனியறையில் சோபாவில் அவர்கள் இருவரும் தனித்திருந்தனர். அவ்வப்போது கிள்ளிப் பார்த்துக் கொண்டாள் நேத்ரா.. வலித்தது... ஆனால் நம்பத்தான் கூடவில்லை!

"அம்மாக்கு உங்களை... நீங்க வர்ரதெல்லாம் எப்டி தெரியும்?"

"களியூத்து போஸ்ட் மாஸ்டர் எனக்குப் பழக்கமானவர் என்பதால் உனக்கு வந்த பதிவுத் தபாலை பிரித்து வாசிச்சேன். நீ திடும்னு கிளம்பிட்டே... உன்னைப் பற்றி ஏதும் தகவல் கிடைக்குமான்ர பதைப்பு எனக்கு.. உங்கம்மா கடிதத்தில் கண்ட எண்ணுக்கு உடனே போன் செய்தேன்.. நீ கிளம்பினது உட்பட மற்ற விபரங்களையும் சொன்னேன்..."

"என்ன.. என்ன மற்ற விவரங்கள்?"

"மனம் சிறந்த வேலைக்காரன் ஆனால் மிக மோசமான எஜமானன் நேத்ரா." காபி கோப்பையை அவன் பிடித்திருந்த நளினத்தை, உறிஞ்சிய நேர்த்தியை விழியெடுக்காமல் பார்த்திருந்தாள். காலி கோப்பையை மேசையில் வைத்துவிட்டு தனக்கு மிக அருகில் வந்த அவன் அமர, முடிந்தவரை தலை குனிந்து கொண்டாள்.

வெடவெடத்த உடலை எப்படி கட்டுப்படுத்த என்பது புரியவில்லை.. இது அவளுக்குப் புது அனுபவம்.

"எனக்கும் இது புது அனுபவம் நேத்ரா... புரியாத உணர்வுகள்.. இப்போது மனம் எஜமானனாய் இருந்து என்னை செலுத்தறதால்..." அரைச்சிரிப்புடன் சொன்னவனின் குரல் குழைந்து கனிந்திருந்தது.

அவள் நிமிரத் துணியவில்லை.

"உன்மேல் ஏற்பட்ட என் நேசத்தை உங்கம்மாவிடம் சொன்னேன்.. அவங்க புரிஞ்சுகிட்டாங்க.. இப்ப முக்கியமான கட்டம்.. அதாவது உன் சம்மதம் கிடைக்கணும்.."

"என் பாதி சொத்தை நான் உங்.. அதாவது சித்ராவுக்குத் தந்துட்டேனே அதை வக்கில் மூலம் கூட சட்ட ரீதியாய்.."

"புரியாதது போல நடிக்காதே நேத்ரா.. நான் பேசுவது நம் வாழ்வைப் பற்றி.. நான்.. அதாவது நீயில்லாமல் என்னால்.. முடியலை.."

துளைத்து விடும் உன்னிப்புடன் தரையையேப் பார்த்திருந்தாள்.

"மனதுக்குப் பிடிச்சதை மூளை பூட்டி வைத்து விடும்னு கேள்விப்பட்டிருக்கேன் நேத்ரா - யாரோ ஒரு அனுபவசாலி சொன்னது.. ஆக உண்மைதான்... என்னால் அந்த பூட்டை உடைக்க முடியலை.. உன்னை வெளியேற்ற முடியலை..."

"அதனால்தான் அங்கிருந்து கிளம்பிட்டேன்.."

"உனக்குள்ளேயும் புரியாத போராட்டங்கள் இருந்திருக்குது.. அதான் என்னிடம் சொல்லாமல் கிளம்பிட்டே.. கடந்த இருபது நாட்களும் எனக்கு நரகம்தான்."

அவளுள் ஏதோ கனிந்தது.. பூவாய் விரிந்தது.

தன் மனதே தனக்கு இப்போதுதான் புரிந்தது போன்ற திகைப்பு!



"உனக்கும் சித்ரா பற்றிய உண்மைகள் தெரிந்தாயிற்று.."

"அம்மாவிடம்."

"எல்லாம் சொல்லிட்டேன்... இனியும் மூடி மறைப்பது சரியில்லை... மறுமுறை சித்ராவை இங்க கூட்டிட்டு வரச் சொன்னாங்க.. சித்ராவிற்கும் முழு விவரமும் சொல்லிட்டேன்.. புரிஞ்சும் புரியாத நெருடலோட இருந்தவள் இப்போ தெளிவாயிட்டா... உனக்குப் பலகாரமெல்லாம் செய்து அனுப்பியிருக்கா என்னைப் பற்றியும் உனக்கு அதிகம் தெரியாதில்லையா... எனக்கு அம்மா இல்லை.."

"ம்ம்.. சொல்லியிருக்கீங்க.."

"அப்பா முப்பது வருஷமாய் ஆந்திராவில் வியாபாரம் செய்தவர்.. நல்ல வசதிகள்... ஆனால் அம்மா இறந்த பிறகு கட்டுப்படுத்த ஆள் இல்லாமல் தறிகெட்டுட்டார். மறுகல்யாணம் செய்திருக்கலாம்... ஆனால் பல ருசி கண்டவருக்கு ஒரே மனைவிக்குக் கட்டுப்பட்டு வாழ மனமில்லை... ஓவியம், சிற்பம்னு ரசனையுள்ள எனக்கு அவரது ரசனைகள் அபாசமாய்.. ஏன் அநியாயமாய் பட்டது.."

புரிகிறது என்பதாய் தலையசைத்தாள்... இப்போது அவனைப் பார்ப்பது சற்று எளிதாகியிருந்தது.

" 'அறிவை உணர்ச்சி

வெல்லுதல் இயல்பு

அறிவால் உணர்ச்சியை

வெல்வது உயர்வு'னு உண்டு. அப்பா உயர்வான மனுஷராய் வேண்டாம். இயல்பானவராய் கூட இல்லை.. கண்ட பெண்களையும் கூட்டி வந்து வீட்டைக் குப்பையாக்கினார். தங்கள் அழகு மூலதனத்தால் அவரை குரங்காய் ஆட்டி வைத்தப் பெண்களைப் பார்த்து வெறுத்து நான் ஒதுங்கின இடம்தான் கனியூத்து.. அப்பவே என் ஓவியங்கள் வெளி

நாட்டில் விற்பனையானது.. மற்ற ஐரோப்பிய ஓவியர்களுடன் எனக்குப் பரிச்சயம் இருந்தது.."

"நீங்க ஓவியரா?"

முறுவலித்தான். அத்தனை மிருதுவான முறுவலை எந்த ஓவியத்திலும் கண்டதில்லை என்று மயக்கமாய் நினைத்தாள்!

" 'திட்டு' என்ற பெயரில் என் படைப்புகள் ஓவியத் துறையில் ஓரளவு பிரபலம். இந்தியாவில் கூட இப்போது ஒரு லட்சம் வரை விலை போக ஆரம்பிச்சாச்சு.."

அவளது புருவங்கள் சுருங்கின.

"இந்திய கலைஞர்கள்னு 'வோக்' பத்திரிகையின் கட்டுரையில் உங்களைப் பற்றி..?"

"ம்ம்.. உன்னைப் பற்றி குறிப்பிட்டிருந்த அதே பக்கத்தில் என் ஓவியத்தையும் பிரசுரித்து குறிப்பு எழுதியிருந்தார்கள். உங்கப்பா அதை ரொம்பப் பெருமையும் காட்டி சந்தோஷப்பட்டார்.."

"என்னை அழைத்து பாராட்டியிருந்தால் நானும் சந்தோஷப்பட்டிருப்பேன்.." - குறைபட்டாள்.

"அவருக்கு காச நோய் முற்றிய நிலை.. பல வருடங்களாய் அவர் தன்னை உதாசீனப்படுத்தின கோபத்தில் அவரை 'சட்'டுனு அழிச்சிருச்சி.. ஏனோ நீங்க சந்திக்க வாய்க்கலை.."

"இதெல்லாம் தெரிந்துமா நான்.. அப்பாவின் சொத்துக்காய் ஆசைப்பட்டு ஓடி வந்ததாய் குற்றம் சாட்டினீங்க?"

"நாடகமாடினேன் தான்.. எங்கப்பாவின் லீலைகளைப் பார்த்த எனக்குப் பெண்கள் மேல் வெறுப்பு... கல்யாணமே கிடையாதுன்னு மனசுக்குள் சபதம் போட்டிருந்தேன்... சித்ரா சந்த என் மனசுக்கு ஆறுதலாய் இருந்தாள்... ஆனால் என்னைச் சுற்றி வந்த வேறு சில பெண்களின் மீதும் எனக்கு ஈடுபாடு வரலை.. மாறாக எரிச்சல்தான்.."



"வித்யாவைச் சொல்றீங்களா?"

"ஆக நான் நினைத்ததை விட உனக்கு அதிகம் தெரிந்திருக்கிறது.."

"நான் ஊரில் நுழைந்ததுமே உங்களைப் பற்றி பயங்கரமாய் சொல்லி.." "வரவேற்றாளாக்கும்? வித்யாவின் அம்மாவுமாய் மகளை என் தலையில் கட்ட முயன்றாங்க.. லட்சக்கணக்கில் சம்பாதிக்கும் வீட்டு மாப்பிள்ளைன்னு. ஆனால் அவங்க வழிமுறைகளால் எனக்கு பெண்கள் மீதான கசப்பு அதிகமாச்சது.."

இவளது மோவாயை தன் இரு விரல்களால் நிமிர்த்தியவன் தொடர்ந்தான்–

"உன்னைப் பார்க்கும் வரை! எதனால்னு புரியலை.. என்னை ஒரு தந்தை போல ஆதரிச்ச சாரின் மகள் என்பதாலா? சிறு வயதிலேயே உன் திறமைகள் கடல் கடந்து பேசப் பட்டதாலா? எனக்கு என் அப்பா என்றால் உனக்கு உன் 'சித்தப்பா'வினால் ஏற்பட்ட துன்பங்களா?

கண்ணியமும் கட்டுப்பாடுமான உன் வாழ்க்கை முறையா?

அல்லது வெறுமே உன் பேரழகா..

எதுன்னு புள்ளி வைக்க முடியலை..! ஆனால் உன்னைப் பார்க்கும் முன்னமே உன்னைச் சந்திக்க எனக்குள் ஒரு தடிப்பு.. டாக்ஸியில் வந்திறங்கிய உன்னை ஜன்னல் வழியே பார்த்ததும் அசந்துட்டேன்.. நேரில் நீ பேரழகாய் இருந்தே. பட்டணத்தில் மட்டுமே மலரக் கூடிய பூவாய் தோன்றினாய்.. உன்னைப் பற்றி நினைப்பது கூட தப்புன்னுதான் உன்னிடம் அத்தனை முரட்டுத்தனமாய் பேசி.. ஒதுக்கினேன்.."

ஏதோ ஒரு அதி மர்மக் கதையைக் கேட்பவளாய் விழிவிரிய பார்த்திருந்தாள்.

"பக்கத்து அறையில் நீ நடப்பது... அசைவது எல்லாம் கேட்டபடி இருந்த என்னால் ஒரு கோடு கூட இழுக்க முடியலை..

ஓவியங்கள் எல்லாம் அர்த்தமில்லாமல் பட்டன... என் பிரம்மசரி சபதத்தை நினைவு படுத்திக் கொண்டு உன் நினைவுகளுடன் நிழல்யுத்தம் செய்தேன்... ஆனால் நாளுக்கு நாள் தோற்றுக் கொண்டிருந்தேன்..."

அவன் துணிந்து அவளை ஏறிட்டாள். நித்யனின் கிறக்க விழிகளில் தெளிவான உண்மை இருந்தது.

"தாள முடியாமல்தான் உன்னை கேரவேனில் கூட்டிக் கொண்டு காட்டிற்குள் போனேன்... உன்னை வெறுப்பேற்ற முயன்றாலும்... நான் உன்னை விரும்புவதைத் தடுக்க முடியலை..சித்ரா வேறு சதா உன்னைப் பற்றியே பேசி இம்சைப் படுத்தினாள்!"

"உங்களையும் சித்ராவையும்... நான் ஒரு சமயம் ந்தேகப்பட்டுட்டேன்.. அதான் கேப்டன் வீட்டிற்குப் போய்..."

"அந்த உன் கோபம் என்னை சந்தோஷப்படுத்தியது த்ரா.. பிரியம் வச்சவங்க மேல்தானே நமக்கு சந்தேகமும் த்திரமும் வரும்..?"

சிவந்த முகத்தை மறைக்க தலை குனிந்தாள்.

"சித்ரா என் தங்கையைப் போல பழகினாள்..."

"ம்ம்.. ஸாரி.."

"சித்ரா உன் தங்கைன்னு அறியும் முன்னரே நீ அவளோடு மாய் பழகின விதம் எனக்குப் பிடிச்சிருந்தது. உன் எளிய ம் எனக்குப் புரிபட ஆரம்பித்தது... ஆனாலும் நீ லாமல் கிளம்பவும்தான் அத்தனையும் தெளிவானது..!"

அவள் முகம் மேலும் சிவந்தது!

எனக்கு இங்கே வேலை இருந்தது... அதான்..."

கிளம்பினது எனக்கு அதிர்ச்சி.. ஆனால் தேவைப்பட்ட ரி ஹிஸ்டீரியா நோயாளிகளை அடிச்சு அடக்கறதுபோல விக்கலுக்கு தர்ர சிறு அதிர்ச்சி வைத்தியம் போல...



எனக்கும் நிஜத்தைப் புரிய வைத்தது. இந்த நிகழ்ச்சி முடியும் மட்டும் உன்னைத் தொந்தரவு செய்ய வேண்டாம்னு தள்ளியிருந்தேன்... நரகத்திலே..."

இத்தனை உணர்ச்சி பெருக்கை சமாளிக்க முடியாது எனப் பேச்சை மாற்றினாள்.

"உங்கள் ஓவியங்களை நான் பார்த்ததில்லை..."

"சென்னை நட்சத்திர ஹோட்டலில் உண்டு.. நாளைக்கே காட்டறேன்... அதற்கு முன் மனது உனக்கு முழுக்கப் புரிஞ்சிடுச்சா?"

ஒரு சிறுவனின் ஆர்வத்துடன் வினவினான்.

"பிறர் அறியாத உங்களின் திறமை கூட எனக்கு மட்டும் தெரியுமளவு."

"அதென்ன?"

"ரொம்பத் திறமையான நடிகர் நீங்க.."

அவளது செல்லக் கோபத்தில் திளைத்தான்.

"ஆனால் அந்த முகமூடியெல்லாம் இனி தேவையே இல்லை... ஆனால் உனக்கு நடிக்கவே வரலை நேத்ரா.. இன்று மேடையிலிருந்து என்னைப் பார்த்ததும் திகைச்சு முழிச்சியே.. வார்த்தைகள் தடுமாறி... மறந்து..."

"ஒத்துக்கறேன்... நான் எங்கம்மா மாதிரி தேர்ந்த நடிகை இல்லையே?

"வேண்டாம்... இனி நமக்கிடையே நடிப்பு, நாடகமெல்லாம் வேண்டாம். இப்ப சொல்லு.. நீயும் என்னை நேசிக்கறேதானே?"

அவளுக்கு வாய் உலர்ந்தது.

"நீ கனியூத்திலே வந்து அடைந்து கிடக்க முடியாது... சென்னை கடற்கரையை ஒட்டி ஒரு பங்களா வாங்கிடலாம்.. என் ஓவியங்களை எங்கேயிருந்தும் வரையலாமே... உங்கப்பா

வீட்டை விஸ்தரிச்சு அதை ஒரு ஆரம்பப் பள்ளியாய் மாத்தலாம்னு நானும் சித்ராவும் யோசிச்சிருக்கோம்."

"பாகீ படிக்க வசதி... பிறகு அவன் இங்க... நம்... வந்துடலாம்."

"நீ எது சொன்னாலும் சரி... இப்ப நம் கல்யாணத்திற்கு சம்மதிச்சால் போதும்.. மம்?" ஒரு களிப்பான கர்வத்துடன் அவளைப் பார்த்தாள்-

"ம்ம்.."

அந்த முனகலில் முக்தி பெற்று விட்டவனாய் அவளைக் கட்டி இறுக்கி உச்சந்தலையில் முத்தமிட்டான்.

புஸ்வாணம் ஒன்றைத் தன்னுள் தலைகீழாய் தொங்க விட்டு பற்ற வைத்தது போலாயிற்று... உச்சியிலிருந்து அவளது உள்ளங்கால் வரை இன்பப் பொறிகள் பொங்கிப் பாய்ந்தன...

பரவசத்துடன் அவனை ஒட்டிக் கொண்டாள் நேத்ரா.